

ஆழ்வார்களும் நாயன்மார்களும்

ஜய ஸ்ரீ வெளியீடு

நீலாம்பாள் சுப்ரமணியம்

ஆழ்வார்களும்

நாயன்மார்களும்

தொகுப்பாசிரியர்:

நீலாம்பாள் சுப்பிரமணியம்

ஜெயஸ்ரீ அன்ட் கம்பெனி

15, கேசவபெருமாள்புரம்

கிரீன்வேஸ் ரோட், சென்னை-28.

முதற் பதிப்பு: டிஸம்பர் 1966.

விலை ரூ. 4—00

ஹோ அண்டு கம்பெனி, சென்னை-1

4-2

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீமடம்
காஞ்சீபுரம்

முகாம் : காட்டுப்பள்ளி
சென்னை-57

29-9-1965

சைவ வைணவ சமரஸத்திற்கு ஒரு ஸாதனமாகத் திருப்பாவை, திருவெம்பாவை ஸதஸ்களும் மஹாநாடுகளும் ஒவ்வொரு வருஷமும் வெகு விமர்சையாகப் பல இடங்களில் கொண்டாடப்பட்டு மக்கள் மனதில் சமய பக்தியையும் நல்லுறவையும் வளர்த்து வருவது பிரஸித்தம். இந்த முயற்சிக்கு மேலும் உதவி செய்யும் முறையில், மனதில் நன்றாகப் பதியும் வகையில், பல்வேறு காலத்தில் அருளிச் செய்யப்பட்டதாக இருந்தாலும் ஒத்த கருத்துக்கள், ஏறத்தாழ ஒரே வாக்யங்கள் அமைந்துள்ள ஆழ்வார்களின் பாசுரங்களையும், சைவ சமயாசாரியர்களின் தேவாரங்களையும் ஒரு ஆஸ்திகர் பக்தி சிரத்தையுடன் தொகுத்து, ஒரு புத்தகம் ஏற்கனவே வெளியிட்டு, இப்பொழுது மேலும் 201 பாடல்களைத் திரட்டித் தந்துள்ளார்.

இப்பெரிய கைங்கரியத்தைச் செய்துள்ளவர், சேலத்தில் பிரபல வக்கீலும் பொதுநலத் தொண்டரும், பெரிய தர்மிஷ்டரும், சிறந்த கல்விமானுமாகிய ஸ்ரீமான் R. சுப்பிரமணிய முதலியாரவர்களின் தர்ம பத்தினியார் ஸ்ரீமதி நீலாம்பிகை அம்மையார் ஆவார். தமது பெரிய குடும்பப் பொறுப்புகளோடு இப்படிச் சைவ வைணவ சமரஸப் பாடல்களையும் தொகுத்துத் தந்தமைக்குத் தமிழ்நாடு கடமைப்பட்டிருக்கிறது.

இந்தப் பொக்கிஷமான புஸ்தகத்தை வெளியிடும் நன் முயற்சியால் மாணவ மாணவியர் உள்ளத்தில் சஹோதரபாவம் வளர்வதாகுக. அன்பர்கள் இவ்வுயர்ந்த நூலைப் படித்து சமரச மனப்பான்மையை வளர்த்துக்கொண்டு பரம்பொருளை வழிபட்டுப் பயனடைவார்களாகுக.

—நாராயணஸ்ம்ருதி.

பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ காஞ்சி P. B. அண்ணங்கராசாரிய ஸ்வாமிகளின்

மதிப்புரை

புண்ணியங்களைத் திரட்டும் வழி தேடுதலும், பாவங்களைப் போக்கும் வழி தேடுதலும் ஆகிய இவை இரண்டுமே மண்ணுலகிற் பிறவியெய்தும் மக்களுக்குரியன. நல்வினை தீவினைகளை இல்லை செய்யும் நாத்திகர் வகுப்பிலே நாம் பிறந்திலோம். பரம் பொருளான கடவுளைக் காதலித்து வழிபட்டு உய்யும் வழியை நாடும் நல்லோர் திரளிலே பிறவி பெறுந் தனை புண்ணியம் யாமுடையோம். கடவுளின் வழி-பாடுகள் பல திறத்தன. கோவில்களிற் சென்று சாந்தொடு விளக்கம் தூபம் தூய நன்னறு மலர்கள் தூவி-யேத்துதல் முதலிய பல பல வழிபாடுமுறைகள் உள்ளன. இவற்றுள் பத்திப் பெருங்காதல் பேசுவிக்கப் பேசின முன்னோர்களின் பாடல்களை வாயினுற் பாடி மனத்தினுற் சிந்திப்பது மிகச் சிறந்த வழிபாட்டு முறையாம்.

''வணங்குந் துறைகள் பலபலவாக்கி, மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பலபலவாக்கி, அவையவை தோறும் அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பி வைத்தாய்'' என்ற நம்மாழ்வார் பாசுரத்தின் படி நோக்குமவர்க்கு எந்தச் சமயத்திலும் எந்தத் தெய்வத்தினிடத்திலும் பகைமை தோன்றக் காரணமில்லை. ''தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே புக்கன்றிப் புறம் நிற்க மாட்டாத'' என்ற குலசேகராழ்வார் பாடலின்படி சகல நதிகளும்

கடலிற் சென்று சேர்வதுபோல, சகல வழிபாடுகளும் பரந்தாமனிடத்தே சென்று சேருமென்பதில் ஐயமில்லை பகவத்கீதையின் முழு நோக்கான பொருளைத் திருவாய்-மொழியில் நம்மாழ்வார் ''இறுக்குமிறையிறுத்துண்ண எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி நிறுத்தினான் தெய்வங் களாக அத்தெய்வநாயகன்தானே'' என்கிற பாசுரத்தில் பொறித்தருளினர். வைணவர், சைவநூல்களைக் காண வும், சைவர் வைணவ நூல்களைக் காணவும், வெறுப்புக் கொள்வது பேதமையேயாகும். ஆழ்வார் களின் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களையும், நாயன்மார் களின் தேவாரத் திருமுறைகளையும் சமரச மனப்பான்மையுடன் ஒருங்கே அனுபவிக்குமவர்கள் பெரும் பாக்கியம் பெற்றவர்கள், பெருந்தவம் புரிந்தவர்கள் என்னத் தட்டில்லை. அவரவர்கள் தத்தம் தெய்வத்தினிடத்து வைத்துள்ள பத்திப் பெருங்காதலுக்கு இதனால் எவ்விதமான இடையூறும் நேராது.

வழிபடும் தெய்வம் வேறாயினும் வழிபாட்டின் வகைகளும் துதிமொழிகளின் தூயநெறியும் பெரும் பாலும் ஒத்திருக்குமாற்றைக் கண்டு உள் குழையப் பெறுவது தனிப்பட்ட பாக்கியமேயாம். இத்தகைய அனுபவத்தில் ஆங்காங்குப் பல பத்தர்கள் ஆழ்ந் திருக்கக் கூடுமெனினும் இப்போது நம்முடைய ஆராய்ச்சிக்கு எட்டியதொன்றைப் பற்றி நாம் பேரானந் தத்துடன் சில வெழுத விழைகின்றோம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் என்ற இந்நூலை சேலத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி நீலாம்பிகை அம்மையார் எழுதியுள்ளார்கள்.

இந்நூலைப் பலவிடங்களில் படித்து மகிழ்ந்தேன். முன்னம் ஆழ்வார்களின் சிற்சில பாசுரங்களைத் தொகுத்தெழுதி அவற்றுக்கு நேர் நேராகத் தேவாரத்

திருமுறைச் செய்யுள்களைக் காட்டியிருப்பதை ஆழ்ந்து நோக்கினேன். தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் ''பேசிற்றே பேசலல்லால் பெருமையொன்றுணரலாகாது'' என்றருளிச்செய்த பாசுரமே நினைவுக்கு வந்தது. எடுத்துக் காட்டியுள்ள செய்யுட்களில் பலவிடங்களில் கருத்தொற்றுமையும், சிலவிடங்களில் சொல்லொற்றுமையும், காணநிற்பதனுல் எது முந்தியது? எது பிந்தியது? என்று விமர்சனம் செய்யத் தோன்றும்; ஆனுல், இது அவசியமற்ற விமர்சனமேயாகும். பத்தர்களின் மனப்பான்மையின் ஒற்றுமையே மேலே சொன்ன ஒற்றுமைகட்குக் காரணமென்பதை உண்மைப் பத்தர்களின் உள்ளமுணரும். ஆகவே, அத்தகைய வீண் விசாரத்தில் நெஞ்சைச் செலுத்தாது இந்நூல் தொகுப்பின் சுவையினை மட்டும் சுவைப்பது நன்று.

இந்நூல் தொகுக்கப்பெற்றிருக்கும் முறை உண்மையில் மிக வியக்கத்தக்கது. ஆழ்வார்களின் பாசுரங்களிலும் நாயன்மார் பாடல்களிலும் நிரந்தர சிந்தனை யிருந்தாலொழிய இத்தகைய தொகுப்பு இயலாது. ஆதலால், இதனை யாம் மிகமிக மெச்சுகின்றேம். இத்தகைய தொண்டு மேன்மேலும் வெளிவரவேண்டும். சமரசப் பான்மை சகமெங்கும் பரவ வேண்டும்.

இங்ஙனம்

ஸ்ரீ காஞ்சி P. B. அண்ணங்கராசாரிய ஸ்வாமிகள்
ஜகதாசார்ய சிம்மாசனுதிபதி
12-11-1965

அணிந்துரை

திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்.,
ஆணையாளர்,
இந்துமத அறநிலைய ஆட்சித்துறை, சென்னை

சைவம், வைணவம் என்னும் இருபெருஞ் சமயங்களும் தமிழ் நாட்டில் மிகவும் சிறப்புடன் போற்றப் பட்டு வருவன ஆகும். "ஓர் ஆவிற்கு இருகோடு பூத்தாற் போலே" இவ்விரு பெருஞ் சமயங்களும் தமிழகத்தில் தோன்றுதொட்டே இணைந்து இயைந்து நிலவி வரு கின்றன. தமிழ் மக்களுக்கு வழிகாட்டி உய்வித்து வருதலால், இவற்றைத் தமிழ்நாட்டின் இரண்டு கண்கள் என்று பாராட்டிப் போற்றலாம்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆகிய பெரு மக்கள் அருளிச்செய்த தெய்வீக நலம் பொதிந்த திவ்வியப் பிரபந்தம், தேவார திருவாசகத் திருமுறைகள் ஆகிய திருவருட் பாடல்கள், அழியாத அரும்பெருங் கலைச்செல்வக் களஞ்சியங்கள்! அத்தெய்வீகப் பாடல் களின் வாயிலாக, ஆழ்வார்கள்-நாயன்மார்கள் ஆகிய சான்றோர்களின் அருளனுபவங்களையும் அறிவுரை களையும் நாம் அனைவரும் அறிந்துகொண்டு அளப்பரிய நலங்களை அடையலாம்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆண்டவனின் அருளைப்பெற்று, அவ்வருள் அனுபவத்தில் ஆழ்ந்து நயந்து திளைத்து இன்புற்றவர்கள். "பெரிய உள்ளங்கள் ஒரேவகை உணர்வை உடையனவாகவே பிறக்கும்" (Great

minds think alike) என்பதற்கு ஏற்ப, அப்பெருமக்களின் திருப்பாடல்களில், நாம் பல சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள் ஆகியவற்றின் ஒப்புவமையினைக்கண்டு வியக்கின்றோம். அங்ஙனமே அவர்களின் அரிய பெரிய அறிவுரைகளும் அருளனுபவங்களும் மிகவும் இணைந்து இயைந்து காணப்படுகின்றன.

ஆண்டாளின் திருப்பாவையும், மணிவாசகரின் திருவெம்பாவையும் எத்துணை ஒப்புவமையுடையன என்பதை யாவரும் அறிவர். 'தாண்டக வேந்தர்' எனப் பெறும் திருநாவுக்கரசரைப் போலவே திருமங்கையாழ்வாரும் திருக்குறுந்தாண்டகங்கள், திருநெடுந்தாண்டகங்கள் அருளிச் செய்திருத்தல் காணலாம். சைவத் திருமுறைகளில் உள்ள திருப்பல்லாண்டு போல, திவ்வியப் பிரபந்தத்திலும், பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு உள்ளது! மணிவாசகர் பாடிய திருப்பள்ளி எழுச்சி போலவே, தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் ஒரு திருப் பள்ளி எழுச்சி பாடியிருக்கின்றார்! திருஞானசம்பந்தர் பாடிய திருவெழுகூற்றிருக்கையைப் போலவே, திருமங்கையாழ்வாரும் திருவெழுகூற்றிருக்கை என்னும் சித்திர கவியினைச் சிறந்த முறையில் அருளிச் செய்துள்ளார்!

இந்நூலாசிரியர் திருமதி நீலாம்பிகை அம்மையார் அவர்கள், இத்தகைய பற்பல ஒப்புவமைப் பகுதிகளையெல்லாம் ஒருங்கே தொகுத்துத் திரட்டி, இந்நூலின் வாயிலாக நமக்குத் தந்து இன்புறுத்துகின்றார்! 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற சிறந்த நோக்கத்துடன் இந்நூலைப் பெரிதும் உழைத்துத் தொகுத்தளித்துள்ள ஆசிரியரின் தொண்டும் புலமையும் பெரிதும் பாராட்டுதற்கு உரியன. இலக்கியச் சுவைக்காகவும், பக்திச் சுவைக்காகவும் ஆராய்ச்சிச் சுவைக்காகவும் இந்நூலை அனைவரும் படித்துப் பயின்று பயன் பெறலாம்.

திருவருள் நலம் நிரம்பித் திகழும் இத்தெய்வீகப் பாடல்கள் நவில்தொறும் நன்னயம் நல்குகின்றன. பயில்தொறும் நம்மைப் பரவசப்படுத்தி மகிழ்விக்கின்றன. அறிவுக்கொரு விருந்தாய் நம் அல்லல்களுக்குப் பெருமருந்தாய்ப் பிறங்குகின்றன. இவற்றை ஓதுதலால் நம் உள்ளம் தூய்மையுற்று ஒளி பெறுகின்றது. தீவினைகள் தேய்ந்து சிதைந்து அகலுகின்றன. இவற்றின் அரிய பெரிய பொருள் நலங்களை உன்னியுன்னி உணருந்தொறும், நாம் வியப்பும் விம்மிதமும் அடைகின்றோம்!

சமயக் காழ்ப்பினை வெறுத்துச் சமய சமரச மனப்பான்மையினைப் பெரிதும் விரும்பிய சான்றோர் ஒருவர் ''மனிதர்கள் ஒருவரை ஒருவர் வெறுத்துக் கொள்ளச் செய்ய போதிய சமயங்கள் இருக்கின்றன. ஆனால், ஒருவரை ஒருவர் விரும்புமாறு செய்யப் போதுமான சமயங்கள்தான் இல்லை'' ("Men have enough religion to hate one another but not enough religion to love one another"—*Dr. Jonathan Swift*) எனக் குறிப்பிட்டருளினர். அஃது எங்ஙனமாயினும் நூலாசிரியரின் இத்தொகுப்பு நூல், நம்மிடையே சைவ வைணவ சமரச மனப்பான்மை தழைத்தோங்கச் செய்தற்குப் பெரிதும் துணைபுரியும் என நம்புகிறேன். நூலாசிரியரின் தொண்டும் புலமையும் வெல்க! வாழ்க! வளர்க! என இறைவனை இறைஞ்சுகின்றேன்.

20–9–1963. மா. சே. சாரங்கபாணி

———

முன்னுரை

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற அரிய வாக்கு நம் நாட்டில் குழந்தைப் பருவத்திலேயே போதிக்கப்படுகிறது. பொதுவாக எத் தந்தையும், எத் தாயும் தம்மக்கள் அறிவாலும் செல்வத்தாலும் பேராலும் புகழாலும் சிறந்து விளங்க வேண்டுமென மிக விரும்பியே மிக்க அன்புடனும் ஆதரவுடனும் தம் மக்கட் செல்வங்களைப் போற்றி வளர்க்கின்றனர். மேற்சொன்ன எல்லா தன்மைகளுடன் கூடிய தாய் தந்தையரையே, ஆன்மீகத் துறைக்கும் குரவராக அடையப் பெற்ற பாக்கியம் அவர்களுடைய மக்களாகிய எங்களுக்கு உண்டு.

இந்து சமுதாயத்தில் நமக்குக் குடும்பமே ஒரு ஸ்தாபனமாகவும் பெற்றோர்களே நற்குரவர்களாகவும் அமைவது பேரதிசயமில்லை. ஆயினும், வாழ்க்கையில் மனிதன் விரும்பக்கூடிய சகல சௌபாக்கியங்களைப் பெற்றிருந்தும் சம்சாரத் தளைகளைத் தாமே நீக்கிக் கொண்டு வானப்ரஸ்த ஆஸ்ரமத்தையும் மேற்கொண்டு இப்போது ஒரு முற்றும் துறந்த முனிவரைப்போல சேலத்தில் வாழ்ந்து வருபவராகிய என் அன்பு மிக்க தந்தையாராகிய ஸ்ரீமான் ஆர். சுப்பிரமணிய முதலியார் அவர்களும், உடல்நலம் குன்றி ஹிருதய நோயினால் எப்போதும் அவதிப்பட்டாலும் "நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்" என்றபடி சதா தெய்வசிந்தனையுடன், பெரும் குடும்பம் நடத்தியவாறு தன் மனத்தை மட்டிலும் இறைவனிடமே வழுவாது செலுத்திவரும் என் அருமைத்

தாயாராகிய திருமதி நீலாம்பிகை அம்மையாரும் மிகவும் அபூர்வமாகவே காணக்கிடைக்கக்கூடிய தம்பதிகள் என்ருல் மிகையாகாது என்பதை அவர் களை நேரில் கண்டு பழகிய அன்பர்கள் அறிவார்கள்.

பெரிய குடும்பத்தின் தலைவியாகப் பொறுப் பேற்றுச் சிறப்புறத் தமது கடமைகளைச் செய்து வந்த எனது தாயார் ஆரம்ப காலத்திலிருந்தே தெய்வ சிந்தனை மீதூரத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய தெய்வப் பாடல்களை ஏராள மாக மனனம் செய்தும், பாராயணம் செய்தும் வரும் பழக்கமுடையவர்கள். தாயுமானவர், பட்டி னத்தார், இராமலிங்க வள்ளலார் மற்றுமுள்ள அடியார்களுடைய தெய்வத் தீந்தமிழ்ப் பாடல்கள் அவருக்கு நூற்றுக்கணக்கில் மனப்பாடம். பண்டிதர் களும் பேச்சாளர்களும் அவர்களுடைய புலமையைக் கண்டு வியப்பர். உடல் நைந்திருந்தாலும் ஆன்மீக விஷயங்களைப் பற்றிப் பேசக் கூடிய அன்பர்கள் வந்துவிட்டால் மெய்ம்மறந்து உரையாடி விட்டுப் பின்னர் உடல் நோயை அனுபவிப்பர். இராமகிருஷ்ணர் விவேகானந்தர் உபதேசங்களும் நிறையப் படித் துள்ளார்கள். ஆங்கிலத்திலும் ஓரளவு ஞானம் உண்டு.

முதன் முதலில் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசார்ய சுவாமிகள் திருப்பாவை-திருவெம்பாவை மகாநாடுகள் எங்கும் நடத்தப்பெற வேண்டும் என்று பணித்தபோது, எனது தாயார் முதன் முதலில் திருப்பாவையில் தொடங்கிப்பின் திவ்யப் பிரபந்தத்தை ஆராயப்புகுந்தனர். ஆழ்வார்களின் ப்ரபந்த சாரத்தில் மூழ்க மூழ்க அவர்களுடைய தீவிரமான பக்தியையும் மனவெழுச்சியையும் கண்டு அதில் லயித்தனர். மேலும், ஆழ்வார்களின் பாடலைப்

படித்துக் கொண்டிருக்கும்போதே அதே கருத்தில் உள்ள தேவாரம் அவருடைய கருத்தில் தோன்றி அவரை அதிசயத்தில் ஆழ்த்தும். இப்படி எத்தனைப் பாடல்கள் கருத்தொற்றுமையுடன் இருக்குமோ என்று வியந்தவண்ணம் குறிப்பெடுக்கலானார். அவையே சுமார் இருநூறு ஒப்புவமைப் பாடல்களாக இப்புத்தக வடிவில் கொண்டு வருவதற்கு ஏதுவாயிற்று.

ஏற்கனவே பெரிதும் சமரஸ நோக்குடைய அவர்கள், இறைவனின் மெய்யடியார்கள் வைணவ ராயினும் சைவராயினும், கருத்திலும், ஏன் அநேக இடங்களில் வாக்கிலும்கூட இத்துணை ஒற்றுமையை வெளிப்படுத்தியிருப்பதைக் கண்டு, அதை எல்லோரும் அறிந்து பயனடைய வேண்டுமென்று விரும்பி இந் நூலை ஒரு ஒழுங்குபடுத்தி அமைத்துக் கொடுத்தனர். சைவக் குடியில் பிறந்த அவர், வைணவ நூலை முதலிற் குறித்து அதற்கு ஈடான சைவப் பாடல் களைத் தொகுத்திருப்பது மிகவும் வியத்தற் குரியது.

மனிதர்கள் தம் சிறுமையினால் வேற்றுமைகளைப் பெருக்கிக்கொண்டு அல்லற்படுகின்றனரே தவிர பெரி யோர்கள் எப்பொழுதும் பேதத்தைத் கடந்து முழுமை யைக் காணவே விழைந்தனர் என்பதை இந்நூல் தொகுப்பின் மூலம் அவர் வற்புறுத்திக் கூறுகின்றார்.

''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து'' என்று திருமங்கை ஆழ்வார் சிவனைத் துதிக்க ''அரிய லாற்றேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே'' என்று திருமாலைத் திருநாவுக்கரசர் போற்றுகிறார். ''செந் நிறத்த தமிழோசை வடசொல்லாகி'' என்று ஆழ் வாரும் ''வடமொழியும் தென்தமிழும்'' என்று நாயன்மாரும் மொழிப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி

வைத்து உதார நோக்குடன் இருமொழியின் செழிப்மை வரவேற்கின்றனர். தனது இஷ்டதெய்வம் மூர்த்தி எதுவாயினும் பக்தியின் உன்னத நிலையை அடையும் போது உலகைப் புரக்கும்பொருட்டு மும்மூர்த்திகளாகத் தோன்றும் இறைவன் முடிவில் ஒரே உருவுடையவனுகிருன் என்ற தத்துவத்தைக் கண்ட ஆழ்வாரும் நாயன்மாரும் ''மூவுருவம் கண்டபோது ஒன்ரும் சோதி'' என்றும் ''ஒருருவே மூவுருவமான நாளோ'' என்றும் பாடிப் பரவுகின்றனர்.

இத்தகைய ஒற்றுமைக் கருத்துக்களை நிறைய இந்நூலிற் கண்டு அன்பர்கள் அனுபவிக்கலாம்.

நிற்க, இந்நூல் தொகுக்கப்பெற்ற வரலாற்றைக் கேட்டு இன்புற்று மிகுந்த கருணையன்புடன் புத்தகத்தைப் பரிசிலித்து மகிழ்ந்து ஒரு ஆசியுரையும் அளித்திருக்கும் காஞ்சி ஆசார்ய சுவாமிகள் திருவடிகளுக்கு எங்கள் அனவரது மனமார்ந்த வணக்கங்கள். பெரியவர்களுடைய ஆசியுடன் ஆரம்பித்த திருப்பாவை, திருவெம்பாவைக் கூட்டங்கள் போல இத்தொகுப்பும் சமரச மனப்பான்மையை வளர்க்க அவர்கள் அனுக்ரஹிப்பார்களாக.

சைவ வைணவ நூலாக அமைந்துள்ள இத்தொகுதிக்கு வைணவப் பெரியாரும் கல்விக்கடலுமாகிய ஸ்ரீ ஜகத் ஆசார்ய பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசார்ய சுவாமிகளை, அவரது ஆசியும் மதிப்புரையும் வேண்டுமென அணுகிய போது அவர்களும் அளவிலாத கருணையுடன் இம் முயற்சியைப் போற்றி மிக அழகான மதிப்புரை கொடுத்திருக்கிருர்கள். அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

இந்நூல் ஆசிரியரை நன்கு அறிந்தவரும் இத் தகைய தொண்டில் பற்று மிகுந்தவருமான அற நிலையப் பாதுகாவலரான ஸ்ரீ எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் மூன்றுண்டுகளுக்கு முன்பே ஒரு அழகிய அணிந்துரை தந்துதவியமைக்கு அவர்களுக்கு எங்கள் நன்றி. புலவர் N. R. முருகவேள் அவர்கள் அரும்பதவுரையைத் தொகுத்துக் கொடுத்துள்ளார். இந்நூலினை ஆர்வத்துடன் அழகுற அச்சிட்டு உதவியவர் புகழ்பெற்ற ஹோா அண்ட் கம்பெனி பிரிமியர் அச்சகத்தினர். இந்நூல் அச்சாகும் காலத்து உடனிருந்து அச்சுத்தாள்களை ஒப்பு நோக்கிச் செம்மை யாகத் திருத்தி யுதவியவர் புலவர் தணிகை உலகநாதன் அவர்கள். இம்மூவருக்கும் எம் உளம் கனிந்த நன்றி.

தமிழகம் இந்த அருள் நூலை வரவேற்று ஆதரிக்கும் என நம்புகின்றோம்.

சென்னை,
21–12–1966.

எஸ். ஜெயலக்ஷ்மி



கருடாழ்வார்




அதிகார நந்தி



சேலம் வக்கீல் உயர்திரு. R. சுப்பிரமணிய முதலியார், B.A.,B.L.



திருமதி நீலாம்பாள் சுப்பிரமணியம்



தொகுப்பாசிரியர்

திருமதி நீலாம்பாள் சுப்பிரமணியம்

பதிப்புரை

சாம்ராஜ்யங்கள் மாறி ஒவ்வொரு நாடும் தத்தம் அரசியலைத் தாமே வகிக்கும் காலம் இது ; போகப் போக எல்லா நாடுகளிலுமே ஜனநாயக ஆட்சியே அமையும். இது மனித சமுதாயத்திலேயே பெரிய புரட்சியாகும். இந்த வாழ்வியல் முன்னேற்றத்தில் சமயத் துறை பின்தங்கிவிட்டால் மனித குலமே குறிக்கோள் இலாது கெட்டுவிடும். இவ்வுலக வாழ்வுக்கு அப்பாற்பட்டதாக அருள் உலகம் உண்டு என்றும், அவ்வருள் பெறச் சமயநெறியே சிறந்தது என்றும், அச்சமயங்களின் அடிப்படையில் வேறுபாடு இல்லை என்றும் தெளிந்து வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்குச் சமய சமரச மனப்பான்மை இன்றியமையாதது. எனவே, இன்றைய உலகிற்கு இச் சைவவைணவ சமரச நூல் பெரிதும் பயன்படும் என்றும், இளைஞர் உள்ளத்தில் இந்நூலின் கண் அமைந்துள்ள பாடல்கள் பக்தியை வளர்ப்பதுடன் உள்ளத்தையும் உயர்த்தும் என்றும் நம்புகிறேன்.

இப்புத்தகம் இவ்வழகிய வடிவில் வெளிவருவதற்கு பெரிதும் உதவிய, ஹோ அன்ட் கம்பெனி காரியதரிசி உயர்திரு M. S. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு எனது நன்றி.

இசைப் பேரரசி மட்டுமன்றி இலக்கியத் துறையிலும் சிறந்து விளங்கும் ஸ்ரீமதி சேலம் S. ஜெயலக்ஷ்மி, ஆண்டில் இளையராயினும் ஆன்மீக வளர்ச்சியில் அவ்வாறில்லை என்பதை நன்குணர்ந்திருக்கும் காரணத்தால் அவரைச்

''சிறிய பெருந்தகையார்'' என்றே நான் குறிப்பிட விரும்புகிறேன் ; அவரது முழு முயற்சியே இந்நூலாகும். அவருக்கும், இந்நூலைத் தொகுத்துள்ள அவரது தாயாருக்கும், நல்லவற்றையெல்லாம் கனிந்த உள்ளத்துடன் ஊக்கிவரும் அவரது தந்தையாருக்கும் தமிழுலகம் கடப்பாடுடையதுஎன்பது யான் சொல்லத் தேவையில்லையன்றே !

ஜெயஸ்ரீ அன்ட் கம்பெனி
சென்னை - 28
21–12–1966

ச. சிவகுமாரன்



பெரியாழ்வார்



திருநாவுக்கரசர்

திருவதரியாச்சிரமம்

1. 'பிணிஒழித்து அமரர் பெருவிசும்பு அருளும் பேரருளாளன்"

துணிவுஇனி உனக்குச் சொல்லுவன் மனமே
தொழுதுஎழு தொண்டர்கள் தமக்குப்
பிணிஒழித்து அமரர் பெருவிசும்பு அருளும்
பேர்அரு ளாளன்எம் பெருமான்
அணிமலர்க் குழலார் அரம்பையர் துகிலும்
ஆரமும் வாரிவந்து அணிநீர்
மணிகொழித்து இழிந்த கங்கையின் கரைமேல்
வதரிஆச் சிரமத்து உள்ளானே.

—திருமங்கையாழ்வார்.

துணிவு—உறுதி. எழு—புறப்படு. விசும்பு—ஆகாயம்.
துகில்—ஆடை. ஆரம்—மாலை.

நைமிசாரணியம்

2. 'காலனார் தமரால் படுவதோர் கொடுமிறைக்கு அஞ்சி வந்து உன் திருவடி அடைந்தேன்'

இடும்பையால் அடர்ப்புண்டு இடுமினோ துற்றுஎன்று
இரந்தவர்க்கு இல்லையே என்று
நெடுஞ்சொலால் மறுத்த நீசனேன் அந்தோ
நினைக்கிலேன் வினைப்பயன் தன்னைக்
கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால்
படுவதோர் கொடுமிறைக்கு அஞ்சி
நடுங்கிநான் வந்துஉன் திருவடி அடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்.

—திருமங்கையாழ்வார்.

இடும்பை—துன்பம். அடர்ப்புண்டு—நெருக்கப்பட்டு.
துற்று—உணவு. காலனார்தமர்—எமதூதர்கள். கொடு
மிறை—கொடிய தண்டனை.

திருச்சேறை

1. 'பிறப்பு மூப்பு பெரும்பசி வான்பிணி இறப்பு நீங்கி இன்பம்'

பிறப்பு மூப்பு பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கிஇங்கு இன்பம்வந்து எய்திடும்;
சிறப்பர் சேறையுள் செந்நெறி யான்கழல்
மறப்பது இன்றி மனத்தினுள் வைக்கவே.

—திருநாவுக்கரசர்.

மூப்பு—முதுமை. வான்பிணி—கொடிய நோய்கள்.
சிறப்பர்—சிறந்த பண்புடையோர் வாழ்கின்ற.

திருப்புன்கூர்

2. 'நமன்தமர் நலியிலிவன் மற்று என் அடியான் எனவிலக்கும் சிந்தையால் வந்து உன் திருவடி அடைந்தேன்'

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயிர் அதனை
வவ்வி னாய்க்குஉன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை, நீஎனை நமன்தமர் நலியில்
இவன்மற்று என்னடி யான்என விலக்கும்
சிந்தை யால்வந்துஉன் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் திருப்புன்கூர் உளானே.

—சுந்தரர்.

அந்தணாளன்-மார்க்கண்டேயன். வவ்வினாய்-கவர்ந்தாய்.
வண்மை—வள்ளல்தன்மை. நலியில்—துன்புறுத்தினால்.
விலக்கும்—தடுப்பாய். சிந்தையால்—எண்ணத்தினால்.

திருவேங்கடம்

3. 'தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள் செய்துவிட்டேன்'

தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துவிட்டேன்
பெரியேன் ஆயினபின் பிறர்க்கே உழைத்து
ஏழையானேன்
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா
அரியே வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே.

—திருமங்கையாழ்வார்.

கரி—யானை. கனம்—பெரிய. அரி—திருமால்.

திருவேங்கடம்

4. 'திருவேங்கடம் மேய என்ஆனை என்அப்பன் என்நெஞ்சில் உளானே'

மன்னுஇம் மனிசப் பிறவியை நீக்கித்
தன்ஆக்கித் தன்இன் அருள்செய்யும் தலைவன்
மின்ஆர் முகில்சேர் திருவேங் கடம்மேய
என்ஆனை என்அப்பன் என்நெஞ்சில் உளானே.

—திருமங்கையாழ்வார்.

மன்னு—நிலையில்லாத. முகில்—மேகம்.

திருகொண்டீச்சரம்

3. 'பாலனுய்க் கழிந்தநாளும் பனிமலர்க் கோதைமார்தம்'

பாலனுய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனுய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனுய்க் கழிந்த நாளும் குறிக்கோள்
இலாது கெட்டேன்
சேல்உலாம் பழன வேலித் திருக்கொண்டீச்
சரத்து ளானே.

—திருநாவுக்கரசர்.

பாலன்—பால்உண்ணும் இளஞ்சிறுவன். கோதைமார்—பெண்கள். குறிக்கோள்—உயர்ந்தநோக்கம், இலட்சியம். சேல்உலாம்—சேல் மீன்கள் உலாவுகின்ற. பழனம்—வயல்கள்.

திருச்சோற்றுத்துறை

4. 'நின்றநெய்த் தாஞ என்நெஞ்சுளாயே'

அல்லாய்ப் பகல்ஆனுய் நீயே என்றும்
ஆதிக் கயிலாயம் நீயே என்றும்
கல்லால் அமர்ந்தாயும் நீயே என்றும்
காளத்திக் கற்பகமும் நீயே என்றும்
சொல்லாய்ப் பொருளானுய் நீயே என்றும்
சோற்றுத் துறையுறைவாய் நீயே என்றும்
செல்வாய்த் திருவானுய் நீயே என்றும்
நின்றநெய்த் தாஞவென் நெஞ்சு ளாயே.

—திருநாவுக்கரசர்.

அல்—இரவு. கல்ஆல்—கல் ஆல் என்னும் ஒரு வகை மரத்தினடியில்.

திருவேங்கடம்

5. 'வேங்கடமாமலை மேய ஆயனடிஅல்லது மற்றறியேன்'

சேயன் அணியன்என் சிந்தையுள் நின்ற
மாயன் மணிவாள் ஒளிவெண் தரளங்கள்
வேய்விண்டு உதிர்வேங் கடமா மலைமேய
ஆயன் அடிஅல்லது மற்று அறியேனே.

—திருமங்கையாழ்வார்.

சேயன்—தூரத்தில் இருப்பவன். அணியன்—அருகில் இருப்பவன். தரளம்—முத்து. வேய்விண்டு—மூங்கில்கள் வெடித்து. ஆயன்—இடையன்.

திரு எவ்வுளூர் (திருவள்ளூர்)

6. 'தன்அடியார்க்கு இனியன் எந்தை எம்பெருமான்'

முனிவன் மூர்த்தி மூவர்ஆகி
வேதம் விரித்துஉரைத்த
புனிதன் பூவைவண்ணன் அண்ணல்
புண்ணியன் விண்ணவர்கோன்
தனியன் சேயன் தான்ஒருவன்
ஆகிலும் தன்அடியார்க்கு
இனியன் எந்தை எம்பெருமான்
எவ்வுள் கிடந்தானே.

—திருமங்கையாழ்வார்.

பூவை—காயாம்பூ.

திருக்காளத்தி

5. திருக்காளத்தியாய் அடியேனுன்னை யல்லால் அறியேன் மற்றொருவரையே'

கடியேன் காதன்மையால்
கழல்போதுஅறி யாதஎன்னுள்
குடியாக் கோயில்கொண்ட
குளிர்வார்சடை யெம்குழகா
முடியால் வானவர்கள்
முயங்கும்திருக் காளத்தியாய்
அடியேன் உன்னைஅல்லால்
அறியேன்மற் றொருவரையே.

—சுந்தரர்.

கடியேன்—கடினமான தீய இயல்புடைய நான். குழகன்—இளமை மிக்கவன்.

திருவெறும்பியூர்

6. 'அன்பனே அரனே என்று அரற்றுவார்க்கு இன்பனாகும்'

இன்பமும் பிறப்பும் இறப்பின் னொடு
துன்பமும் உடனே வைத்த சோதியான்
அன்பனே அரனே என்று அரற்றுவார்க்கு
இன்பன் ஆகும் எறும்பியூர் ஈசனே.

—திருநாவுக்கரசர்.

அரற்றுவார்—அழுது புலம்புவார்கள்.

திருவல்லிக்கேணி

7. 'ஆதியை அமுதை என்னையாளுடை யப்பனைத் திருவல்லிக் கேணிக் கண்டேனே'

வேதத்தை வேதத்து இன்சுவைப் பயனை
விழுமிய முனிவரர் விழுங்கும்
கோதுஇல் இன்கனியை நந்தனர் களிற்றைக்
குவலயத் தோர்தொழுது ஏத்தும்
ஆதியை அமுதை என்னை ஆள்உடை
அப்பனை ஒப்பவர் இல்லா
மாதவர் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

—திருமங்கையாழ்வார்.

விழுமிய—சிறந்த. கோது—சக்கை, குற்றம்.

திருக்கடல்மல்லை (மகாபலிபுரம்)

8. 'தொண்டனேன் கண்டு கொண்டேன் கடல் மல்லைத் தல சயனத்தே'

தொண்டுஆயார் தாம்பரவும் அடியி னனைப்
படிகடந்த தாளாளற்கு ஆள்ஆய் உய்தல்
விண்டானை தென்இலங்கை அரக்கர் வேந்தை
விலங்குஉண்ண வலங்கைவாய்ச் சரங்கள் ஆண்டு
பண்டுஆய வேதங்கள் நான்கும் ஐந்து
வேள்விகளும் கேள்வியோடு அங்கம் ஆறும்
கண்டானைத் தொண்டனேன் கண்டு கொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசய னத்தே.

—திருமங்கையாழ்வார்.

படி கடந்த—உலகத்தைத் தாண்டி அளந்த. சரங்கள்—அம்புகள்.

திருப்பூந்துருத்தி

7. 'புனிதன் தன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே'

மிக்கானை வெண்ணீறு சண்ணித் தானை
விண்டார் புரமூன்றும் வேவ நோக்கி
நக்கானை நான்மறைகள் பாடி னானை
நல்லார்கள் பேணிப் பரவ நின்ற
தக்கானைத் தண்டா மரையேல் அண்ணல்
தலைகொண்டு மாத்திரைக்கண் உலகம் எல்லாம்
புக்கானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

—திருநாவுக்கரசர்—

சண்ணித்தானை—பரக்கப் பூசியவனை. விண்டார்—பகைவர்கள். நக்கான்—சிரித்தான்.

திருக்கஞ்சனூர்

8. 'கஞ்சனூர் ஆண்ட கோவைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு உய்ந்தேனே'

தொண்டர்குழாம் தொழுதேத்த அருள்செய் வானைச்
சுடர்மழுவாள் படையானைச் சுழிவான் கங்கைத்
தெண்டிரைகள் பொருதிழிசெஞ் சடையி னானைச்
செக்கர்வான் ஒளியானைச் சேராது எண்ணிப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி எல்லாம்
பாழ்படுத்துத் தலைஅறுத்துப் பற்கள் கொண்ட
கண்டகனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுஉய்ந் தேனே.

—திருநாவுக்கரசர்—

குழாம்—கூட்டம், திரள். கண்டகன்—கண்டிப்புத்தன்மையுடையவன், கண்டிப்பவன்.

திருக்காழிச் சீராம விண்ணகரம்

9. 'பிறை தங்கு சடையானை வலத்தே வைத்து'

பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
 பிரமனைத்தன் உந்தியிலே தோற்று வித்துக்
கறைதங்கு வேல்தடங்கண் திருவை மார்பில்
 கலந்தவன்தாள் அணைகிற்பீர் கழுநீர் கூடித்
துறைதங்கு கமலத்துத் துயின்று கைதைத்
 தோடுஆரும் பொதிசோற்றுச் சுண்ணம் நண்ணிச்
சிறைவண்டு களிபாடும் வயல்சூழ் காழிச்
 சீராம விண்ணகரே சேர்மின் நீரே.

—திருமங்கையாழ்வார்.

உந்தி—கொப்பூழ், நாபி. கைதை—தாழை.

திருவாலி நகர்

10. 'சேவடி கை தொழுது எழும் புந்தியேன் மனத்தே புகுந்தாயைப் போகலொட்டேன்'

கந்தமாமலர் எட்டும் இட்டுநின்
 காமர்சேவடி கைதொழுது எழும்
புந்தியேன் மனத்தே புகுந்தாயைப்
 போகல் ஒட்டேன்
சந்தி வேள்வி சடங்கு நான்மறை
 ஓதி ஓதுவித்து ஆதியாய்வரும்
அந்தணாளர் அறாஅணி
 ஆலி அம்மானே.

—திருமங்கையாழ்வார்.

கந்தம்—வாசனை. காமர்—அழகு. புந்தி—புத்தி. போகல் ஒட்டேன்—போக விடமாட்டேன்.

திருவையாறு

9. 'அரியலால் தேவிஇல்லை ஐயன் ஐயாறனார்க்கே'

எரியலால் உருவம்இல்லை;
ஏறுஅலால் ஏறல் இல்லை;
கரியலால் போர்வை இல்லை;
காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா அமரர் கூடிப்
பெருந்தகைப் பிரான்என்று ஏத்தும்
அரியலால் தேவி யில்லை
ஐயன் ஐயாற னார்க்கே.

—திருநாவுக்கரசர்.

எரி—நெருப்பு, சோதி. ஏறு—விடை, காளை. கரி—யானைத் தோல். அரி—திருமால். தேவி—அம்பிகை.

திருவாரூர்

10. 'கழலடி பூண்டு கொண்டொழிந்தேன் புறம் போயினா லறையோ'

காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன்
மனம் புகுந்தாய் கழலடி
பூண்டு கொண்டு ஒழிந்தேன்
புறம் போயி னாலறையோ
ஈண்டு மாடங்கள் நீண்ட மாளிகைமேல்
எழுகொடி வானிளம் மதி
தீண்டி வந்து உலவும்
திருவாரூர் அம்மானே.

—திருநாவுக்கரசர்.

பூண்டுகொண் டொழிந்தேன்—உறுதியாகப் பற்றிக் கொண்டு விட்டேன். ஈண்டும்—நெருங்கி இருக்கின்ற.

திருநாங்கூர்ச் செம்பொன்செய் கோயில்

11. 'மறைப் பெரும் பொருளை வானவர் கோனைக் கண்டு நான் வாழ்ந் தொழிந்தேனே'

பிறப்பொடு மூப்புஒன்று இல்லவன் தன்னைப்
பேதியா இன்பவெள் ளத்தை
இறப்புஎதிர் காலக் கழிவும் ஆனானை
ஏழ்இசை இன்சுவை தன்னைச்
சிறப்புஉடை மறையோர் நாங்கைநல் நடுவுள்
செம்பொன்செய் கோயிலின் உள்ளே
மறைப்பெரும் பொருளை வானவர் கோனைக்
கண்டுநான் வாழ்ந்தொழிந் தேனே.

—திருமங்கையாழ்வார்.

பேதியா—வேறுபடாத. நாங்கை—திருநாங்கூர்.

திருமணிக்கூடம்

12. 'பாவமும் அறமும் வீடும் இன்பமும் துன்பந்தானும்'

பாவமும் அறமும் வீடும் இன்பமும் துன்பம் தானும்
கோவமும் அருளும் அல்லாக் குணங்களும் ஆய எந்தை
மூவரில் எங்கள் மூர்த்தி இவன்என முனிவ ரோடு
தேவர்வந்து இறைஞ்சும் நாங்கூர்த் திருமணிக் கூடத்
தானே.

—திருமங்கையாழ்வார்.

கோவம்—கோபம். இறைஞ்சும்—வணங்குகின்ற.

திருப்பாசூர்

11. 'பண்ணாகி இன்னமு தாம் பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்தவாறே'

விண்ணாகி நிலனாகி விசும்பும் ஆகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்பு கின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்பும் ஆகி
ஏழுலகும் தொழுதுஏத்திக் காண நின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சி ஆகிக்
காதலித்துஅங்கு அடியார்கள் பரவ நின்ற
பண்ணாகி இன்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டுஅடியேன் உய்ந்த வாறே.

—திருநாவுக்கரசர்.

வேலை சூழ்—கடல் சூழ்கின்ற. ஞாலத்தார்—உலகத்தார்.

திருஆலவாய்

12. 'குற்றம் நீ குணங்கள் நீ'

குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்துஇலங்கு சோதிநீ
கற்றநூல் கருத்தும்நீ அருத்தம்இன்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே.

—சம்பந்தர்.

கூடல்—மதுரை, புலவர்கள் கூடித் தமிழை ஆராய்ந்த இடம். ஆலவாய்—மதுரையில் உள்ள கோவிலின் பெயர். அருத்தம்—பொருள். முகமன்—உபசாரம், புகழுரை.

திருவிந்தளூர்

13. 'வாசி வல்லீர் இந்தளூரீர் வாழ்ந்தே போம் நீரே'

ஆசை வழுவாது ஏத்தும்
எமக்குஇங்கு இழுக்காய்த்து அடியோர்க்குத்
தேசம் அறிய உமக்கே
ஆளாய்த் திரிகின் றோமுக்குக்
காசின் ஒளியில் திகழும்
வண்ணம் காட்டீர் எம்பெருமான்
வாசி வல்லீர் இந்த
ளூரீர் வாழ்ந்தே போம்நீரே.

—திருமங்கையாழ்வார்.

காசு—பொன் நாணயம். வாசி—வேறுபாடு.

திருவிந்தளூர்

14. 'அடியேனை நல்லார் அறிவீர் தீயார் அறிவீர்'

சொல்லாது ஒழிய கில்லேன் அறிந்த சொல்லில்
நும்அடியார்
எல்லா ரோடும் ஒக்க எண்ணி இருந்தீர் அடியேனை
நல்லார் அறிவீர் தீயார் அறிவீர் நமக்குஇவ்
வுலகத்தில்
எல்லாம் அறிவீர் ஈதே அறியீர் இந்த ளூரீரே.

—திருமங்கையாழ்வார்.

கில்லேன்—முடியாமல் இருக்கின்றேன்.

திருவாரூர்

13. 'வாளாங் இருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே'

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத்தீப்போல் உள்ளே கனன்று
முகத்தான் மிகவாடி
ஆளாய்இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே.

—சுந்தரர்.

கனன்று—கொதித்து. அல்லல்—துன்பங்கள். வாளா—பேசாமல், வறிதே.

பொது

14. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

—மாணிக்கவாசகர்.

ஆவி—உயிர். உடைமை—பொருள், செல்வம். நாயகம்—தலைமைப்பாடு.

திருவிந்தளூர்

15. 'மாட்டீரானீர் பணிநீர் கொள்ள எம்மைப் பணியறியா விட்டீர்'

மாட்டீர் ஆனீர் பணிநீர் கொள்ள எம்மைப்
பணிஅறியா
விட்டீர் இதனை வேறே சொன்னோம் இந்த ளூரீரே
காட்டீர் ஆனீர் நும்தம் அடிக்கள் காட்டில்
உமக்குஇந்த
நாட்டே வந்து தொண்டர்ஆன நாங்கள் உய்யோமே?

—திருமங்கையாழ்வார்.

மாட்டீர் ஆனீர்—முடியாதவர் ஆகிவிட்டீர். வீட்டீர்—விட்டீர் என்பது எதுகை குறித்து நீண்டது. அடிக்கள்—அடிகள் என்னும் சொல் ஒற்று மிக்கு வந்தது; பாதங்கள் என்பது பொருள்.

திருவரங்கம்

16. 'அண்டமும் தானாய் நின்ற எம்பெருமான் அரங்கமா நகர் அமர்ந்தானே'

பண்டைநான் மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்குஒளி அனலும்
பெருகிய புனலொடு நிலனும்
கொண்டல் மாருதமும் குரைகடல் ஏழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்
அண்டமும் தானாய் நின்றஎம் பெருமான்
அரங்கமா நகர்அமர்ந் தானே.

—திருமங்கையாழ்வார்.

அனல்—நெருப்பு. புனல்—நீர். கொண்டல்—மேகம். மாருதம்—காற்று.

திருஓணகாந்தன் தளி

15. 'வல்லதெல்லாம் சொல்லி உம்மை வாழ்த்தினலும் வாய் திறந்து ஒன்று இல்லை என்னீர் உண்டும் என்னீர்'

வல்ல தெல்லாம் சொல்லிஉம்மை
வாழ்த்தினலும் வாய்திறந்து ஒன்று
இல்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மையாள்வான் இருப்ப தென்னீர்
பல்லை உக்க படுதலையில்
பகலெலாம் போய்ப் பலிதிரிந்திங்கு
ஒல்லை வாழ்க்கை ஒழியமாட்டீர்
ஓண காந்தன் தளியுளீரே.

—சுந்தரர்.

உக்க—உதிர்த்துவிட்ட. பலி—பிச்சை. ஒல்லை வாழ்க்கை—இழிவு மிக்க வாழ்க்கை.

பொது

16. 'எழும் சுடராய்எம் அடிகள் நின்றவாறே'

மண்ணாகி விண்ணாகி மலையும் ஆகி
வயிரமுமாய் மாணிக்கம் தானே ஆகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியும் ஆகிக்
கலையாகிக் கலைஞானம் தானே ஆகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணும் ஆகிப்
பிரளயத்துக் கப்பாலோர் அண்டம் ஆகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்தும் ஆகி
எழும்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே.

—திருநாவுக்கரசர்.

எண்—எண்ணம், கணிதம்.

திருவிண்ணகரம்

17. 'சாதலும் பிறத்தலும் என்றிவற்றைக் காதல் செய்யாதுன் கழலடைந்தேன்'

சாதலும் பிறத்தலும் என்றுஇவற்றைக்
காதல்செய் யாதுஉன் கழல்அடைந்தேன்
ஓதல்செய் நான்மறை ஆகிஉம்பர்
ஆதல்செய் மூவுரு ஆனவனே
ஆண்டாய்உனைக் காண்பதுஓர்
அருள் எனக்கு அருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை
விண்ணகர் மேயவனே.

—திருமங்கையாழ்வார்.

காதல்செய்யாது—விரும்பாமல். உம்பர்—தேவர்கள்.

திருவிண்ணகரம்

18. 'மறந்தேன் உன்னை முன்னம் மறந்த மதியின் மனத்தால் அதனால் இடும்பைக் குழியில் பிறந்தே எய்த் தொழிந்தேன்'

மறந்தேன் உன்னைமுன்னம் மறந்தமதி இல்மனத்தால்
இறந்தேன் எத்தனையும் அதனால் இடும்பைக் குழியில்
பிறந்தே எய்த்துஒழிந்தேன் பெருமான் திருமார்பா
சிறந்தேன் நின்அடிக்கே திருவிண்ணகர் மேயவனே.

—திருமங்கையாழ்வார்.

மதி—அறிவு. எய்த்து ஒழிந்தேன்—களைப்பும் சலிப்பும் அடைந்துவிட்டேன்.

திருவாரூர்

17. 'பிறத்தலும் பிறந்தால் பிணிபட வாய்ந்து அசைந்து உடலம் இழித்தேன் பிறப்பினை'

பிறத்தலும் பிறந்தால் பிணிப்பட வாய்ந்து
அசைந்து உடலம் புகுந்து நின்று
இறக்குமா றுளதே
இழித்தேன் பிறப்பினை நான்
அறத்தையே புரிந்த மனத்தனாய்
ஆர்வச் செற்றக் குரோதம் நீக்கிஉன்
திறத்தனாய் ஒழிந்தேன்
திருவாரூர் அம்மானே.

—திருநாவுக்கரசர்.

இழித்தேன்—இழிவு மிக்கது என்று வெறுத்து விட்டேன். புரிந்த—விரும்பிய. குரோதம்—பகைமை, மாறுபாடு.

திருவெண்ணெய் நல்லூர்

18. 'நாயேன் பல நாளும் நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்து எய்த்தேன்'

நாயேன்பல நாளும்நினைப்
பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்து எய்த்தேன்
பெறலாகா அருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
ஆயா உனக்கு ஆளாய்இனி
அல்லேன் எனலாமே.

—சுந்தரர்.

எய்த்தேன்—வருந்தினேன். வேய்ஆர்—மூங்கிற் காடுகள் நிறைந்த. ஆயா—தாய் போன்றவனே.

திருநறையூர்

19. ‘நறையூர் நின்ற நம்பீ பிறவாமை எனைப் பணி எந்தை பிரானே’

கறவா மடநாகு தன்கன்று உள்ளினுல்போல்
மறவாது அடியேன் உன்னையே அழைக்கின்றேன்
நறவுஆர் பொழில்சூழ் நறையூர் நின்றநம்பீ
பிறவாமை எனைப்பணி எந்தை பிரானே.

—திருமங்கையாழ்வார்.

மடநாகு—இளம்பசு. நறவு—தேன். பொழில்—சோலை.

திருநறையூர்

20. ‘அற்றேன் அடியேன் உன்னையே அழைக்கின்றேன்’

வற்ரு முதுநீரொடு மால்வரை ஏழும்
துற்றுஆக முன்துற்றிய தொல்புக ழோனே
அற்றேன் அடியேன் உன்னையே அழைக்கின்றேன்
பெற்றேன் அருள்தந்திடு என்எந்தை பிரானே.

—திருமங்கையாழ்வார்.

முதுநீர்—கடல். துற்று—உண்ணும் பொருள். துற்றிய—உண்ட. அற்றேன்—திக்கற்றவனுகிய நான்.

அவிநாசி

19. 'புக்கொளியூர் அவினுசியே எங்கோனே உனை வேண்டிக் கொள்வேன் பிறவாமையே'

எங்கேனும் போகினும் எம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறைகொண்டு ஆறுஅலைப் பாரிலை
பொங்காடுஅரவா புக்கொளி யூர்அவி நாசியே
எங்கோனே யுனைவேண்டிக் கொள்வேன் பிறவாமையே.

—சுந்தரர்.

கொங்கு—கொங்கு நாடு. கூறைகொண்டு—ஆடைகளைப் பறித்துக் கொண்டு. ஆறலைப்பார்—வழிப்போக்கர்களுக்குத் துன்பம் செய்பவர்கள். பொங்கு ஆடு அரவா—கோபம் மேலிட்டுப் படம் எடுத்து ஆடுகின்ற பாம்பை அணிந்தவனே. கோனே—தலைவனே.

அவிநாசி

20. 'உற்ருய் என்றுஉன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்'

எற்ருன் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்ருய் என்று உன்னையே உள்குகின்றேன் உணர்ந்து
உள்ளத்தால்
புற்ருடு அரவா புக்கொளியூர் அவிநாசியே
பற்ருக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே.

—சுந்தரர்.

எற்ருல்—எதனுல், எவ்வகையில். பற்ருக—துணையாக. பரமேட்டி—மேலான பெருந்தலைவன். ஆறலைத்த—கங்கையாறு தங்கி அலைகளை வீசிக்கொண்டிருக்கின்ற. முனியாதே—கோபிக்காமல்.

திருநறையூர்

21. 'வள்ளால் உன்னை எங்ஙனம் நான் மறக்கேனே'

புள்வாய் பிளந்த புனிதா என்றுஅழைக்க
உள்ளேநின்று என்உள்ளம் குளிரும் ஒருவா
கள்வா கடல்மல்லைக் கிடந்த கரும்பே
வள்ளால் உன்னை எங்ஙனம்நான் மறக்கேனே.

—திருமங்கையாழ்வார்.

புள்—பறவை, கொக்கு. மல்லை—மாமல்லை(மகாபலி)புரம்.

திருநறையூர்

22. 'கதியேல் இல்லை நின் அருள் அல்லது'

கதியேல் இல்லை நின்அருள் அல்லதுஎனக்கு
நிதியே திருநீர்மலை நித்திலக் கொத்தே
பதியே பரவித் தொழும்தொண்டர் தமக்குக்
கதியே உன்னைக் கண்டுகொண்டுஉய்ந் தொழிந்தேனே.

—திருமங்கையாழ்வார்.

கதி—துணை. நித்திலம்—முத்து. பதி—தலைவன்.

அவிநாசி

21. 'மாணிக்கத்தை மறந்து என்நினைக் கேனே'

வெந்த நீறுமெய் பூசவல் லானை
  வேத மால்விடை ஏறவல் லானை
அந்த மாதி அறிதற்கு அரியானை
  ஆறு அலைத்த சடையானை அம்மானைச்
சிந்தை என் தடுமாற்று அறுப்பானைத்
  தேவ தேவனென் சொல்முனி யாதே
வந்தென் உள்ளம்புகும் வாழ்கொளி புத்தூர்
  மாணிக்கத்தை மறந்தென் நினைக்கேனே.

—சுந்தரர்.

என்நினைக்கேன்—வேறு எதனை யான் நினைக்கப்போகின்றேன்.

சீர்காழி

22. 'மற்றொரு துணையினி மறுமைக்கும் காணேன்'

மற்றொரு துணைஇனி மறுமைக்கும் காணேன்
  வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமும் துணைஎன்று கருதேன்
  துணைஎன்று நான்தொழப் பட்டவொண் சுடரை
முத்தியும் ஞானமும் வானவர் அறியா
  முறைமுறை பலபல நெறிகளும் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை அடியேன்
  கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.

—சுந்தரர்.

கழுமல வளநகர்—சீர்காழி என்னும் தலத்தில்.

திருநறையூர்

23. ‘என் நெஞ்சினுள்ளே உறைவாய் உறைந்தது தான் அறியா திருந்தறியேன்’

சிறியாய்ஓர் பிள்ளையும்ஆய் உலகு
உண்டுஓர் ஆல்இலைமேல்
உறைவாய்என் நெஞ்சின் உள்ளே
உறவாய் உறைந்ததுதான்
அறியாது இருந்தறியேன் அடியேன்
அணிவண்டு கிண்டும்
நறைவாரும் பொழில்சூழ்
நறையூர் நின்ற நம்பியோ.

—திருமங்கையாழ்வார்.

உறைவாய்—தங்கி வாழ்பவனே. நறை வாரும்—தேன் சொரிகின்ற.

திருச்சேறை

24. ‘என் ஐயறிவும் கொண்டானுக்கு ஆளானார்க்கு ஆளாம் என் அன்புதானே’

பைவிரியும் வரிஅரவில் படுகடலுள்
துயில்அமர்ந்த பண்பா என்றும்
மைவிரியும் மணிவரைபோல் மாயவனே
என்றுஎன்றும் வண்டுஆர் நீலம்
செய்விரியும் தண்சேறை எம்பெருமான்
திருவடிவைச் சிந்தித் தேற்குஎன்
ஐஅறிவும் கொண்டானுக்கு ஆள்ஆனார்க்கு
ஆள்ஆம்என் அன்பு தானே.

—திருமங்கையாழ்வார்.

நீலம்—நீலப் பூக்கள். செய் விரியும்—வயல்களில் மலரும்.

திருவானைக்கா

23. 'நானேதும் அறியாமே என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்'

ஊனாகி உயிராகி அதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேது மறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்
தேனாரும் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாய்உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

—திருநாவுக்கரசர்

பொற்பாதம்—பொன் போலும் அரிய அழகிய திருவடி.
அல்லகண்டம்—துன்பம்.

திருவாலங்காடு

24. 'ஆண்டா ஆலங்காடா உன்அடியார்க்கு அடியே னாவேனே'

தூண்டா விளக்கின் நற்சோதீ
தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய்
பூண்டாய் எலும்பைப் புரமூன்றும்
பொடியாச் செற்ற புண்ணியனே
பாண்டாழ் வினைகள் அவைதீர்க்கும்
பரமா பழைய னூர்மேய
ஆண்டா ஆலங் காடாவுன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

—சுந்தரர்

பாண்டாழ் வினைகள்—பண்டு ஆழ் வினைகள் என்பது எதுகை நோக்கி நீண்டு வந்தது. ஆழ்வினைகள்—துன்பத்தில், நரகத்தில் அழுந்தும்படிசெய்கின்ற பாவங்கள்.

திருவழுந்தூர்

25. 'என் உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும் நின்றார்'

வெள்ளத் துள்ஓர் ஆல்இலைமேல்
மேவி அடியேன் மனம்புகுந்துஎன்
உள்ளத் துள்ளும் கண்ணுள்ளும்
நின்றார் நின்ற ஊர்போலும்
புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடிப்
போன காதல் பெடையோடும்
அள்ளல் செறுவில் கயல்நாடும்
அணிஆர் வயல்சூழ் அழுந்தூரே.

—திருமங்கையாழ்வார்.

புள்ளுப்பிள்ளை—பறவையின் குஞ்சு. அள்ளல் செறு—சேறு நிறைந்த வயல்.

திருவழுந்தூர்

26. 'அழுந்தூர் மறையோர்கள் அடிபணியும் கரியானை அடியேன் கண்டு கொண்டு களித்தேனே'

பெரியானை அமரர் தலைவற்கும் பிரமனுக்கும்
உரியானை உகந்தான் அவனுக்கும் உணர்வதனுக்கு
அரியானை அழுந்தூர் மறையோர்கள் அடிபணியும்
கரியானை அடியேன் கண்டுகொண்டு களித்தேனே.

—திருமங்கையாழ்வார்.

கரியானை—கருமை நிறம் உடையவனை.

திரு இன்னம்பர்

25. 'அன்புடையார் சிந்தைஅகலார் போலும்'

அல்லி மலர்நாற்றத் துள்ளார் போலும்
அன்புடையார் சிந்தை அகலார் போலும்
சொல்லின் அருமறைகள் தாமே போலும்
தூநெறிக்கு வழிகாட்டும் தொழிலார் போலும்
வில்லின் புரமூன்று எரித்தார் போலும்
வீங்கிருள் நல்வெளியும் ஆனார் போலும்
எல்லி நடமாட வல்லார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே.

—திருநாவுக்கரசர்.

அல்லி மலர்—இதழ்களையுடைய பூக்கள். நாற்றம்—மணம், வாசனை. வெளி—வெளிச்சம், ஒளி. எல்லி—இரவு, இரவில்.

திருக்கழுக்குன்றம்

26. 'கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேன் நானே'

மூவிலைவேல் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக் காடுஉடையானை முதல்ஆ னானை
ஆவினில்ஐந்து உகந்தானை அமரர் கோனை
ஆலாலம் உண்டுஉகந்த ஐயன் தன்னைப்
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

—திருநாவுக்கரசர்.

மூவிலை வேல்—சூலம். பிணக்காடு—சுடுகாடு. ஆவினில் ஐந்து—பஞ்ச கவ்வியம். ஆலாலம்—கொடிய நஞ்சு.

திருவழுந்தூர்

27. ‘உடன் நின்று ஐவர் என்னுள் புகுந்து ஒழியா தருவித் தின்றிட அஞ்சி’

திருவுக் கும்திரு ஆகிய செல்வா
தெய்வத்துக்கு அரசே செய்ய கண்ணா
உருவச் செஞ்சுடர் ஆழி வல்லானே
உலகு உண்ட ஒருவா திருமார்பா
ஒருவற்கு ஆற்றி உய்யும் வகைஇன்றால்
உடன்நின்று ஐவர்என்னுள் புகுந்து ஒழியாது
அருவித் தின்றிட அஞ்சிநின் அடைந்தேன்
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே.

—திருமங்கையாழ்வார்.

ஆழி—சக்கரம். ஆற்றி—சமாளித்து, ஈடு கொடுத்து. உய்யும் வகை—தப்பிக்கும் தன்மை. இன்று—இல்லை. அருவித் தின்றிட—அரித்து வருத்தம் செய்ய.

திருவழுந்தூர்

28. ‘பூமகள் தன்னோடும் உடனேவந்தாய் என் மனத்தே மன்னி நின்றாய்’

பந்துஆர் மெல்விரல் நல்வளைத் தோளி
பாவை பூமகள் தன்னொடும் உடனே
வந்தாய் என்மனத் தேமன்னி நின்றாய்
மால்வண்ணா மழை போல்ஒளி வண்ணா
சந்தோ காபௌ ழியா தைத்திரியா
சாமவே தியனே நெடு மாலே
அந்தோ நின்அடி அன்றிமற்று அறியேன்
அழுந்தூர் மேல்திசை நின்றஅம் மானே.

—திருமங்கையாழ்வார்.

சந்தோகம், பௌழியம், தைத்திரியம், சாம வேதம் என்பன வேதவியாசரால் வகுக்கப்பட்ட இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கிற்கும் முற்பட்ட பழமையான வேதங்கள். இங்ஙனம் நச்சினார்க்கினியர் முதலிய ஆசிரியர்கள் குறித்துள்ளனர். அந்தோ—ஐயோ.

திருச்சத்திமுற்றம்

27. 'புகுந்தைவர் நாளும் புகலழிப்ப மத்தார் தயிர் போல் மறுகு மென் சிந்தை'

பொத்தார் குரம்பை புகுந்துஐவர் நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போல் மறுகுமென் சிந்தை மறுக்குஒழிவி
அத்தா அடியேன் அடைக்கலம் கண்டாய் அமரர்கள்தம்
சித்தா திருச்சத்தி முற்றத் துறையும் சிவக்கொழுந்தே.

—திருநாவுக்கரசர்.

பொத்து ஆர்—துளைகள் நிறைந்த. குரம்பை—குடிசை போன்ற உடல். மறுகும்—கலங்கி வருந்தும். மறுக்கு ஒழிவி—கலக்கத்தைப் போக்கி அருள்க. சித்தா—சித்தத்தில் இருப்பவனே, சித்தனே.

திருமேற்றளி

28. 'வந்தாய் போயறியாய் மனமே புகுந்து நின்ற சிந்தா'

நொந்தா வொண்சுடரே நுனையே நினைத்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்துநின்ற
சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளியுறையும்
எந்தாய் உன்னைஅல்லால் இனியேத்த மாட்டேனே.

—சுந்தரர்.

நொந்தா—அழியாத.

திருக்கண்ணபுரம்

29. 'விண்ட மலரெல்லாம் ஊதி நீ என் பெறுதி'

விண்ட மலர்எல்லாம் ஊதிநீ என்பெறுதி
அண்ட முதல்வன் அமரர்கள் எல்லாரும்
கண்டு வணங்கும் கண்ணபுரத்து எம்பெருமான்
வண்டு நறுந்துழாய் வந்து ஊதாய் கோத்தும்பீ.

—திருமங்கையாழ்வார்.

விண்ட—கட்டு அவிழ்ந்த. துழாய்—துளசிமாலே.

திருக்கண்ணபுரம்

30. 'இலங்கை முன்எரி யெழக் கண்டவர் கணபுரம் அடிகள்தம் இடமே'

தொண்டரும் அமரரும் முனிவரும் தொழுதுஎழ
அண்டமொடு அகல்இடம் அளந்தவர் அமர்செய்து
விண்டவர் படமதிள் இலங்கைமுன் எரிஎழக்
கண்டவர் கணபுரம் அடிகள்தம் இடமே.

—திருமங்கையாழ்வார்.

அகலிடம்—பூமி, உலகம். விண்டவர்பட—பகைவர்கள் அழிய. அடிகள்—இறைவன், சுவாமிகள்.

பொது

29. 'தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன்உண்ணாதே'

தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன்உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும்
எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

—மாணிக்கவாசகர்.

குனிப்பு–நடனம். குனிப்புடையான்–நடராசப் பெரு மான்.

திருக்கடவூர் மயானம்

30. 'பெருமான் கடவூர் மயானத்துப் பெரியபெருமான் அடிகளே'

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே.

—சுந்தரர்.

மரு ஆர்–வாசனை பொருந்திய.

திருக்கண்ணபுரம்

31. ‘பெற்ருரும் சுற்றமு மென்றிவை பேணேன் நான்’

பெற்ருரும் சுற்றமும் என்றுஇவை பேணேன்நான்
மற்றுஆரும் பற்றுஇலேன் ஆதலால்நின் அடைந்தேன்
உற்ருன்என்று உள்ளத்துவைத்து அருள்செய் கண்டாய்
கற்ருர்சேர் கண்ண புரத்துஉறை அம்மானே.

—திருமங்கையாழ்வார்.

பற்று இலேன்—துணையில்லாதவன் ஆகிய நான்.

திருக்கண்ணபுரம்

32. ‘என்வல் வினையைப் பாட்டினுல் உன்னை என்நெஞ்சத்து இருந்தமை காட்டினுய்’

நாட்டினுய் என்னை உனக்குமுன் தொண்டுஆக
மாட்டினேன் அத்தனையே கொண்டுஎன் வல்வினையை
பாட்டினுல் உன்னைஎன் நெஞ்சத்து இருந்தமை
காட்டினுய் கண்ண புரத்துஉறை அம்மானே.

—திருமங்கையாழ்வார்.

நாட்டினுய்—நிலை நாட்டிக் கொண்டாய். மாட்டினேன்—மாளச்செய்தேன். பாட்டினுல்—பாடல்களினுல்.

பொது

31. 'உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்'

உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத்து அமர்ந்துஉறையும்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துஉருக வேண்டுவனே.

—மாணிக்கவாசகர்.

அமையும்—வேண்டப்படாமற் போகும். கற்றா—கன்றை யுடைய இளம்பசு.

திருக்கோழம்பம்

32. 'முன்னை நான் செய்த பாவமுதல்அறப் பின்னல் வார் சடையானைப் பிதற்றியே'

முன்னை நான்செய்த பாவம் முதல்அறப்
பின்னை நான்பெரி தும்அருள் பெற்றது
அன்னம் ஆர்வயல் கோழம்பத் துள்அமர்
பின்னல் வார்சடை யானைப் பிதற்றியே.

—திருநாவுக்கரசர்.

முதல் அற—வேரோடு அழிய. பிதற்றியே—இடை விடாமல் பாடிப்பரவியே.

திருப்புல்லாணி

33. 'என்னை நைவித்து எழில் கொண்டு அகன்ற பெருமானிடம்'

தன்னை நைவிக்கிலேன் வல்வினையேன்
　தொழுதும் எழு
பொன்னை நைவிக்கும் அப்பூஞ்
　செருந்தி மணநீழல்வாய்
என்னை நைவித்து எழில்கொண்டு
　அகன்ற பெருமான் இடம்
புன்னை முத்தம் பொழில்சூழ்ந்து
　அழகு ஆய புல்லாணியே.

—திருமங்கையாழ்வார்.

நைவிக்கிலேன்—நான் ஒரு துன்பமும் செய்யவில்லை.
நைவித்து—வருத்தி.

திருக்குறுங்குடி

34. 'நின்ற வினையும் துயரும் கெட மாமலர் ஏந்திச் சென்று பணிமின்'

நின்ற வினையும் துயரும் கெடமா மலர்ஏந்திச்
சென்றுபணிமின் எழுமின் தொழுமின் தொண்டீர்காள்
என்றும் இரவும் பகலும் வரிவண்டு இசைபாடக்
குன்றின் முல்லை மன்றிடை நாறும் குறுங்குடியே.

—திருமங்கையாழ்வார்.

முல்லை—முல்லைப்பூ. நாறும்—மணம் வீசும்.

திருப்புறம்பயம்

33. 'பண்டரீயன செய்த தீமையும் பாவமும் பறையும்படி'

பண்டரீயன செய்த தீமையும்
பாவமும் பறையும்படி
கண்டரீயன கேட்டியேல்
கவலாது எழு மடநெஞ்சமே
தொண்டரீயன பாடித் துள்ளி
நின்ருடி வானவர்தாம் தொழும்
புண்டரீக மலரும் பொய்கைப்
புறம் பயம்தொழப் போதுமே.

—சுந்தரர்.

அரீயன—அரியன என்பது நீண்டது. பறையும்படி—நீங்கி அகலும்படி. கவலாது—கவலைப்படாமல். புண்டரீகம்—தாமரை.

திருவாரூர்

34. 'ஆரூரடி தொழப் பண்டை வல்வினை நில்லா பறையுமே'

விண்ட மாமலர் மேலுறை வானெடும்
கொண்டல் வண்ணனும் கூடி அறிகிலா
அண்ட வாணன்தன் ஆரூர் அடிதொழப்
பண்டை வல்வினை நில்லா பறையுமே.

—திருநாவுக்கரசர்.

விண்ட—விரிந்த. மலர்மேல் உறைவான்—பிரமன். கொண்டல்வண்ணன்—திருமால்.

திருவல்லவாழ்

35. 'ஆதியாய் ஆதிக்கும் ஆதியான மைந்தனுர் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே'

தந்தைதாய் மக்களே சுற்றம் என்று
உற்றவர் பற்றி நின்ற
பந்தமார் வாழ்க்கையை நொந்து நீ
பழி எனக்கருதி னுயேல்
அந்தமாய் ஆதியாய் ஆதிக்கும்
ஆதியாய் ஆயன் ஆய
மைந்தனுர் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே.

—திருமங்கையாழ்வார்.

மைந்தனுர்—கடவுள். மைந்து—வலிமை. மருவு—அதைச் சென்று சேர்.

பொது

36. 'நிறம் கிளர்ந்த கருஞ் சோதி நெடுந் தகையை நினையாதார் நீசர்தாமே'

மறங்கிளர்ந்து கருங்கடல்நீர் உரம்துரந்து
பரந்தேறி அண்டத் தப்பால்
புறம்கிளர்ந்த காலத்துப் பொன்னுலகம்
ஏழினையும் ஊழில் வாங்கி
அறம்கிளர்ந்த திருவயிற்றின் அகம்படியில்
வைத்தும்மை உய்யக் கொண்ட
நிறம்கிளர்ந்த கருஞ்சோதி நெடுந்தகையை
நினையாதார் நீசர் தாமே.

—திருமங்கையாழ்வார்.

மறம் கிளர்ந்து—வலிமை மேலிட்டு. உரம் துரந்து—வலிமையை அழித்து. ஊழில்—முறைப்படி. அகம்படியில்—உள்ளிடத்தில்.

திருநாகைக்காரோணம்

35. 'நாகை மன்னு காரோணத்தானை நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே'

மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்ற மென்னும்
வினையுளே விழுந்து அழுந்தி வேதனைக்கு இடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகில் உய்யலாம் நெஞ்சி னீரே.

—திருநாவுக்கரசர்.

கனையும்—ஒலிக்கின்ற.

திருவீழிமிழலை

36. 'திருவீழி மிழலையானைச் சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே'

தூயானைச் சுடர்பவளச் சோதி யானைத்
தோன்றிய எவ்வுயிர்க்கும் துணையாய் நின்ற
தாயானைச் சக்கரம்மாற்கு ஈந்தான் தன்னைச்
சங்கரனைச் சந்தோக சாமம் ஓதும்
வாயானை மந்திரிப்பார் மனத்து உளானை
வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்து வார்க்குச்
சேயானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே.

—திருநாவுக்கரசர்.

மந்திரிப்பார்—மந்திரம் ஓதித் தியானிப்பவர்கள்.

பொது - பெரிய திருமொழி

37. 'ஆற்றங்கரை வாழ்மரம் போல் அஞ்சுகின்றேன்'

மாற்றம் உளஆகிலும் சொல்லுவன் மக்கள்
தோற்றக் குழிதோற்று விப்பாய்கொல் என்றுஇன்னம்
ஆற்றங் கரைவாழ் மரம்போல் அஞ்சுகின்றேன்
நாற்றம் சுவை ஊறு ஒலி ஆகிய நம்பீ.

—திருமங்கையாழ்வார்.

மாற்றம்—மாறுதல். நம்பீ—உத்தமனே.

பொது - பெரிய திருமொழி

38. 'இருபாடுஎரி கொள்ளியின் உள் எறும்பே போல்'

உருஆர் பிறவிக்கண் இன்னம் புகப்பெய்து
திரிவாய் என்று சிந்தித்தி என்று அதற்குஅஞ்சி
இருபாடு எரிகொள்ளி யினுள் எறும்பேபோல்
உருகா நிற்கும் என்உள்ளம் ஊழிமுதல்வா.

—திருமங்கையாழ்வார்.

புகப் பெய்து—நுழையும்படி செலுத்தி. சிந்தித்தி—நினைக்கின்றாய். இருபாடு—இரண்டு பக்கமும்.

திருவுத்தர கோச மங்கை

37. 'ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய் வேருறுவேனை'

காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவார்
ஊருறை வாய்மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க என்னை வளர்ப்பவனே.

—மாணிக்கவாசகர்.

கார் உறு—கருமை நிறம் பொருந்திய. வார்உறு—கச்சு அணிந்த.

திருவுத்தர கோச மங்கை

38. 'இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு ஒத்து'

இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்
பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்
டாய்வியன் மூவுலகுக்கு
ஒருதலை வாமன்னும் உத்தர
கோச மங்கைக் கரசே
பொருதலை மூவிலை வேல்வலன்
ஏந்திப் பொலிபவனே.

—மாணிக்கவாசகர்.

பொலிபவன்—விளங்குபவன்.

பொது – பெரிய திருமொழி

39. 'அந்தோ அடியேற்கு அருளாய் உன்னருளே'

நந்தா நரகத்து அழுந்தாவகை நாளும்
எந்தாய் தொண்டர் ஆனவர்க்கு இன்அருள்செய்வாய்
சந்தோகா தலைவனே தாமரைக் கண்ணா
அந்தோ அடியேற்கு அருளாய் உன்அருளே.

—திருமங்கையாழ்வார்.

நந்தா—குறையாத. சந்தோகா—சந்தோகம் என்னும் பழைய வேதத்தின் பொருளாக விளங்குபவனே.

பொது – திருக்குறுந்தாண்டகம்

40. 'வேட்கைமீதூர வாங்கி விழுங்கினேற்கு இனியவாறே'

கேட்கயான் உற்றது உண்டு
  கேழலாய் உலகம் கொண்ட
பூக்கெழு வண்ணனாரைப்
  போதரக் கனவில் கண்டு
வாக்கினால் கருமம் தன்னால்
  மனத்தினால் சிரத்தை தன்னால்
வேட்கைமீ தூர வாங்கி
  விழுங்கினேற்கு இனிய வாறே.

—திருமங்கையாழ்வார்.

கேழல்—பன்றி, வராகம். போதர—வர. சிரத்தை—ஆர்வம், ஈடுபாடு.

திருவிடைமருதூர்

39. 'இரைப்பனேனுக் கோர் உய்வகை யருளாய்'

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றியில் வினையே துணிந்து எய்த்தேன்
அரைத்த மஞ்சளது ஆவதை அறிந்தேன்
அஞ்சி னேன்நம னார்அவர் தம்மை
உரைப்பன் நான்உன சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்ப னேனுக்குஓர் உய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தை பிரானே.

—சுந்தரர்.

இன்னே—இப்பொழுதே. நன்றியில்லாத—தீய.

திருக்கொகுடிக் கோயில்

40. 'ஐயனை என் மனத்தினால் நினைந்தபோது அவர்நமக்கினியவாறே'

பொய்யாத வாய்மையால் பொடி பூசிப்
போற்றிசைத்துப் பூசை செய்து
கையினால் எரியோம்பி மறை வளர்க்கும்
அந்தணர்தங் கருப்பறிய லூர்க்
கொய்யுலாம் மலர்ச் சோலைக் குயில்கூவ
மயிலாலும் கொகுடிக் கோயில்
ஐயனைஎன் மனத்தினால் நினைந்தபோது
அவர் நமக்கினிய வாறே.

—சுந்தரர்.

பொடி—திருநீறு. போற்றிசைத்து—துதித்து. ஆலும்—நடனம் செய்கின்ற.

பொது — திருக்குறுந்தாண்டகம்

41. ‘கொள்ளிமேல் எறும்பு போலக் குழையுமால் என்தன் உள்ளம்’

உள்ளமோ ஒன்றில் நில்லாது
　ஓசையில் எரிநின்று உண்ணும்
கொள்ளிமேல் எறும்பு போலக்
　குழையுமால் என்தன் உள்ளம்
தெள்ளியீர் தேவர்க்கு எல்லாம்
　தேவராய் உலகம் கொண்ட
ஒள்ளியீர் உம்மை யல்லால்
　எழுமையும் துணைஇ லோமே.

—திருமங்கையாழ்வார்.

குழையும்—வருந்தும். தெள்ளியீர்—ஞானமே வடிவமாக இருப்பவரே.

பொது — திருக்குறுந்தாண்டகம்

42. ‘பேசினேன் ஏசமாட்டேன் பேதையேன்’

பேசினார் பிறவி நீத்தார்
　பேர்உளான் பெருமை பேசி
ஏசினார் உய்ந்து போனார்
　என்பதுஇவ் வுலகின் வண்ணம்
பேசினேன் ஏச மாட்டேன்
　பேதையேன் பிறவி நீத்தற்கு
ஆசையோ பெரிது கொள்க
　அலைகடல் வண்ணர் பாலே.

—திருமங்கையாழ்வார்.

நீத்தார்—நீங்கி விட்டார்கள். உய்ந்து போனார்—தப்பித்துக் கொண்டார்கள்.

பொது

41. 'கொள்ளிமேல் எறும்பு என்னுள்ளம் எங்ஙனம் கூடுமாறே'

உள்குவார் உள்ளத் தானை
　　உணர்வெனும் பெருமை யானை
உள்கினேன் நானும் காண்பான்
　　உருகினேன் ஊறி ஊறி
எள்கினேன் எந்தை பெம்மான்
　　இருதலை மின்னு கின்ற
கொள்ளிமேல் எறும்பு என்உள்ளம்
　　எங்ஙனம் கூடு மாறே?

—திருநாவுக்கரசர்.

எள்கினேன்—இளகினேன், மனஉருக்கம் கொண்டேன்.

திருநாட்டியத்தான்குடி

42. 'நானேலும்மடி பாடுதலொழியேன்'

பூணு ணுவதொர் அரவம் கண்டஞ்சேன்
　　புறங்காட் டாடல் கண்டு இகழேன்
பேணீர் ஆகிலும் பெருமையை உணர்வேன்
　　பிறவேன் ஆகிலும் மறவேன்
காணீர் ஆகிலும் காண்பன்என் மனத்தால்
　　கருதீர் ஆகிலும் கருதி
நானேல் உம்மடி பாடுதல் ஒழியேன்
　　நாட்டியத் தான்குடி நம்பீ.

—சுந்தரர்.

பூண் நாண்—அணிகலனும், வில்லுக்கு நாணும். புறங்காடு—சுடுகாடு. பாடுதல் ஒழியேன்—பாடுவதை விட மாட்டேன்.

பொது – திருக்குறுந்தாண்டகம்

43. 'சுடர் விட்டாங்கே விளக்கினை விதியில் காண்பார்'

இளைப்பினை இயக்கம் நீக்கி
இருந்துமுன் இமையைக் கூட்டி
அளப்புஇல்ஐம் புலன் அடக்கி
அன்புஅவர் கண்ணே வைத்து
துளக்கம்இல் சிந்தை செய்து
தோன்றலும் சுடர்விட்டு ஆங்கே
விளக்கினை விதியில் காண்பார்
மெய்ம்மையைக் காண்கிற் பாரே.

—திருமங்கையாழ்வார்.

இயக்கம் நீக்கி—இயங்குதலைத் தடுத்து. துளக்கம் இல்—அசைவு (தடுமாற்றம்) இல்லாத.

பொது – திருக்குறுந்தாண்டகம்

44. 'பண்டமாம் பரமசோதி நின்னையே பரவுவேனே'

தொண்டுஎல்லாம் பரவி நின்னைத்
தொழுதுஅடி பணியு மாறு
கண்டுதான் கவலை தீர்ப்பான்
ஆவதே பணியாய் எந்தாய்
அண்டமாய் எண்திசைக்கும்
ஆதியாய் நீதி ஆன
பண்டமாம் பரம சோதி
நின்னையே பரவு வேனே.

—திருமங்கையாழ்வார்.

பண்டம்—பொருள். பரவுவேன்—துதித்துத் தொழுவேன்.

பொது

43. 'ஞானத்தீயால் எரி கொள இருந்து நோக்கில்'

உடம்பெனும் மனைய கத்துள்
 உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி
 உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால்
 எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
 கழலடி காண லாமே.

—திருநாவுக்கரசர்.

மனையகத்துள்—வீட்டின்கண். தகளி—அகல். அட்டி—வார்த்து, ஊற்றி. மயக்கி—திருகி. இடம்படும்—பரந்து விரிந்துள்ள. நோக்கில்—தியானித்தால். கடம்பு அமர் காளை தாதை—கடப்ப மலர் மாலையை விரும்புகின்ற முருகனின் தந்தையாகிய சிவபெருமான்.

பொது

44. 'நாயடியேன் பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே'

வாழ்த்துவதும் வானவர்கள்
 தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து
 தம்மைஎல்லாம் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரம்முரலும்
 தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப்பு அறுத்திடுவான்
 யானும்உன்னைப் பரவுவனே.

—மாணிக்கவாசகர்.

சூழ்த்து—சூழ்ந்து, சுற்றி வந்து. மதுகரம்—தேனுண்ணும் வண்டுகள். பாழ்த்த—பாழாகிப் போன. பரவுவேன்—துதிப்பேன்.

பொது – திருநெடுந்தாண்டகம்

45. ‘என்ஆனாய் என்ஆனாய் என்னல்அல்லால்’

பொன்ஆனாய்! பொழில்ஏழும் காவல் பூண்ட
புகழ்ஆனாய்! இகழ்வாய தொண்ட னேன்நான்
என்ஆனாய்! என்ஆனாய்! என்னல் அல்லால்
என்அறிவன் ஏழையேன் உலகம் ஏத்தும்
தென்ஆனாய் வடஆனாய் குடபால் ஆனாய்
குணபால மதயானாய் இமையோர்க்கு என்றும்
முன்ஆனாய் பின்ஆனார் வணங்கும் சோதி!
திருமூழிக் களத்துஆனாய் முதல் ஆனாயே.

—திருமங்கையாழ்வார்.

என்னல்—என்று சொல்லுதல். ஏழையேன்—அறிவு இல்லாத நான். குடபால்—மேற்குப் பக்கம். குணபால்—கிழக்குப் பக்கம்.

பொது – திருநெடுந்தாண்டகம்

46. ‘செந்திறந்த தமிழோசை வட சொல்லாகி’

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை
இருநிலம்கால் தீநீர்விண் பூதம் ஐந்துஆய்ச்
செந்திறத்த தமிழ்ஓசை வடசொல் ஆகித்
திசைநான்கும் ஆய்த் திங்கள் ஞாயிறு ஆகி
அந்தரத்தில் தேவர்க்கும் அறியல் ஆகா
அந்தணனை அந்தணர்மாட்டு அந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவாது என்றும்
வாழுதியேல் வாழலாம் மடநெஞ் சம்மே.

—திருமங்கையாழ்வார்.

அந்தரம்—வானம், வானுலகம். கால்—காற்று.

பொது

45. 'என்ஆனாய் என்ஆனாய் என்னினல்லால்'

நின்ஆவார் பிறர்அன்றி நீயே ஆனாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்தும் ஆனாய்
மன்ஆனாய் மன்னவர்க்கோர் அமுதம் ஆனாய்
மறைநான்கும் ஆனாய்ஆறு அங்கம் ஆனாய்
பொன்ஆனாய் மணிஆனாய் போகம் ஆனாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்ஆனாய் என்ஆனாய் என்னில் அல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே.

—திருநாவுக்கரசர்.

ஏத்துகேன்—துதிப்பேன்.

பொது

46. 'வட மொழியும் தென் தமிழும்'

வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆன்ஐந்தும் ஆடி னான்காண்
ஐயன்காண் கையில்அனல் ஏந்தி ஆடும்
கானவன்காண் கானவனுக்கு அருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத்து ஊறும்
தேனவன்காண் சென்றுஅடையாச் செல்வன் தான்காண்
சிவனவன்காண் சிவபுரத்துஎம் செல்வன் தானே.

—திருநாவுக்கரசர்.

ஆன் ஐந்து—பஞ்ச கவ்வியம்.

பொது – திருநெடுந்தாண்டவம்

47. ‘மூவுருவும் கண்டபோது ஒன்றும் சோதி’

பார்உருவில் நீர்எரிகால் விசும்பும் ஆகிப்
பல்வேறு சமயமும்ஆய்ப் பரந்து நின்ற
ஏர்உருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர்தம் திருவுருவேறு எண்ணும் போது
ஓர்உருவம் பொன்உருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடல்உருவம் ஒத்து நின்ற
மூவுருவும் கண்டபோது ஒன்றும் சோதி
முகில்உருவம் எம்அடிகள் உருவம் தானே.

—திருமங்கையாழ்வார்.

விசும்பு—ஆகாயம். ஏர்—அழகு.

பொது – திருநெடுந்தாண்டகம்

48. ‘என் சிந்தையும் என் வளையும் கொண்டு என்னை ஆளும் கொண்டு’

மின்இலங்கு திருவுருவும் பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்
தன்அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்துஇலங்கு மகரம்சேர் குழையும் காட்டி
என்நலனும் என்நிறையும் என்சிந் தையும்
என்வளையும் கொண்டுஎன்னை ஆளும் கொண்டு
பொன்அலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலின் ஊடே
புனல்அரங்கம் ஊர்என்று போயி னாரே.

—திருமங்கையாழ்வார்.

துழாய்—துளசி. கரிமுனிந்த—குவலயா பீடம் என்னும் யானையைக் கொன்ற. மகரம் சேர்குழை—மகர குண்டலம், சுறுமீன் வடிவமாகச் செய்த காதணி. பொழில்—சோலை.

திருவாரூர்

47. 'ஒருருவே மூவுருவமான நாளோ'

ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
  ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
  காமனையும் கண்அழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும்விண்ணும் தெரித்த நாளோ
  மான்மறிக்கை ஏந்தியோர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
  திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே.

—திருநாவுக்கரசர்.

காய்ந்த—தண்டித்த. அழல்—நெருப்பு.

திருவெண்காடு

48. 'சென்றேனைப் பற்றி நோக்கிப் பரிசழித்தென் வளைகவர்ந்தார்'

ஆகத்து மையடக்கி ஆறு சூடி
  ஐவாய் அரவசைத்துஅங்கு ஆனேறு ஏறிப்
போகம் பலவுடைத்தாய்ப் பூதம் சூழப்
  புலித்தோல் உடையாப் புகுந்து நின்றார்
பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப்
  பரிசழித்தென் வளை கவர்ந்தார்பாவி யேனை
மேகம் முகில்உரிஞ்சு சோலை சூழ்ந்த
  வெண்காடு மேவிய விகிர்த னாரே.

—திருநாவுக்கரசர்.

ஆகத்து—உடம்பின் கண். ஆன்ஏறு—ரிஷப வாகனம். பாகு இடுவான்—பக்குவம் செய்த உணவைப் பலியாகத் தருவதன் பொருட்டு. பரிசு—இயல்பான பண்பு.

திருக்கண்ணபுரம் – பெரிய திருமொழி

49. 'கலைஇலங்கு மொழியாளர் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ'

சிலைஇலங்கு பொன்ஆழி திண்படை தண்டு
  ஒண்சங்கம் என்கின் றாளால்
மலைஇலங்கு தோள்நான்கே மற்று அவனுக்கு
  எற்றேகாண் என்கின் றாளால்
முலைஇலங்கு பூம்பயலை முன்புஓட
  அன்புஓடி இருக்கின் றாளால்
கலைஇலங்கு மொழியாளர் கண்ணபுரத்து
  அம்மானைக் கண்டாள் கொலோ.

—திருமங்கையாழ்வார்.

சிலை—வில். ஆழி—சக்கரம். பயலை—பசலை, காதலனைப் பிரிந்த காதலிக்கு ஏற்படும் நிறவேறுபாடு.

திருநறையூர்

50. 'மாணிக்கமே முளைக்கின்ற வித்தே உன்னை எங்ஙனம் நான் விடுகேனே'

அத்தா அரியே என்று உன்னைஅழைக்கப்
பித்தா என்று பேசுகின்றார் பிறர்என்னை
முத்தே மணி மாணிக்கமே முளைக்கின்ற
வித்தே உன்னை எங்ஙனம்நான் விடுகேனே.

—திருமங்கையாழ்வார்.

விடுகேன்—பிரிந்து நீங்கியிருப்பேன்.

திருக்கழிப்பாலை

49. ‘கழியுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச் சேர்வானைக் கண்டாள் கொல்லோ’

பழியிலான் புகழுடையான் பால்நீற்றன்
ஆனேற்றன் என்கின்றாளால்
விழியுலாம் பெருந்தடங்கண் இரண்டல்ல
மூன்றுஉளவே என்கின்றாளால்
சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே என்கின்றாளால்
கழியுலாம் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

—திருநாவுக்கரசர்.

கழியுலாம்—உப்பங்கழியானது உலவுகின்ற.

திருமழபாடி

50. ‘மழபாடியுள் மாணிக்கமே அன்னே உன்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே’

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை
அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

—சுந்தரர்.

பொன்னார்—பொன் போன்ற. அசைத்து—உடுத்து.
அன்னே—தாய் போன்றவனே.

பொது – திருப்பல்லாண்டு

51. 'அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு'

அடியோ மோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும்
சுடரா ழியும்பல் லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்
அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

—பெரியாழ்வார்.

மங்கை—மகாலட்சுமி. பாஞ்சசன்னியம்—திருமாலின் கையிலுள்ள சங்கு.

பொது – பெரியாழ்வார் திருமொழி

52. 'அவன் நீள்முடி ஐந்திலும் நின்று நடம் செய்ததோள் வலிவீரமே பாடிப்பற'

காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு அவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடம்செய்து
மீளஅவ னுக்கு அருள்செய்த வித்தகன்
தோள்வலி வீரமே பாடிப் பற
தூமணி வண்ணனைப் பாடிப் பற.

—பெரியாழ்வார்.

காளியன்—பாம்பு. வித்தகன்—சாமர்த்தியம் மிக்கவன்.

பொது

51. 'பக்தர்கள் பிறவிஅறுக்க நெறிதந்த பித்தர்க்குப் பல்லாண்டு'

மன்னுக தில்லை வளர்க நம்
பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண் டபத்துள்ளே
புகுந்து புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை
கோன்அடி யோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

—சேந்தனர்.

மன்னுக—நிலைபெறுக. அகல—அகல்க, நீங்குக. மடவாள் பெண், அம்பிகை.

பொது

52. 'அச்சு முறிந்ததென்று உந்திபற; அழிந்தன முப்புரம் உந்திபற'

தச்சு விடுத்தலும்
தாமடி இட்டலும்
அச்சு முறிந்ததென்று
உந்தீ பற
அழிந்தன முப்புரம்
உந்தீ பற.

—மாணிக்கவாசகர்.

தச்சு—தைத்து, பொருத்தி. விடுத்தலும்—செலுத்திய அளவில். அடி இட்டலும்—காலை எடுத்து வைத்த மாத்திரத்தில். அச்சு—தேர்க்கால்.

பொது

53. 'ஆயிரம் தோள் பரப்பி முடியாயிரம் மின்ன'

ஆயிரம் தோள்பரப்பி முடியாயிரம் மின்னிலக
ஆயிரம் பைந்தலைய அனந்தசயனன் ஆளும்மலை
ஆயிரம் ஆறுகளும் சுனைகள்பல ஆயிரமும்
ஆயிரம் பூம்பொழிலும் உடைமாலிருஞ் சோலையதே.

—பெரியாழ்வார்.

அனந்தசயனன்—ஆதிசேடன் ஆகிய படுக்கையில் பள்ளி கொண்டிருக்கும் திருமால். அனந்தன்—ஆதிசேடன்.

பொது

54. 'அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்'

துப்புடை யாரை அடைவது எல்லாம்
சோர்விடத் துத்துணை யாவர் என்றே
ஒப்பிலேன் ஆகிலும் நின்அடைந்தேன்
ஆனைக்கு நீஅருள் செய்த மையால்
எய்ப்பென்னை வந்து நலியும் போது
அங்குஏதும் நான்உன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத்து அரவணைப் பள்ளி யானே.

—பெரியாழ்வார்.

துப்பு உடையார்—வலிமை மிக்கவர்கள். எய்ப்பு—களைப்பு, மரணவேதனை.

திருவாரூர்

53. 'ஆயிரம் தோளுடையானும் ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிரம் நீள்முடியானும்'

ஆயிரம் தாமரைபோலும்
ஆயிரம் சேவடியானும்
ஆயிரம்பொன் வரைபோலும்
ஆயிரம்தோள் உடையானும்
ஆயிரம் ஞாயிறுபோலும்
ஆயிரம் நீள்முடியானும்
ஆயிரம் பேர்உகந்தானும்
ஆரூர்அமர்ந்த அம்மானே.

—திருநாவுக்கரசர்.

உகந்த—விரும்பிய. அமர்ந்த—தங்கி எழுந்தருளியுள்ள. அம்மான்—தலைவன்.

திருச்சத்தி முற்றம்

54. 'அம்மை அடியேற்கு அருளுதி என்பதுஇங்கு யார்அறிவார்'

வெம்மை நமன்தமர் மிக்கு
விரவி விழுப்பதன் முன்
இம்மைஉன் தாள்என்றன் நெஞ்சத்
தெழுதிவை ஈங்கு இகழில்
அம்மை அடியேற்கு அருளுதி
என்பதிங்கு ஆரறிவார்
செம்மை தருசத்தி முற்றத்
துறையும் சிவக்கொழுந்தே.

—திருநாவுக்கரசர்.

வெம்மை—கொடுமை. விழுப்பதன் முன்—விழச் செய்வதற்கு முன்னே. இகழில்—பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்தால். அம்மை—அடுத்த பிறப்புக்களில்.

பொது

55. 'நமன் தமர் பற்றி...மோதும் போது...நீ என்னைக் காக்க வேண்டும்'

நானேதும் உன்மாயம் ஒன்று அறியேன்
நமன்தமர் பற்றி நலிந்திட்டு இந்த
ஊனே புகேல்என்று மோதும் போது
அங்கேதும் நான்உன்னை நினைக்க மாட்டேன்
வானேய் வானவர் தங்கள் ஈசா
மதுரைப் பிறந்தமா மாய னேஎன்
ஆனாய் நீஎன்னைக் காக்க வேண்டும்
அரங்கத்து அரவணைப் பள்ளி யானே.

—பெரியாழ்வார்.

மாயம்—வஞ்சகம், வியத்தகு செயல். நமன்தமர்—எமதூதர்கள். ஆனாய்—ஆனையைப் போன்றவனே.

பொது

56. 'வளைத்து வைத்தேன் இனிப் போகலொட்டேன்'

வளைத்து வைத்தேன்இனிப் போகலொட்டேன்
உன்தன் இந்திர ஞாலங்களால்
ஒளித்திடில் நின்திரு வாணைகண்டாய்
நீஒரு வர்க்கும் மெய்யன்அல்லை
அளித்தெங்கும் நாடும் நகரமும்
தம்முடைத் தீவினை தீர்க்கலுற்றுத்
தெளித்து வலம்செய்யும் தீர்த்தமுடைத்
திருமாலிருஞ் சோலை எந்தாய்.

—பெரியாழ்வார்.

இந்திர ஞாலம்—இந்திரஜாலம், மாய வித்தை.

திருவீழிமிழலை

55 'நமன்தமர்தம் கோட்பட்டு நும்மை மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே'

தோட்பட்ட நாகமும் சூலமும்
 சுற்றியும் பத்திமையால்
மேற்பட்ட அந்தணர் வீழியும்
 என்னையும் வேறுடையீர்
நாட்பட்டு வந்து பிறந்தேன்
 இறக்க நமன் தமர்தம்
கோட்பட்டு நும்மை மறக்கினும்
 என்னைக் குறிக்கொண்மினே.

—திருநாவுக்கரசர்.

தோட்பட்ட—தோளிலே பொருந்திய. வீழி—திருவீழி மிழலை. நமன்தமர்—எமதூதர்.

திருவாரூர்

56. 'வளைத்துக் கொண்டிருந்தேன் வலிசெய்து போக லொட்டேன்'

முளைத்த வெண்பிறை மொய்சடை உடையாய்
 எப்போதுமென் நெஞ்சிடம் கொள்ள
வளைத்துக் கொண்டிருந்தேன்
 வலிசெய்து போக லொட்டேன்
அளைப்பிரிந்த அலவன் போய்ப்புகுதந்த காலமும்
 கண்டு தன் பெடை
திளைக்கும் தண்கழனித்
 திருவாரூர் அம்மானே.

—திருநாவுக்கரசர்.

அளை—வளை. அலவன்—நண்டு. திளைக்கும்—கூடி மகிழும்.

பொது

57. 'பாவம் எல்லாம் கைவிட்டு ஓடித் தூறுகள் பாய்ந்தனவே'

எம்மனாஎன் குலதெய்வமே!
என்னுடைய நாயகனே!
நின்னுளேனாய்ப் பெற்றநன்மை
இவ்வுலகினில் ஆர்பெறுவார்?
நம்மன்போலே வீழ்த்தமுக்கும்
நாட்டில்உள்ள பாவம்எல்லாம்
சும்எனாதே கைவிட்டுஓடித்
தூறுகள் பாய்ந்தனவே.

—பெரியாழ்வார்.

எம்மனா—எங்கள் மன்னவனே. நமன் என்னும் சொல் எதுகை நோக்கி நம்மன் என வந்தது. இயமன் என்பது பொருள். தூறுகள்—அடர்ந்த புதர்கள்.

பொது

58. 'பேசவும் தரியாத பெண்மையில் பேதையேன் பேதை'

பேசவும் தரியாத பெண்மையில்
பேதையேன் பேதை இவள்
கூசமின்றி நின்றார்கள் தம்மெதிர்
கோல் கழிந்தான் மூழையாய்க்
கேசவா என்றும் கேடிலீஎன்றும்
கிஞ்சுக வாய் மொழியாள்
வாசவார் குழல் மங்கைமீர்
இவள் மால்உறு கின்றாளே.

—பெரியாழ்வார்.

பொது

57. 'முன்புஉள்ளவற்றை முழுது அழிய உள்புகுந்த ஆண்டான்'

என்புள் உருக்கி இருவினையை ஈடுஅழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள் ளவற்றை முழுதுஅழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

—மாணிக்கவாசகர்.

ஈடு அழித்து—வலிமை கெடச் செய்து. துவந்துவங்கள்—பற்றுக்கள்.

திருக்கடம்பந்துறை

58. 'முற்றிலா முலையாள் இவளாகிலும் அற்றம் தீர்க்கும் அறிவிலளாகிலும்'

முற்றி லாமுலை யாள்இவள் ஆகிலும்
அற்றம் தீர்க்கும் அறிவிலள் ஆகிலும்
கற்றைச் செஞ்சடை யான்கடம் பந்துறைப்
பெற்றம் ஊர்திஎன் றாள்எங்கள் பேதையே.

—திருநாவுக்கரசர்.

பெற்றம் ஊர்தி—காளையை வாகனமாக உடையவர், சிவபெருமான்.

பொது

59. 'எண்ணினேன் என்னைக் குறிக்கொண்டு என்றும்'

தண்ணன வில்லை நமன் தமர்கள்
சாலக் கொடுமைகள் செய்யா நிற்பர்
மண்ணொடு நீரும் எரியும் காலும்
மற்றும் ஆகாசமும் ஆகி நின்றாய்
எண்ணலாம்போதே உன்நாம மெல்லாம்
எண்ணினேன் என்னைக் குறிக்கொண்டு என்றும்
அண்ணலே நீஎன்னைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே.

—பெரியாழ்வார்.

தண்ணனவு—குளிர்ந்த தன்மை, இரக்கம். சால—மிகவும். குறிக்கொண்டு—ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, குறித்துக்கொண்டு.

பொது

60. 'நானுன்னை நாடொறும் ஏத்தும் நன்மையே அருள்'

வண்ணமால் வரையே குடையாக
மாரிகாத் தவனே மதுசூதா
கண்ணனே கரிகோள் விடுத்தானே
காரணா களிறுஅட்ட பிரானே
எண்ணுவார் இடரைக் களைவானே
ஏத்தரும் பெருங்கீர்த் தியினானே
நண்ணிநான் உன்னைநாடொறும் ஏத்தும்
நன்மையே அருள்செய் எம்பிரானே.

—பெரியாழ்வார்.

வண்ணமால் வரை—அழகிய பெரிய மலை. மாரி—மழை. களிறு—ஆண்யானை. அட்ட—கொன்ற. ஏத்தரும்—துதிப்பதற்கு அரிய.

திருவீழிமிழலை

59. 'மறக்கினும் என்னைக் குறிக் கொண்மினே'

அந்தமும் ஆதியும் ஆகி நின்றீர்
அண்டம் எண்திசையும்
பந்தமும் வீடும் பரப்புகின்றீர்
பசு வேற்று உகந்தீர்
வெந்தழல் ஓம்பும் மிழலையுள்ளீர்
என்னைத் தென்திசைக்கே
உந்திடும் போது மறக்கினும் என்னைக்
குறிக்கொண்மினே.

—திருநாவுக்கரசர்.

உந்திடும் போது—தள்ளுகின்ற காலத்தில். குறிக் கொண்மின்—மறவாமல் நினைவிற் கொள்ளுங்கள்.

பொது

60. 'நின்றன்வார் கழற்கன் பெனக்கு நிரந்தரமா யருளாய்'

பரந்துபல் லாய்மலர் இட்டு
முட் டாதடி யேஇறைஞ்சி
இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்
என்னும் அன்பர் உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே
நின்றன் வார்கழற்கு அன்பெனக்கு
நிரந்தர மாய் அருளாய்
நின்னை ஏத்த முழுவதுமே.

—மாணிக்கவாசகர்.

பரந்து—பல இடங்களுக்கும் சென்று. முட்டாது—குறையில்லாமல். இறைஞ்சி—தொழுது.

பொது

61. ‘உனக்குப் பணி செய்திருக்கும் தவமுடையேன்’

உனக்குப் பணிசெய் திருக்கும்
தவமுடை யேன்இனிப் போய்ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை
நிற்கைநின் சாயை அழிவுகண்டாய்
புனத்தினைக் கிள்ளிப் புதுஅவி
காட்டியுன் பொன்னடி வாழ்கவென்று
இனக்குறவர் புதிய துண்ணும்
எழில்மாலிருஞ் சோலை எந்தாய்!

—பெரியாழ்வார்.

கடைத்தலை—வாயிற்படி. சாயை—பெருமை, இயல்பு.

பொது

62. ‘அனத்தக் கடலுள் அழுந்தி உன்பேரருளால் இக்கரை ஏறி இளைத்திருந்தேன்’

அக்கரை என்னும் அனத்தக்
கடலுள் அழுந்திஉன் பேரருளால்
இக்கரை ஏறி இளைத்திருந்தேனை
அஞ்சேல் என்று கைகவியாய்
சக்கர மும்தடக் கைகளும்
கண்களும் பீதக ஆடையொடும்
செக்கர் நிறத்துச் சிவப்புடையாய்
திருமாலிருஞ் சோலை எந்தாய்.

—பெரியாழ்வார்.

அக்கரை—உலகியல் வாழ்க்கை. அனத்தம்—அழிவு, கேடு. கை கவியாய்—அஞ்சேல் என்று கைகாட்டி அருளுக. பீதகம்—பொன்.

பொது

61. 'நினதடி யாரொடல்லால் நரகம் புகினும் எள்ளேன்'

கொள்ளேன் புரந்தரன் மால்அயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடு
அல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம்
உன்னையல் லாதெங்கள் உத்தமனே.

—மாணிக்கவாசகர்.

நள்ளேன்—நட்புச் செய்ய மாட்டேன். எள்ளேன் இகழ மாட்டேன். உள்ளேன்—நினைக்க மாட்டேன்.

திருவாவடுதுறை

62. 'இடர்க்கடலுள் கழிக்கப் பட்டு இங்கு இளைக்கின்றேற்கு அக்கரைக்கே ஏறவாங்கும்'

பேணியநற் பிறைதவழ் செஞ்சடையி னானைப்
பித்தராம் அடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை இடர்க்கடலுள் சுழிக்கப் பட்டிங்கு
இளைகின்றேற்கு அக்கரைக்கே ஏற வாங்கும்
தோணியைத் தொண்டனேன் தூய சோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர் பொன்காசின்
ஆணியை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே.

—திருநாவுக்கரசர்.

அக்கரை—முத்தியாகிய கரை.

பொது

63. 'வாயில் பல்லும் எழுந்தில மயிரும் முடிகூடிற்றில'

வாயில் பல்லும் எழுந்தில
மயிரும் முடிகூடிற்றில
சாய்விலாத குறுந்தலைச் சில
பிள்ளைக ளோடுஇணங்கித்
தீயிணக் கிணங்காடி வந்துஇவள்
தன்னன்ன செம்மை சொல்லி
மாயன் மாமணி வண்ணன்மேல்
இவள்மால் உறுகின்றாளே.

—பெரியாழ்வார்.

இணங்கி—நட்புக் கொண்டு. மால் உறுகின்றாள்—காதல் மயக்கம் அடைகின்றாள்.

பொது

64. 'சரமழை போல் வாழ உலகினில் பெய்திடாய்'

ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழிஅம் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

—ஸ்ரீ ஆண்டாள்.

ஆழி—வட்டம், கடல், சக்கரம். பாழி—பருத்த. வலம்புரி—சங்கம். சார்ங்கம்—வில்.

திருக்கழிப்பாலை

63. 'மழலைதான் வரச் சொல் தெரிகின்றிலள்'

மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலள்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலைஎம் அண்ணலே
இகழ்வ தோஎனை ஏன்றுகொள் என்னுமே.

—திருநாவுக்கரசர்.

குழலின் நேர்மொழி—வேய்ங் குழலைப் போன்ற சொற்களையுடையவள். ஏன்று கொள்—ஏற்றுக் கொள்.

பொது

64. "இன்னருளே என்னப் பொழியாய்"

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சில்குலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

—மாணிக்கவாசகர்.

முன்னி—நினைத்து. இட்டிடை—மிகச்சிறியஇடை
முன்னி—முந்தி, கருதி.

பொது

65. 'நரகநாசனை நாவில் கொண்டழையாத மானிடர் பருகு நீரும் உடுக்கும் கூறையும் பாவம் செய்தன'

உரக மெல்அணை யான்கை யில்உறை
சங்கம் போல்மட அன்னங்கள்
நிரைகணம் பரந்தேறும் செங்
கமல வயல்திருக் கோட்டியூர்
நரக நாசனை நாவிற்கொண்டு அழை
யாத மானிட சாதியர்
பருகு நீரும் உடுக்கும் கூறையும்
பாவம் செய்தன தாம்கொலோ.

—பெரியாழ்வார்.

உரகம்—பாம்பு. நிரை—வரிசை. கணம்—கூட்டம், தொகுதி.

பொது

66. 'மூன்றடி நிமிர்த்து மூன்றினில் தோன்றி மூன்றினில் மூன்றுருவானான்'

மூன்றெழுத் ததனை மூன்றெழுத் ததனால்
மூன்றெழுத் தாக்கி மூன்று எழுத்தை
ஏன்றுகொண்டு இருப்பார்க்கு இரக்கம் நன்குஉடைய
எம்புரு டோத்தமன் இருக்கை
மூன்றடி நிமிர்த்து மூன்றினில் தோன்றி
மூன்றினில் மூன்றுஉரு ஆனான்
கான்தடம் பொழில்சூழ் கங்கையின் கரைமேல்
கண்டமென் னும்கடி நகரே.

—பெரியாழ்வார்.

மூன்றெழுத்ததனை—அகரம், உகரம், மகரம் என்ற மூன்று எழுத்துக்களால் ஆகிய பிரணவத்தை. மூன்றெழுத்ததனால்—நிருத்தம் என்னும் நூலின்படி. மூன்று அடி நிமிர்த்து—பிரணவத்தை நம பதத்தோடும், நாராயண பதத்தோடும் கூட்டி அஷ்டாட்சரம் ஆக்கி. மூன்றினில் தோன்றி—சேஷத்துவம், அநந்நிய சரணத்துவம், அநந்நிய போக்கியத்துவம் என்னும் மூன்றையும் தோற்றுவித்து. மூன்றுருவானான்—சேஷத்துவம், சரண்யத்துவம், ப்ராப்யத்துவம் ஆகிய மூன்றின் வடிவமான இறைவன்.

பொது

65. 'அம்பலவாணர்தமைப் போற்றுதவர்க்கு அடையாளம் சோற்றுஆவி யற்றுச் சுற்றத் துணியுமற்று'

ஆற்றெடு தும்பை அணிந்தாடும்
அம்பல வாணர் தமை
போற்று தவர்க்கடை யாளம்உண்
டேஇந்தப் பூதலத்தில்
சோற்றுவி அற்றுச் சுகமற்றுச்
சுற்றத் துணியுமற்றே
ஏற்றலும் பிச்சை கிடையாமல்
ஏக்கற்று இருப்பார்களே.

—பட்டினத்தார்.

ஏக்கற்று—ஆசையால் தாழ்ந்து. ஏற்றலும்—பிச்சை எடுத்தாலும். பூதலத்தில்—உலகத்தில்.

பொது

66. 'மூன்று மூர்த்தியுள் நின்றியலும் தொழில் மூன்றும் ஆயின'

மூன்று மூர்த்தியுள் நின்றியலும் தொழில்
மூன்றும் ஆயின மூவிலைச் சூலத்தன்
மூன்று கண்ணினன் தீத்தொழில் மூன்றினன்
மூன்று போதும்என் சிந்தையுள் மூழ்குமே.

—திருநாவுக்கரசர்.

மூன்று மூர்த்தி—பிரமன், திருமால், உருத்திரன். தொழில் மூன்று—ஆக்கல், அளித்தல், அழித்தல். தீத்தொழில் மூன்று—ஆகவநீயம், தட்சிணாக்கினியம், காருக பத்தியம் என்னும் மூன்று எரிகளையும் வளர்த்தல். மூன்று போது—காலை, மாலை, நண்பகல்.

பொது

67. 'நெய்க்குடத்தைப் பற்றி ஏறும் எறும்புகள் போல்'

நெய்க்குடத்தைப் பற்றி ஏறும்
எறும்புகள்போல் நிரந்து எங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்
காலம்பெற உய்யப் போமின்
மெய்க்கொண்டு வந்து புகுந்து
வேதப் பிரானார் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணை யோடும்
பண்டன்று பட்டினம் காப்பே.

—பெரியாழ்வார்.

நிரந்து—வரிசையாக அமைந்து. பண்டன்று—முன்னைப் போல் அன்று. பட்டினம் காப்பு—எம்பெருமானுக்குப் பட்டினமாகிய இவ்வான்மா அவனால் காக்கப் பெறுகின்றது.

பொது

68. 'மூலமாகிய ஒற்றை எழுத்தை மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி'

மேல் எழுந்ததோர் வாயுக் கிளர்ந்து
மேல்மிடற்றினை உள்ளெழ வாங்கிக்
காலும் கையும் விதிர்விதிர்த்து ஏறிக்
கண்உறக்கமது ஆவதன் முன்னம்
மூலம் ஆகிய ஒற்றை எழுத்தை
மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி
வேலை வண்ணனை மேவுதிர் ஆகில்
விண்ணகத்தினில் மேவலும் ஆமே.

—பெரியாழ்வார்.

கண் உறக்கம் ஆதல்—இறத்தல். மேவல்—சென்று அடைதல். ஒற்றை எழுத்து—பிரணவம்.

பொது

67. 'மெள்ளனவே மொய்க்கும் நெய்க்குடந்தன்னை எறும் பெனவே'

உள்ளன வேநிற்க இல்லன
செய்யும் மையல்துழனி
வெள்ளன லேனை விடுதிகண்
டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய்
புலன்நின்கண் போதல்ஒட்டா
மெள்ளன வேமொய்க்கும் நெய்க்குடம்
தன்னை எறும்பெனவே.

—மாணிக்கவாசகர்.

மையல்—மயக்கம். துழனி—ஒலி, ஆரவாரம். வெள்ளன்—கபடம் இல்லாதவன், நல்லவன். வெள்ளன் அலேன்—கள்வன். பொள்ளல்—துளை. வேழத்து உரியாய்—யானையின் தோலைப் போர்வையாகக் கொண்டவனே.

பொது

68. 'ஓங்காரமாய் நின்ற அத்துவிலே ஒருவித்து வந்து'

ஓங்கார மாய்நின்ற அத்துவி லேயொரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயன்அறிந் தால்பதி னுல்உலகும்
நீங்காமல் நீங்கி நிறையா நிறைந்து நிறையுருவாய்
ஆங்கார மானவர்க்கு எட்டாக் கனிவந்து
[அமர்ந்திடுமே.

—பட்டினத்தார்.

ஆங்காரமானவர்—செருக்கு மிக்கவர்கள், அகங்காரம் உடையவர்கள்.

பொது

69. 'அற்றம் உரைக்கின்றேன் ஆழ்வினைகள் உமக்கு இங்கோர் பற்றில்லை கண்டீர் நடமின்'

உற்றவுறு பிணி நோய்காள்
   உமக்கொன்று சொல்லுகேன் கேண்மின்
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார்
   பேணும் திருக்கோயில் கண்டீர்
அற்றம் உரைக்கின்றேன் இன்னும்
   ஆழ்வினைகாள் உமக்கு இங்குஓர்
பற்றில்லை கண்டீர் நடமின்
   பண்டன்று பட்டினம் காப்பே.

—பெரியாழ்வார்.

பெற்றங்கள்–பசுக்கள். அற்றம்–அறுதி, முடிவு.

பொது

70. 'தொண்டக் குலத்தில் உள்ளீர்வந்து அடிதொழுது'

அண்டக் குலத்துக்கு அதிபதி ஆகி
   அசுரர் இராக்கதரை
இண்டக் குலத்தை எடுத்துக் களைந்த
   இருடீகே சன்தனக்குத்
தொண்டக் குலத்திலுள் ளீர்வந்து அடிதொழுது
   ஆயிரம் நாமம்சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு
   பல்லாயிரத்தாண்டு என்மினே.

—பெரியாழ்வார்.

அண்டக்குலம்–அண்டங்களின் கூட்டங்கள். இண்டக் குலம்–நெருக்கமான கூட்டம்.

பொது

69. 'ஒன்றினல் குறைஉடையோ மல்லோம் உறு பிணியார் செறல் அழிந்திட்டு ஓடிப்போனர்'

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிர்ஆ வாரும் இல்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்ருேம்
ஒன்றினல் குறையுடையோம் அல்லோம் அன்றே
உறுபிணியார் செறல்ஒழிந்திட்டு ஓடிப் போனர்
பொன்றினர் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்துள் ளோமே.

—திருநாவுக்கரசர்.

இடைவோம்—பிற்படுவோம். எதிர் ஆவார்—ஒப்பாகக் கூடியவர்கள். செறல்—துன்புறுத்தல். பொன்றினர்—இறந்தவர்களின்.

பொது

70. 'சுருதிப் பொருள் சோதித்த தூய்மனத் தொண்டர் உள்ளீர்'

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டர்உள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதம்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

—சேந்தனர்.

சுருதி—வேதம். சோதித்த—ஆராய்ந்த, உணர்ந்த. விடங்கன்—பேரழகன்; உளியினல் செதுக்கப்படாதவன். பதம்—நிலை, இயல்பு.

பொது

71. 'வாழ்த்துக வாய்; காண்க கண்; கேட்க செவி'

வாழ்த்துகவாய் காண்ககண் கேட்க செவிமகுடம்
தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால்—சூழ்த்த
துழாய்மன்னு நீள்முடிஎன் தொல்லைமால் தன்னை
வழாவண்கை கூப்பி மதித்து.

—திருமழிசையாழ்வார்.

சூழ்த்த—சூழ்ந்த. வழா—வழுவாமல்.

பொது

72. 'நீயே உலகு எல்லாம்'

நீயே உலகுஎல்லாம் நின்அருளே நிற்பனவும்
நீயே தவத்தேவ தேவனும்—நீயே
எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்து
இருசுடரும் ஆய இவை.

—திருமழிசையாழ்வார்.

எரிசுடர்—அக்கினி, நெருப்பு. இருசுடர்—சூரிய சந்திரர்கள்.

பொது

71. 'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்'

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடும் காலமே.

—திருநாவுக்கரசர்.

தாழ்த்த—வணங்க. சென்னி—தலை. வீழ்த்தவா—வீணாகக் கழித்துவிட்ட தன்மை என்னே! சூழ்த்த—ஆராய்ந்து எடுக்கப்பட்ட.

திருவையாறு

72. 'எல்லா உலகமும் ஆனாய் நீயே'

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடிஎன்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொன் சோதி.

—திருநாவுக்கரசர்.

செல்வாய செல்வம்—செல்வங்களுள் எல்லாம் மேலான செல்வம். செல்வு—செல்வம்; உலகு, உலகம் என்பது போல.

பொது

73. 'கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா'

கூற்றமும் சாரா கொடுவினையும் சாராதீ
மாற்றமும் சாரா வகைஅறிந்தேன்—ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைக்கிடக்கும் உள்ளத்து எனக்கு.

—திருமழிசையாழ்வார்.

கூற்றம்—இயமன். தீமாற்றம்—தீய பழிச்சொல்.

பொது

74. 'பூ நிலாய ஐந்துமாய்'

பூநிலாய ஐந்துமாய்ப் புனல்கண்நின்ற நான்குமாய்த்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகால் இரண்டுமாய்
மீநிலாயது ஒன்றும்ஆகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம் நின்னை யார்நினைக்க வல்லரே.

—திருமழிசையாழ்வார்.

பூ—பூமி, பிருதிவி. கால்—காற்று. மீ—விசும்பு, ஆகாயம்.
நிலாய வண்ணம்—விளங்கும் தன்மை.

சிதம்பரம்

73. 'அல்லல் என்செயும் அருவினை என்செயும்'

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமைபூண் டேனுக்கே.

—திருநாவுக்கரசர்.

வல்வினைத் தொந்தம்—வினைப் பயனால் வரும் சுகம், துக்கங்கள்.

பொது

74. 'பூ விலாய ஐந்துமாய்'

பூவி லாய ஐந்துமாய்ப் புனலில் நின்ற நான்குமாய்த்
தீயி லாய மூன்றுமாய்ச் சிறந்தகால் இரண்டுமாய்
வேயி லாயது ஒன்றுமாய் வேறு வேறு தன்மையாய்
நீய லாமல் நின்ற நேர்மை யாவர்காண வல்லரே.

—சிவவாக்கியர்.

பூ—நிலம். புனல்—நீர். கால்—காற்று.

பொது

75. 'ஆதியான வானவர்க்கும் ஆதியான ஆதிநீ'

ஆதியான வானவர்க்கும் அண்டமாய அப்புறத்து
ஆதியான வானவர்க்கும் ஆதியான ஆதிநீ
ஆதியான வானவாணர் அந்தகாலம் நீஉரைத்தி
ஆதியான காலம்நின்னை யாவர்காண வல்லரே!

—திருமழிசையாழ்வார்.

ஆதி—முதல், தொடக்கம். அந்தகாலம்—முடிவுகாலம்.

பொது

76. 'மாலைவாழ்த்தினால் பறிந்து, எழுந்து தீவினைகள் பற்று அறுதல் பான்மையே'

அறிந்துஅறிந்து வாமனன் அடியிணை வணங்கினால்
செறிந்துஎழுந்த ஞானமோடு செல்வமும் சிறந்திடும்
மறிந்துஎழுந்த தெண்திரையுள் மன்னும்மாலை [வாழ்த்தினால்
பறிந்துஎழுந்து தீவினைகள் பற்றுஅறுதல் பான்மையே.

—திருமழிசையாழ்வார்.

செறிந்து—ஒடுங்கி. பறிந்து—பறிக்கப் பெற்று. பற்றறுதல்—நீங்குதல்.

பொது

75. 'அண்டம் நீ அகண்டம் நீ ஆதிமூலமான நீ'

அண்டம்நீ அகண்டம்நீ ஆதிமூலம் ஆனநீ
கண்டம்நீ கருத்தும்நீ காவியங்கள் ஆனநீ
புண்டரீக மன்றுளே புணருகின்ற புண்ணியர்
கொண்டகோல மானநேர்மை கூர்மைஎன்ன
[கூர்மையே.

—சிவவாக்கியர்.

கண்டம்—அளவுபட்டது. அகண்டம்—அளவுபடாதது. புண்டரீக மன்று—தாமரை வடிவில் உள்ள மனமாகிய மன்றம். கூர்மை—மிகுதி.

திருவண்ணமலை

76. 'ஆடிப் பாடி அண்ணமலை கைதொழ, ஓடிப்போம் நமது உள்ள வினைகளே'

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடிஅண் ணமலை கைதொழ
ஓடிப் போம்நமது உள்ள வினைகளே.

—திருநாவுக்கரசர்.

திருந்தடி—அழகிய பாதங்கள். உள்ள வினைகள்—பற்றி இருக்கும் பாவங்கள்.

பொது

77. 'நின் இலங்கு பாதம் அன்றி மற்ருேர் பற்றிலேன்'

குலங்கள்ஆய ஈர்இரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்
நலங்கள்ஆய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன்
புலன்கள்ஐந்தும் வென்றிலேன் பொறியிலேன்
[புனிதநின்
இலங்குபாதம் அன்றிமற்ருேர் பற்றிலேன்எம் ஈசனே.
—திருமழிசையாழ்வார்.

பொறியிலேன்—அறிவு இல்லாதவன் ஆகிய நான்.

பொது

78. 'ஐயிலாய ஆக்கை நோய் அறுத்து வந்து'

வெய்ய ஆழி சங்குதண்டு
வில்லும் வாளும் ஏந்துசீர்க்
கைய செய்ய போதில்மாது
சேரும் மார்ப நாதனே
ஐயில் ஆய ஆக்கைநோய்
அறுத்து வந்து நின்அடைந்து
உய்வ தோர் உபாயம்நீ
எனக்கு நல்க வேண்டுமே.
—திருமழிசையாழ்வார்.

செய்ய போது—செந்தாமரை மலர். ஐயில் ஆய—ஐம் பூதங்களால் உண்டாகிய.

பொது

77. 'நின் திருவடிக்காம் பவமே அருளு கண்டாய்'

தவமே புரிந்திலன் தண்மலர்
இட்டு முட்டாது இறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன்
உனக்கு அன்பருள்ளாம்
சிவமே பெறும்திரு எய்திற்றிலேன்
நின் திருவடிக்காம்
பவமே அருளுகண் டாய்அடி
யேற்குஎம் பரம்பரனே.

—மாணிக்கவாசகர்.

இட்டு—வைத்து, தூவி. முட்டாது—முறையில்லாமல். அவமே—வீணாக. அருவினையேன்—கொடிய பாவியாகிய நான். பவம்—பிறப்பு.

திருக்கொண்டீச்சரம்

78. 'புலன்கள் ஐந்தும் வரைகிலாப் பிறவி மாய'

வரைகிலேன் புலன்கள் ஐந்தும்
வரைகிலாப் பிறவி மாயப்
புரையிலே அடங்கி நின்று
புறப்படும் வழியும் காணேன்
அரையிலே மிளிரும் நாகத்து
அண்ணலே அஞ்சல் என்னாய்
திரைஉலாம் பழன வேலித்
திருக்கொண்டீச் சரத்து ளானே.

—திருநாவுக்கரசர்.

வரைகிலேன்—நீக்க முடியாமல் உள்ளேன். வரைகிலா—அளவிட முடியாத. புரை—ஒடுக்கமான இடம், குற்றம். அரை—இடுப்பு. திரை—அலை. பழனம்—வயல்.

பொது

79. 'பாதபங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே'

இரந்துஉரைப்பது உண்டுவாழி ஏமநீர் நிறத்தமா
வரம்தரும் திருக்குறிப்பில் வைத்ததாகில் மன்னுசீர்ப்
பரந்தசிந்தை ஒன்றிநின்று நின்னபாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக நீநினைக்க வேண்டுமே.

—திருமழிசையாழ்வார்.

பரந்து—பல இடங்களுக்கும் சென்று.

பொது

80. 'சேவடி ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே'

தோய்த்த தண்தயிர் வெண்ணெய்
பாலுடன் உண்டலும் உடன்று ஆய்ச்சிகண்டு
ஆர்த்த தோள்உடை எம்பிரான்
என் அரங்கனுக்கு அடியார்களாய்
நாத்தழும்பு, எழநாரணா என்றுஅழைத்து
மெய் தழும்பத் தொழுது
ஏத்தி இன்புறும் தொண்டர் சேவடி
ஏத்தி வாழ்த்தும் என்நெஞ்சமே.

—குலசேகராழ்வார்.

தழும்பு—வடு. சேவடி—செம்மையான பாதங்கள்.

பொது

79. 'உன்றன் வார்கழற்கு அன்பு எனக்கு நிரந்தரமாய் அருளாய்'

பரந்துபல் ஆய்மலர் இட்டு
முட்டாது அடியே இறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெறலாம்
என்னும் அன்பர் உள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
வார்கழற்கு அன்பு எனக்கு
நிரந்தர மாய்அரு ளாய்
நின்னை ஏத்த முழுவதுமே.

—மாணிக்கவாசகர்.

நின்ன—உன்னுடைய. பாதபங்கயம்—திருவடித் தாமரை.
நிரந்தரம்—எப்பொழுதும்.

பொது

80. 'சிந்தையுள் எம்மானைக் கண்டுகொண்டது என் உள்ளமே'

அம்மானை அமுதின் அமுதே என்று
தம்மானைத் தத்துவத்து அடியார் தொழும்
செம்மான நிறம்போல் வதோர் சிந்தையுள்
எம்மானைக் கண்டுகொண்டது என் உள்ளமே.

—திருநாவுக்கரசர்.

எம்மான்—சிவபெருமான்.

பொது

81. 'இச்சுவை தவிர...இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்'

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

அச்சுதன்—அழிவில்லாதவன். அமரர் ஏறு—தேவர்களின் தலைவன், சிங்கம் போன்றவன்.

பொது

82. 'என்செய்வான் தோன்றினேனே'

போதெல்லாம் போது கொண்டுஉன்
பொன்அடி புனைய மாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டுஉன்
திருக்குணம் செப்ப மாட்டேன்
காதலால் நெஞ்சம் அன்பு
கலந்திலேன் அதுதன் னாலே
ஏதிலேன் அரங்கர்க்கு எல்லே
என்செய்வான் தோன்றி னேனே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

போதெல்லாம்—காலம் எல்லாம். போது—பூக்கள். ஏதிலேன்—எதுவும் இல்லாத நான்.

பொது

81. ‘வானேயும் பெறில் வேண்டேன்; உன்அருள் பெறுநாள் என்று? என்றே வருந்துவனே’

யான்ஏதும் பிறப்புஅஞ்சேன்
இறப்பதனுக்கு என்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
மண்ஆள்வான் மதித்தும்இரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச்
சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள்
என்று என்றே வருந்துவனே.

—மாணிக்கவாசகர்.

மண் ஆள்வான்—உலகத்தை ஆள்வதற்கு.

பொது

82. ‘என்செய்வான் தோன்றினேனே’

வென்றிலேன் புலன்கள் ஐந்தும்
வென்றவர் வளாகம் தன்னுள்
சென்றிலேன் ஆத லாலே
செந்நெறி அதற்கும் சேயேன்
நின்றுளே துளும்பு கின்றேன்
ஈசனே ஈச னேயோ
இன்றுளேன் நாளை இல்லேன்
என்செய்வான் தோன்றி னேனே.

—திருநாவுக்கரசர்.

வளாகம்—இடப்பரப்பு. செந்நெறி—செம்மையான நல் வழி. துளும்புகின்றேன்—கலங்குகின்றேன்.

பொது

83. 'உள்குவார் உள்ளிற்று எல்லாம் உடன்இருந்து அறிதி என்று வெள்கிப்போய் என்உள்ளே நான் விலவறச் சிரித் திட்டேனே'

உள்ளத்தே உறையும் மாலே
  உள்ளுவான் உணர்வுஒன்று இல்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
  தொண்டுக்கே கோலம் பூண்டு
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம்
  உடன்இருந்து அறிதி என்று
வெள்கிப்போய் என்னுள் ளேநான்
  விலவறச் சிரித்திட் டேனே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

உள்ளுவான் — நினைப்பதற்கு. அறிதி — அறிகின்றூர்.
விலவற—விலா எலும்பு உடைந்து போகும்படி.

பொது

84. 'அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே'

கதிரவன் குணதிசைச் சிகரம்வந்து அணைந்தான்
  கனஇருள் அகன்றது காலைஅம் பொழுதாய்
மதுவிரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்
  வானவர் அரசர்கள் வந்துவந்து ஈண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
  இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுஉளது எங்கும்
  அரங்கத்தம்மா பள்ளி எழுந்தரு ளாயே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

கதிரவன் — சூரியன். குணதிசை — கிழக்குப் பக்கம்.
பிடி—பெண் யானை. மது—தேன்.

பொது

83. 'உள்குவார் உள்கிற்று எல்லாம் உடன் இருந்து அறிதி என்று வெள்கினேன் வெள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே'

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற்று எல்லாம்
உடன்இருந்து அறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட் டேனே.

—திருநாவுக்கரசர்.

தெள்ளியேன்—தெளிவு பெற்றவன். உள்கிற்று எல்லாம்—நினைந்தவை யாவும். அறிதி—அறிகின்றாய். வெள்கினேன்—நாணம் அடைந்தேன்.

திருப்பெருந்துறை

84. 'எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே'

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்குஅருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

—மாணிக்கவாசகர்.

வாழ்முதல்—வாழ்க்கைக்கு இன்றியமையாத முதல் பொருள். புலர்ந்தது—பொழுது விடிந்தது. ஏற்றுயர் கொடி—ரிஷப வாகனக் கொடி. ஏறு—காளை மாடு, ரிஷபம்.

பொது

85. 'எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே'

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கல்அம் தொடையல்கொண்டு அடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

புலம்பின—ஒலி செய்தன. கங்குல்—இருள். கனை—ஒலிக்கின்ற. இலங்கையர் கோன்—விபீடணன்.

பொது

86. 'மெய்யர்க்கே மெய்யன் ஆகும்'

மெய்யர்க்கே மெய்யன் ஆகும்
விதியிலா என்னைப் போலப்
பொய்யர்க்கே பொய்யன் ஆகும்
புட்கொடி உடைய கோமான்
உய்யப்போம் உணர்வி னார்கட்கு
ஒருவன்என்று உணர்ந்த பின்னை
ஐயப்பாடு அறுத்துத் தோன்றும்
அழகனூர் அரங்கம் அன்றே ?

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

புட்கொடி—கருடன் ஆகிய கொடி. ஐயப்பாடு—சந்தேகம்.

திருப்பெருந்துறை

85. 'எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே'

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக்கு எளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

—மாணிக்கவாசகர்.

குருகுகள்—பறவைக் கூட்டக்கள். இயம்பின—ஒலித்தன. தாரகை ஒளி—நட்சத்திரங்களின் ஒளிகள். ஓவின—நீங்கின.

திருவீழிமிழலை

86. 'மெய்த்தவன்காண் மெய்த்தவத்தில் நிற்பார்க்கெல்லாம்'

மெய்த்தவன்காண் மெய்த்தவத்தில் நிற்பார்க் கெல்லாம்
விருப்பிலா இருப்புமன வினையர்க்கு என்றும்
பொய்த்தவன் காண்புத்தன் மறவா தோடி
எறிசல்லி புதுமலர்கள் ஆக்கி னான்காண்
உய்த்தவன்காண் உயர்கதிக்கே உள்கி னாரை
உலகனைத்தும் ஒளித்துஅளித்திட் டுய்யச் செய்யும்
வித்தகன்காண் வித்தகர்தாம் விரும்பி ஏத்தும்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே.

—திருநாவுக்கரசர்.

வினையர்க்கு—பாவிகளுக்கு. எறிசல்லி—வீசுகின்ற கற்கள். உய்த்தவன்—செலுத்தியவன், உய்வித்தவன். வித்தகன்—சதுரப்பாடு உடையவன். வித்தகர்—ஞானிகள். திருவீழிமிழலையில் உள்ள கோயிலுக்கு விண்ணிழி விமானம் என்பது பெயர்.

பொது

87. 'மனமாசு தீரும் அருவினையும் சாரா'

மனமாசு தீரும் அருவினையும் சாரா
தனம்ஆய தானே கைகூடும்—புனம்மேய
பூந்துழா யான்அடிக்கே போதொடு நீர்ஏந்தித்
தாம்தொழா நிற்பார் தமர்.

—பொய்கையாழ்வார்.

தமர்—உறவினர்.

பொது

88. 'அருவினையோடு அல்லல் நோய் பாவம் மிடைந்தவை மீண்டு ஒழிய'

அடைந்த அருவினையோடு அல்லல்நோய் பாவம்
மிடைந்தவை மீண்டுஒழிய வேண்டில்-நுடங்குஇடையை
முன்இலங்கை வைத்தான் முரண்அழிய முன்ஒருநாள்
தன்வில்அங்கை வைத்தான் சரண்.

—பொய்கையாழ்வார்.

நுடங்கு இடை—சீதை. முரண்—வலிமை. சரண்—அடைக்கலம்.

பொது

87. 'பெருகலாம் தவம் பேதைமை திரலாம்'

பெருக லாம்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருந்தலாம்
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்
மருக லான்அடி வாழ்த்தி வணங்கவே.

—திருநாவுக்கரசர்.

திருகல்—மாறுபடுதல். பருகலாம்—அநுபவிக்கலாம்.

திருநாகைக்காரோணம்

88. 'வினையுளே விழுந்து அழுந்தி வேதனைக்கு இடமாகாதே'

மனைவிதாய் தந்தை மக்கள்
மற்றுள சுற்றம் என்னும்
வினையுளே விழுந்து அழுந்தி
வேதனைக்கு இடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை
மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீர் ஆகில்
உய்யலாம் நெஞ்சி னீரே.

—திருநாவுக்கரசர்.

வேதனை—துன்பம், மனக்கவலை.

பொது

89. 'வினையால் அடர்ப்படார்'

வினையால் அடர்ப்படார் வெம்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார்—நினைதற்கு
அரியானைச் சேயானை ஆயிரம்பேர்ச் செங்கண்
கரியானைக் கைதொழுதக் கால்.

—பொய்கையாழ்வார்.

தீக்கதி—நரகம்.

பொது

90. 'பொன் ஆழி ஏந்தினன் பொன்அடியே சூடுவேற்கு என்ஆகில் என்னே எனக்கு?'

நாடிலும் நின்அடியே நாடுவன் நாள்தோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன்—சூடிலும்
பொன்ஆழி ஏந்தினன் பொன்அடியே சூடுவேற்கு
என்ஆகில் என்னே எனக்கு.

—பொய்கையாழ்வார்.

என் ஆகில் என்னே – எதுவந்தால்தான் என்ன கவலை!

திருநீடூர்

89. 'அல்லல் உள்ளன தீர்த்திடுவானை'

அல்லல் உள்ளன தீர்த்திடு வானை
அடைந்த வர்க்கமு தாயிடு வானைக்
கொல்லை வல்லர வம்அசைத் தானைக்
கோலம் ஆர்கரி யின்உரி யானை
நல்ல வர்க்குஅணி யானவன் தன்னை
நானும் காதல்செய் கின்ற பிரானை
எல்லி மல்லிகை யேகமழ் நீடூர்
ஏத்தி நாம்பணி யாவிட லாமே.

—சுந்தரர்.

கொல்லை—ஈண்டுப் புற்றினை உணர்த்திற்று. அசைத்தானை—அணிந்தவனை, கட்டியவனை. எல்லி—மாலைக் காலத்தில்.

பொது

90. 'வேலை நஞ்சு உண்டு ஊனம் ஒன்று இல்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே'

வானம் துளங்கில்என் மண்கம்பம்
ஆகில்என் மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு
மாறில்என் தண்கடலும்
மீனம் படில்என் விரிசுடர்
வீழில்என் வேலைநஞ்சுண்டு
ஊனம்ஒன்று இல்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே.

—திருநாவுக்கரசர்.

துளங்குதல்—அசைதல். கம்பம்—நடுங்குதல். விரிசுடர்—சூரிய சந்திரர்கள். ஊனம்—குறைபாடு.

பொது

91. 'கண்ணனையே காண்க நம் கண்'

நாமம் பலசொல்லி நாரா யணனென்று
நாம்அங் கையால்தொழுதும் நல்நெஞ்சே-வாம்அருவி
மண்ணுலகம் உண்டுஉமிழ்ந்த வண்டுஅறையும்
[தண்துழாய்
கண்ணனையே காண்கநம் கண்.

—பேயாழ்வார்.

அறையும்—ஒலிக்கின்ற.

பொது

92. 'இணை அடிக்கே ஆளாய் மறவாது வாழ்த்துக என்வாய்'

சென்றநாள் செல்லாத செங்கண்மால் எங்கள்மால்
என்றநாள் எந்நாளும் நாளாகும்—என்றும்
இறவாத எந்தை இணைஅடிக்கே ஆளாய்
மறவாது வாழ்த்துகஎன் வாய்.

—பேயாழ்வார்.

செல்லாத—பயன்படாதவை.

பொது

91. 'கண்காள் காண்மின்களோ'

கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன்தன்னை
எண்தோள் வீசிநின்று ஆடும்பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ.

—திருநாவுக்கரசர்.

கண்டன்—கழுத்தை உடையவன்.

பொது

92. 'வாயே வாழ்த்து கண்டாய்'

வாயே வாழ்த்து கண்டாய்—மத
யானை உரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும்பிரான் தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்.

—திருநாவுக்கரசர்.

பேய் வாழ் காடு—சுடுகாடு.

பொது

93. 'செம்பொன் கழல்பாடி யாம் தொழூதும் கை'

காண்காண் எனவிரும்பும் கண்கள் கதிர்இலகு
பூண்தார் அகலத்தான் பொன்மேனி—பாண்கண்
தொழில்பாடி வண்டுஅறையும் தொங்கலான்
[செம்பொன்
கழல்பாடி யாம்தொழுதும் கை.

—பேயாழ்வார்.

தார்—மாலை. அகலத்தான்—மார்பை உடையவன்.
தொங்கலான்—மாலையை அணிந்தவன்.

பொது

94. 'பிரான் அவன் எம்மான் சேரும் திருக்கோயில் கண்டீர் பங்கப்படாது உய்யப் போமின்'

மங்கிய வல்வினை நோய்காள்
உமக்கும்ஓர் வல்வினை கண்டீர்
இங்குப் புகேன்மின் புகேன்மின்
எளிதன்று கண்டீர் புகேன்மின்
சிங்கப் பிரான்அவன் எம்மான்
சேரும் திருக்கோயில் கண்டீர்
பங்கப் படாதுஉய்யப் போமின்
பண்டன்று பட்டினம் காப்பே.

—பெரியாழ்வார்.

பங்கப்படாது—குறைபாடு அடையாமல்,

பொது

93. 'கைகாள் கூப்பித் தொழீர்'

கைகாள் கூப்பித் தொழீர்—கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

—திருநாவுக்கரசர்.

கடிமாமலர்—மணம் வீசும் சிறந்த பூக்கள்.

திருவாரூர்

94. 'ஆரூர் உடையானைக் கடுகச் சென்று அடைவேன் உம்மால் ஆட்டுணேன்'

இடர்பாவம் எனமிக்க துக்க வேட்கை
வெறுப்பேஎன் றனைவீரும் உலகை ஒடிக்
குடைகின்றீர்க்கு உலகங்கள் குலுங்கி நுங்கள்
குறிநின்றது அமையாதே யானேல் வானோர்
அடையார்தம் புரம்மூன்றும் எரிசெய் தானை
அமரர்கள்தம் பெருமானை அரனை ஆரூர்
உடையானைக் கடுகச்சென்று அடைவேன் உம்மால்
ஆட்டுணேன் ஒட்டந்தீங்கு அலையேன் மின்னே.

—திருநாவுக்கரசர்.

அனைவீரும்—நீங்கள் எல்லோரும். குடைகின்றீர்—கலக்குகின்றீர்கள். அடையார்—பகைவர்கள். கடுகச் சென்று—விரைந்துபோய். ஆட்டுணேன்—ஆட்டப்படமாட்டேன். ஒட்டந்து—ஓடிவந்து. அலையேன்மின்—என்னை வருத்த முயலாதீர்கள், தொந்தரை செய்யாதீர்கள்.

பொது

95. ‘அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி.’

அன்றுஇவ் வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்இலங்கை செற்ருய் திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுஉன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்குஏலோர் எம்பாவாய்.

—ஸ்ரீ ஆண்டாள்.

சகடம்—சக்கரம், வண்டி. பொன்ற—அழிய. குணில்—எறிதடி. சேவகம்—வீரம், வெற்றிச் சிறப்பு. பறை கொள்வான்—பரிசு பெறுவதற்காக.

பொது

96. ‘இன்று நாராயணனை வரக் கூவாய்!’

அன்று உலகம் அளந்தானை உகந்து
அடிமைக்கண் அவன்வலி செய்யத்
தென்றலும் திங்களும் ஊடறுத்து என்னை
நலியும் முறைமை அறியேன்
என்றும் இக்காவில் இருந்து இருந்து
என்னைத் ததைத்தாதே நீயும் குயிலே
இன்று நாராயணனை வரக் கூவாயேல்
இங்குத்தை நின்றும் துரப்பன்.

—ஸ்ரீ ஆண்டாள்.

நலியும்—துன்புறுத்தும். இங்குத்தை நின்றும்—இங்கே இருந்து. துரப்பன்—ஓட்டித் துரத்திவிடுவேன்.

பொது

95. 'போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்'

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டுஅருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.

—மாணிக்கவாசகர்.

போற்றி—வணக்கம். புண்டரிகம்—தாமரை. இப்பாடலில் இறைவனின் ஐந்து தொழில்களும் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

பொது

96. 'செந்தழல்போல் திருமேனித் தேவர்பிரான் வரக்கூவாய்'

கொந்தணவும் பொழில் சோலைக்
கூங்குயி லேஇது கேள்நீ
அந்தணன் ஆகிவந் திங்கே
அழகிய சேவடி காட்டி
எந்தமர் ஆமிவன் என்றிங்கு
என்னையும் ஆட்கொண்டு அருளும்
செந்தழல் போல்திரு மேனித்
தேவர்பிரான் வரக் கூவாய்.

—மாணிக்கவாசகர்.

கொந்து அணவும்—பூக்கள் கொத்துக் கொத்தாகப் பொருந்தி இருக்கின்ற. எம் தமர் ஆம் இவன்—இவன் எங்கள் உறவினன் ஆவான். தழல்—நெருப்பின் நிறம்.

பொது

97. 'பொன்புரைமேனிக் கருளக் கொடியுடைப் புண்ணியனை வரக் கூவாய்'

என்புஉருகி இனவேல் நெடுங்கண்கள்
இமைபொருந்தா பலநாளும்
துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்
தோணிபெருது உழல்கின்றேன்
அன்புடையாரைப் பிரிவுறு நோய்அது
நீயும் அறிதி குயிலே
பொன்புரைமேனிக் கருளக் கொடியுடைப்
புண்ணிய னைவரக் கூவாய்.

—ஸ்ரீ ஆண்டாள்.

இமை பொருந்தா—உறக்கம் கொள்ளமாட்டா. புரை—போன்ற. கருளன்—கருடன்.

பொது

98. 'மையல் கொண்டொழிந்தேன் என்தன் மாலுக்கே'

மெய்யில் வாழ்க்கையை மெய்எனக் கொள்ளும்இவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்
ஐயனே அரங்கா என்று அழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந் தேன்என்தன் மாலுக்கே.

—குலசேகராழ்வார்.

பொது

97. 'கூடி ஊடுமாறும் இவை உணர்த்தவல்லீர்களே'

கூடும் அன்னப் பேடைகாள் குயில்வண்டுகாள்
ஆடும்அம் பொன்கழல் அடிகள் ஆரூரரைப்
பாடு மாறும் பணிந்தேத்து மாறும்கூடி
ஊடு மாறும்இவை உணர்த்தவல் லீர்களே.

—சுந்தரர்.

பேடை—பெண்பறவை.

பொது

98. 'மகிழ்ந்து ஆடும் கூத்தனுக்கு அன்புபட்டாள் என்றே'

பாடல் ஆக்கிடும் பண்ணொடு பெண்இவள்
கூடல் ஆக்கிடும் குன்றின் மணல்கொடு
கோடல் பூத்தலர் கோழம்பத் துள்மகிழ்ந்து
ஆடும் கூத்தனுக்கு அன்புபட் டாள்அன்றே.

—திருநாவுக்கரசர்.

கோடல்—காந்தள் மலர்கள்.

பொது

99. ‘குருகூர் நம்பிஎன்றும் என்னை இகழ்விலன் காண்மினே’

இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன்புகழ் ஏத்த அருளினன்
குன்ற மாடத் திருக்குரு கூர்நம்பி
என்றும் என்னை இகழ்விலன் காண்மினே.

—மதுரகவியாழ்வார்.

ஏத்த–துதிக்க. திருக்குருகூர்நம்பி–நம்மாழ்வார். இகழ்விலன்–புறக்கணித்து ஒதுக்குதல் இல்லாதவன்.

பொது

100. ‘அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக’

அன்பே தகளியா ஆர்வமே நெய்ஆக
இன்புஉருகு சிந்தை இடுதிரியா–நன்புஉருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

—பூதத்தாழ்வார்.

தகளி–அகல். சிந்தை–மனம்.

பொது

99. 'பொன்னடி இகழுமாறு இலன் எந்தை பிரானிரே'

திகழும் சூழ்சுடர் வாளெடு வைகலும்
நிகழும் ஒண்பொருள் ஆயின நீதியென்
புகழு மாறும் அலால்உன பொன்அடி
இகழு மாறுஇலன் எந்தை பிரானிரே!

—திருநாவுக்கரசர்.

அலால்—அல்லாமல். உன—உன்னுடைய.

பொது

100. 'உள்ளமே தகளியாக மடம்படு உணர்நெய் அட்டி'

உடம்பெனும் மனைய கத்து
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி
உயிர்எனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே.

—திருநாவுக்கரசர்.

மனையகத்து – வீட்டின் உள்ளே. தகளி—அகல். நெய் அட்டி—நெய்யை வார்த்து. திரிமயக்கி – திரியைத் திருகி இட்டு. இடம்படும்—பரந்த, விரிவான. கடம் பமர் காளை—கடம்ப மலர் மாலையை விரும்புகின்ற முருகன். தாதை—தந்தை, சிவபெருமான்.

பொது

101. ‘நலனுடை ஒருவனை நணுகினம் நாமே’

இலன்அது உடையன்இது எனநினைவு அரியவன்
நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்
புலனொடு புலன்அலன் ஒழிவுஇலன் பரந்தஅந்
நலன்உடை ஒருவனை நணுகினம் நாமே.

—நம்மாழ்வார்.

இலன் – இல்லாதவன். உடையன் – பெற்றிருப்பவன். நினைவரியவன்—நினைப்பதற்கும்கூட எட்டாதவன். ஒழிவு இலன்—நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவன். பரந்த—பரவியுள்ள. நலன்—சிறப்பு. நணுகினம்—அடைந்தோம், அணுகினோம்.

பொது

102. ‘பேரும் ஓர் உருவமும் உளது இல்லை’

யாரும்ஓர் நிலைமையன் எனஅறிவு
அரியஎம் பெருமான்
யாரும்ஓர் நிலைமையன் எனஅறிவு
எளியஎம் பெருமான்
பேரும்ஓர் ஆயிரம் பிறபல
உடையஎம் பெருமான்
பேரும்ஓர் உருவமும் உளதில்லை
இலதில்லை பிணக்கே.

—நம்மாழ்வார்.

யாரும்—எவ்வளவு உயர்ந்தவர்களும். யாரும்—எவ்வளவு தாழ்ந்தவர்களும். பிற பல—மற்ற எத்தனையோ வகைப்பட்ட. இல்லை பிணக்கு—வாதம் வேண்டுவது இல்லை.

திருவேதிகுடி

101. 'அன்பனை நம்மை உடையனை நாம் அடைந்து ஆடுதுமே'

முன்பின் முதல்வன் முனிவன்எம் மேலை வினைகழித்தான்
அன்பின் நிலையில் அவுணர் புரம்பொடி யானசெய்யும்
செம்பொனை நன்மலர் மேலவன் சேர்திரு வேதிகுடி
அன்பனை நம்மை உடையனை நாமடைந்து ஆடுதுமே.

—திருநாவுக்கரசர்.

நன்மலர் மேலவன்—பிரமன். ஆடுதும்—வழிபடுவோம்.

பொது

102. 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்'

திருமாலும் பன்றியாய்ச் சென்றுஉணராத் திருவடியை
உருநா மறியஓர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றும்இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

—மாணிக்கவாசகர்.

அந்தணன்—அழகிய தட்பம் உடையவன், வேதத்தின் அந்தத்தை அனுகுபவன் (ஆசிரியன்.)

பொது

103. ‘எந்தாய் என்பன் நினைந்து நைந்தே’

வளஏழ் உலகின் முதலாய
வானோர் இறையை அருவினையேன்
களவுஏழ் வெண்ணெய் தொடுஉண்ட
கள்வா என்பன் பின்னையும்
தளவுஏழ் முறுவல் பின்னைக்குஆய்
வல்ஆன் ஆயர் தலைவனாய்
இளஏறு ஏழும் தழுவிய
எந்தாய் என்பன் நினைந்துநைந்தே.

—நம்மாழ்வார்.

களவுஏழ்—திருட்டுத்தனம் எழும்படி. எழுதல்—பரவுதல், பிரசித்தமாதல். பின்னை—நப்பின்னைப்பிராட்டி. தொடு உண்ட—தொட்டுத் தின்ற. தளவு ஏழ் முறுவல்—முல்லை மலர் போன்ற அழகிய பற்கள்.

பொது

104. ‘தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு தருவான்’

சார்ந்த இருவல் வினைகளும்
சரித்து மாயப் பற்றுஅறுத்து
தீர்ந்து தன்பால் மனம்வைக்கத்
திருத்தி வீடு திருத்துவான்
ஆர்ந்த ஞானச் சுடர்ஆகி
அகலம் கீழ்மேல் அளவு இறந்து
நேர்ந்த உருவாய் அருவாகும்
இவற்றின் உயிராம் நெடுமாலே.

—நம்மாழ்வார்.

சரித்து—சரியும்படி செய்து, அழித்து. அகலம் கீழ் மேல் அளவு இறந்து—பத்துத் திக்குக்களிலும் வியாபித்து, உருவாய் அருவாகும் இவற்றின்—கண்ணால் காணப்படும் பொருள், காண இயலாத பொருள் என இருவகைப் பட்ட உலகப் பொருள்களின்.

திருவையாறு

103. 'ஐயாறனே என்று என்றே நான் அரற்றி நைகின்றேன்'

அவன்என்று நான்உன்னை அஞ்சா தேனை
அல்லல் அறுப்பானே என்றேன் நானே
சிவன்என்று நான்உன்னை எல்லாம் சொல்லச்
செல்வம் தருவானே என்றேன் நானே
பவன்ஆகி என்உள்ளத்து உள்ளே நின்று
பண்டைவினை அறுப்பாய் என்றேன் நானே
அவன்என்றே ஆதியே ஐயாறு அன்னே
என்றுஎன்றே நான்அரற்றி நைகின் றேனே.

—திருநாவுக்கரசர்.

பவன்—பிறவியை அறுப்பவன்.

திருப்புகலூர்

104. 'என்னைப் பிறப்பறுத்துச் சிவலோகத்து இருத்திடுமே'

தன்னைச் சரண்என்று தாள்அடைந்தேன்
தன்னடி அடையப்
புன்னைப் பொழில் புகலூர்அண்ணல்
செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என்வினை
கட்டறுத்து ஏழ்நரகத்து
என்னைக் கிடக்க லொட்டான்
சிவலோகத்து இருத்திடுமே.

—திருநாவுக்கரசர்.

அண்ணல்—பெருமை மிக்கவன். கட்டறுத்து—அடியோடு அழித்து. கிடக்கலொட்டான்—கிடக்கும்படி விடமாட்டான்.

பொது

105. ‘கமலபாதம் வந்து என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே’

அமலன் ஆதிபிரான்
அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன்
விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள்மதிள் அம்மான் திருக்
கமலபாதம் வந்து
என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே.

—திருப்பாணாழ்வார்.

விமலன்—குற்றமற்றவன். விரை—மணம். கமலம்—தாமரை.

பொது

106. ‘எம்பிரானைத் தொழாய் மட நெஞ்சமே’

எம்பி ரானைஎந் தைதந்தை தந்தைக்கும்
தம்பி ரானைத்தண் தாமரைக் கண்ணனைக்
கொம்பு அராவுநுண் நேர்இடை மார்பனை
எம்பி ரானைத் தொழாய்மட நெஞ்சமே!

—நம்மாழ்வார்.

எம்பிரான்—எங்கள் பெருமான். தம்பிரான்—தலைவன். கொம்பராவு—கொடியும் அரவும் போன்ற (இடை). கொம்பு—கொடி. அராவு—அரவு, பாம்பு. ஏர் இடை—அழகிய இடையையுடைய மகாலட்சுமி.

பொது

105. 'காளத்தியானவன் என் கண்ணுளானே'

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்அடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்து அப்பாலான் இப்பால் செம்பொன்
புனத்தகத்தார் நறுங்கொன்றைப் போதின் உள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றின் உள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்து உச்சி உள்ளான்
காளத்தி யான் அவன்என் கண்ணு ளானே.

—திருநாவுக்கரசர்.

சிரம்—தலை. போது—மலர். பொருப்பு—மலை.

திருவிராமேச்சுரம்

106. 'சேர் மட நெஞ்சமே நீ'

ஆர்வல நம்மின் மிக்கார் என்றஅவ் அரக்கர்கூடிப்
போர்வலம் செய்து மிக்குப் பொருதவர் தம்மைவீட்டித்
தேர்வலம் செற்ற மால்செய் திருவிரா மேச்சுரத்தைச்
சேர்மட நெஞ்ச மேநீ செஞ்சடை எந்தைபாலே.

—திருநாவுக்கரசர்.

ஆர்வல நம்மின் மிக்கார் என்று—நம்மை விடப் பலம் மிகுந்தவர்கள் யார் இருக்கிறார்கள் எனச் செருக்குக் கொண்டு. செற்ற—அழித்த. வலம்—வல்லமை, பலம்.

பொது

107. ‘மேல் மற்றோர் நோயும் சார்கொடான்’

நீயும் நானும்இந் நேர்நிற்கில் மேல்மற்றோர்
நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன்
தாயும் தந்தையும் ஆய்இவ் வுலகினில்
வாயும் ஈசன் மணிவண்ணன் எந்தையே.

—நம்மாழ்வார்.

சார்கொடான்—அணுக விடமாட்டான்.

பொது

108. ‘எம்பிரானை என் சொல்லி மறப்பனோ’

நம்பி யைத்தென் குறுங்குடி நின்றஅச்
செம்பொ னேதிக ழும்திரு மூர்த்தியை
உம்பர் வானவர் ஆதிஅம் சோதியை
எம்பி ரானை என்சொல்லி மறப்பனோ?

—நம்மாழ்வார்.

நம்பி—புருஷோத்தமன், நம்பத்தக்கவன்.

கச்சியம்பதி

107. 'நோக்குவான் நம்மை நோய் வினை வாராமே'

மூக்கு வாய்செவி கண்உடல் ஆகிவந்து
ஆக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்
நோக்கு வான்நமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சிஏ கம்பனே.

—திருநாவுக்கரசர்.

ஆப்பை—யாப்பை, கட்டினை. நோக்குவான்—கடைக் கண்ணால் நோக்கி அருள் புரிவான்.

பொது

108. 'வந்தென் உள்ளம் கொண்டானை மறப்பனே'

புந்திக் குவிளக்கு ஆய புராணனைச்
சந்திக் கண்நடம் ஆடும் சதுரனை
அந்தி வண்ணனை ஆர்அழல் மூர்த்தியை
வந்தென் உள்ளம்கொண் டானை மறப்பனே.

—திருநாவுக்கரசர்.

புந்திக்கு—மனத்திற்கு, புத்திக்கு. சந்திக்கண்—மாலைப் பொழுதின்கண். சதுரன்—ஆற்றல் மிக்கவன்.

பொது

109. 'மறப்பனோ இனி யான் என் மணியையே'

மறப்பும் ஞானமும் நான்ஒன்று உணர்ந்திலன்
மறக்கும் என்றுசெந் தாமரைக் கண்ணொடு
மறப்பு அறஎன் உள்ளேமன்னி னான்தன்னை
மறப்ப னோஇனி யான்என் மணியையே?

—நம்மாழ்வார்.

மன்னினான்—நிலை பெற்று விட்டான்.

பொது

110. 'என்னை நீ குறிக்கொள்ளே'

முன்நல் யாழ்பயில் நூல்நரம்பின் முதிர்சுவையே
பல்நலார் பயிலும் பரனே பவித்திரனே
கன்னலே அமுதே கார்முகிலே என்கண்ணா
நின்அலால் இலேன்காண் என்னைநீ குறிக்கொள்ளே.

—நம்மாழ்வார்.

பவித்திரனே—தூய்மையை உண்டாக்குபவனே. குறிக்கொள்— திருவுள்ளம் பற்றுக, கடைக்கணித்தருள்க.

பொது

109. 'ஈசன் தன்னையும் யான் மறக்கிற்பனே'

ஈசன் ஈசன்என்று என்றும் அரற்றுவன்
ஈசன் தான்என் மனத்தில் பிரிவிலன்
ஈசன் தன்னையும் என்மனத் துக்கொண்டு
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே.

—திருநாவுக்கரசர்.

அரற்றுவன்—கதறுவேன். மறக்கிற்பனே—மறந்து விடுவேனா?

திருப்பழனம்

110. 'அடியேனைக் குறி கொள்வதே'

மேவித்து நின்று விளைந்தன வெந்துயர் துக்கமெல்லாம்
ஆவித்து நின்று கழிந்தன அல்லல் அவைஅறுப்பான்
பாவித்த பாவனை நீஅறிவாய் பழனத்துஅரசே
கூவித்துக் கொள்ளும் தனைஅடியேனைக் குறிகொள்
[வதே.

—திருநாவுக்கரசர்.

மேவித்து—பொருந்தும்படி செய்து. ஆவித்து—ஆவிபோல் மென்மையும் நுட்பமும் அடைந்து. பாவித்த—தியானித்த.

பொது

111. 'அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே'

கடிவார்தண் அம்துழாய்க் கண்ணன் விண்ணவர்
[பெருமான்
படிவானம் இறந்த பரமன் பவித்திரன்சீர்
செடிஆர் நோய்கள் கெடப்படிந்து குடைந்துஆடி
அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே.

—நம்மாழ்வார்.

கடிவார்—மணம் நிறைந்த. படி—ஒப்புமை, இயல்பு. செடி ஆர்—தூறு மண்டிக் கிடக்கின்ற. வாய் மடுத்துப் பருகி—பெரு விடாயுடன் அநுபவித்து.

பொது

112. 'உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே'

வைகுந்தா மணிவண்ணனே என்பொல்லாத்
திருக்குறளா என்னுள் மன்னி
வைகும் வைகல்தோறும்
அமுதுஆய வான்ஏறே
செய்குந்தா அரும்தீமை உன்அடியார்க்குத்
தீர்த்து அசுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா உன்னை நான்
பிடித்தேன் கொள் சிக்கெனவே.

—நம்மாழ்வார்.

திருக்குறளா—அழகிய குள்ளனே, வாமனனே. வைகும்—தங்கி வாழும். வைகல் தோறும்—நாள்தோறும். செய் குந்தா வருந்தீமை—செய்யப் பட்டுத் தப்பாதனவாய் உள்ள கொடிய தீங்குகள். குந்தா—(மு)குந்தா, தலைக் குறை. குந்தா—குருந்த மலர் போன்று தூயவனே.

திருநாகைக்காரோணம்

111. 'கங்குலும் பகலும் காணப்பெற்று நாம்களித்த வாறே'

வெங்கடுங் கானத் தேழை தன்னொடும் வேடனாய்ச் [சென்று
அங்கமர் மலைந்து பார்த்தற்கு அடுசரம் அருளி னானை
மங்கைமார் ஆடல் ஓவா மன்னுகா ரோணத் தானைக்
கங்குலும் பகலும் காணப் பெற்றுநாம் களித்த வாறே.

—திருநாவுக்கரசர்.

கானத்து—காட்டில். ஏழை—பெண், உமாதேவி. அமர் மலைந்து – போரில் எதிர்த்து நின்று. அடுசரம்—பகைவரைக் கொல்லும் அம்பு, பாசுபதாஸ்திரம். ஓவா—ஒழிவு இல்லாத, நீங்காத.

பொது

112. 'எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்'

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈறுஇல்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே?

—மாணிக்கவாசகர்.

எத்தன்—வஞ்சகன், ஏமாற்றுபவன், கள்வன்.

பொது

113. 'எந்தாய் உன்னை எங்ஙனம் விடுகேன்'

வள்ளலே மதுசூதனா என்மரகத
மலையே உனைநினைந்து
எள்கல் தந்தஎந்தாய் உன்னை
எங்ஙனம் விடுகேன்
வெள்ளமே புரைநின் புகழ் குடைந்து
ஆடிப் பாடிக்களித்து உகந்துஉகந்து
உள்ள நோய்கள் எல்லாம் துறந்து
உய்ந்து போந்திருந்தே.

—நம்மாழ்வார்.

எள்கல் தந்தாய்—பிற பொருள்களை இகழ்ந்து ஒதுக்கும் படி செய்தாய்.

பொது

114. 'வானேறே இனி எங்குப் போகின்றதே'

எந்தாய் தண்திரு வேங்கடத்துள் நின்றாய்
இலங்கை செற்றாய் மராமரம்
பைந்தாள் ஏழ்உருவ ஒருவாளி
கோத்த வில்லா
கொந்துஆர் தண்அம் துழாயினாய்
அமுதேஉன்னை என்னுள்ளே குழைத்தஎம்
மைந்தா வான்ஏறே இனி
எங்குப் போகின்றதே.

—நம்மாழ்வார்.

செற்றாய்—அழித்தாய். வாளி—அம்பு. கொந்து—கொத்து.

திருவொற்றியூர்

113. 'எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன்'

இங்ஙனம்வந்து இடர்ப்பிறவிப்
பிறந்தயர்வேன் அயராமே
அங்ஙனம்வந்து எனை ஆண்ட
அருமருந்தென் ஆரமுதை
வெங்கனல்மா மேனியனை
மான்மருவும் கையானை
எங்ஙனம்நான் பிரிந்துஇருக்கேன்
என்னூரர் இறைவனையே.

—சுந்தரர்.

அயர்வேன்—துன்புறுவேன், மறப்பேன். கனல்—நெருப்பு.

பொது

114. 'எந்தாய் எங்குப் புகுவேனே?'

தன்மை பிறரால் அறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா
புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே
என்நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழும் திருமேனி
எந்தாய் எங்குப் புகுவேனே.

—மாணிக்கவாசகர்.

புன்மையேனை—அற்பனான என்னை. புறமே போக விடுவாயோ—வேண்டா என்று தள்ளி விலக்கி விடுவாயோ?

பொது

115. 'ஐஆர் கண்ட மடைக்கிலும் நின்கழல் எய்யாதேத்த'

செய்யேல் தீவினை என்றுஅருள் செய்யும்என்
கைஆர் சக்கரக் கண்ண பிரானே
ஐஆர் கண்டம் அடைக்கிலும் நின்கழல்
எய்யாது ஏத்த அருள்செய் எனக்கே.

—நம்மாழ்வார்.

ஐ ஆர்—கோழை நிறைந்த. கண்டம்—கழுத்து, குரல் வளை. எய்யாது—வருந்தாமல்.

பொது

116. 'என் சொல்லி யான் வாழ்த்துவனே'

ஓதுவார் ஓத்தும் எல்லாம் எவ்வுலகத்து எவ்எவையும்
சாதுவாய் நின்புகழின் தகைஅல்லால் பிறிதுஇல்லை
போதுவாழ் புனம்துழாய் முடியினாய் பூவின்மேல்
மாதுவாழ் மார்பினாய் என்சொல்லியான் வாழ்த்து
வனே.

—நம்மாழ்வார்.

ஓத்து—ஓதப்படும் சிறந்த நூல்கள். சாதுவாய்—தகுதி யுடையனவாய். தகை—சிறப்பு. மாது—திருமகள்.

திருவையாறு

115. 'துஞ்சும் போதும் நின் நாமத் திருவெழுத்து அஞ்சும் தோன்ற'

நெஞ்சம் என்பதோர் நீள்கயம் தன்னுளே
வஞ்சம் என்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்துநின் நாமத் திருவெழுத்து
அஞ்சும் தோன்ற அருளும் ஐயாறரே.

—திருநாவுக்கரசர்.

கயம்—நீர்நிலை, வெள்ளப் பெருக்கு. வான் சுழிப்பட்டு—பெரிய சுழியில் அகப்பட்டுக் கொண்டு. துஞ்சும் போதும்—இறக்கின்ற சமயத்தில்.

பொது

116. 'என் சொல்லி வாழ்ந்துவனே'

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதுஎன்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

—மாணிக்கவாசகர்.

வான்—விசும்பு, ஆகாசம். வளி—காற்று. ஒளி—நெருப்பு. கோன்—தலைவன். கூத்தாட்டுவான் ஆகி—கூத்து ஆடும் படி செய்பவன் ஆக விளங்கி. நின்றாயை—நின்ற உன்னை.

பொது

117. ‘புணர்வினை அறுக்கலறு சொல்லாய் யானுன்னைச் சார்வது ஓர் சூழ்ச்சியே’

கொல்லா மாக்கோல் கொலைசெய்து பாரதப்போர்
எல்லாச் சேனையும் இருநிலத்து அவித்தஎந்தாய்
பொல்லா ஆக்கையின் புணர்வினை அறுக்கல்அறு
சொல்லாய் யான்உன்னைச் சார்வதுஓர் சூழ்ச்சியே.

—நம்மாழ்வார்.

கொல்லா—கொல்லும் தொழில் மேற்கொள்ளாமல். மாக்கோல்—குதிரையை ஓட்டும் கோலினைக் கொண்டே. அவித்த—அழித்த. புணர்வு—சேர்க்கை, தொடர்பு. அறுக்கல் அறு—அறுத்தாலும் அறுமல் மேன்மேல் வளர்ந்து கொண்டே இருக்கும். சூழ்ச்சி—உபாயம், தந்திரம், வழி.

பொது

118. ‘நின் தாளிணைக் கீழ் வாழ்ச்சியான் சேரும் வகையருளாய்’

சூழ்ச்சி ஞானச் சுடர்ஒளி ஆகிஎன்றும்
ஏழ்ச்சி கேடுஇன்றி எங்கணும் நிறைந்த எந்தாய்
தாழ்ச்சி மற்றுஎங்கும் தவிர்ந்துநின் தாள்இணைக்கீழ்
வாழ்ச்சி யான்சேரும் வகைஅருளாய் வந்தே.

—நம்மாழ்வார்.

சூழ்ச்சி—உயிர்களைத் தப்பாதபடி அகப்படுத்திக் கொள்ளும் திறன். ஏழ்ச்சி—எழுச்சி, மலர்ச்சி. வாழ்ச்சி—வாழும் பேறு.

திருநெல்வாயில் அரத்துறை

117. 'பொறி வாயில்இவ் ஐந்தினையும் அவியப் பொருதுன் னடியே புகும் சூழல் சொல்லே'

கறிமா மிளகும் மிகுவன் மரமும்
    மிகவுந் திவரும் நிவவின் கரைமேல்
நெறிவார் குழலார் அவர்காண நடம்செய்
    நெல்வா யிலரத் துறைநின் மலனே
வறிதே நிலையாத இம்மண் ணுலகின்
    நரனுக வகுத்தனை நானிலை யேன்
பொறிவாயில் இவ்ஐந் தினையும் அவியப்
    பொருது உன்னடியே புகும்சூழல் சொல்லே.

—சுந்தரர்.

உந்தி—அடித்துக் கொண்டு. நிவவு—நிவா என்னும் ஆறு. நரனுக—மனிதனுக. வகுத்தனை—பிறக்கும்படி செய்தாய். பொருது—போரிட்டு அழித்து. சூழல் சொல்—உபாயம் சொல்லுக.

திருவிடைமருதூர்

118. 'இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்'

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
    குற்றம் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையும் சினமும்
    வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல
நடுக்கம் உற்றதோர் மூப்புவந்து எய்த
    நமன்தமர் நகரத் திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
    இடை மருதுறை எந்தை பிரானே.

—சுந்தரர்.

கொடுக்க கிற்றிலேன்—கொடுக்க இயலாதவனுக உள்ளேன். செற்றம் – பகைமை. வேட்கை – ஆசை. இடைமருது – திருவிடைமருதூர். இடுக்கண்—துன்பம்.

பொது

119. 'நல்லனவே செய்வார் வேங்கடத்து உறைவார்க்கு நம என்னல்ஆம் கடமை'

வேம்க டங்கள்மெய்ம் மேல்வினை முற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லன வேசெய்வார்
வேங்க டத்துஉறை வார்க்கு நமஎன்னல்
ஆம்க டமை அதுசுமந் தார்கட்கே.

—நம்மாழ்வார்.

வேம்—வேகும், நசிக்கும், அழியும். கடங்கள்—கடன்கள். நம—வணக்கம். மெய்ம்மேல் வினை—உடலின் தொடர் பினால் வரும் பாவங்கள்.

பொது

120. 'திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழநம் வினை ஓயுமே'

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே.

—நம்மாழ்வார்.

குன்றம்—கோவர்த்தன மலை. ஞாலம்—உலகம். பரன்—மேலானவன். ஓயும்—அழியும், நீங்கும்.

பொது

119. 'தன் கடன் அடியேனையும் தாங்குதல்; என் கடன் பணி செய்து கிடப்பதே'

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

—திருநாவுக்கரசர்.

கடம்பன்—கடப்ப மலர் மாலையை அணிந்த முருகன். நம்—அன்பும் பற்றும் உணர்த்தும் உணர்ச்சிச் சொல்; நம்பெருமாள், நம்மாழ்வார் என்பன வேறு.

திருச்சிராப்பள்ளி

120. 'சிராப்பள்ளி மேவிய நாயனார் என நம் வினை நாசமே'

தாயு மாய்எனக் கேதலை கண்ணுமாய்ப்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னார்என நம்வினை நாசமே.

—திருநாவுக்கரசர்.

தேய நாதன்—தேசத்திற்குத் தலைவன். தேயம்—தேசம், உலகம். நாயனார்—கடவுள். (கடவுளின் அருள் பெற்ற அடியார்களையும் குறிக்கும்.)

121. 'கோரமாதவம் செய்தனன்கொல் அறியேன்'

பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி என்னுள்
புகுந்தான்
கோரமாதவம் செய்தனன்கொல் அறியேன் அரங்கத்
தம்மான்திரு
ஆரமார்ப தன்றோ அடியேனை ஆட்கொண்டதே.

—திருப்பாணாழ்வார்.

பாரம்—சுமை. வாரம்—அன்பு.

பொது

122. 'கும்பிட்டு நட்டமாடி கோகு கட்டுண்டு உழலாதார் தம் பிறப்பால் பயனென்னே'

வம்புஅவிழ் கோதை பொருட்டா
மால்விடை ஏழும் அடர்த்த
செம்பவ ளத்திரள் வாயன்
சிரீதரன் தொல்புகழ் பாடிக்
கும்பிடு நட்டம் இட்டுஆடிக்
கோகுகட் டுண்டுஉழ லாதார்
தம்பிறப் பால்பயன் என்னே!
சாதுச னங்களி டையே.

—நம்மாழ்வார்.

வம்பு அவிழ்—மணம் வீசுகின்ற. கோதை பொருட்டா—மாலையை அணிந்த நப்பின்னையின் பொருட்டு. சிரீதரன்—திருமகளைத் தரித்திருப்பவன். கோகு—அடைவு, கேடு, முறை மாற்றம். உகட்டு—தலை மண்டி யிட்டு. உழலாதார்—யாத்திரையாய் நடத்தாதவர்கள். சாதுசனங்கள்—வைணவர்கள்.

பொது

121. ‘நானேயோ தவம் செய்தேன்’

நானேயோ தவம்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுள்ளம்
புகுந்துஅடியேற்கு அருள்செய்தான்
ஊன்ஆரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே.

—மாணிக்கவாசகர்.

ஊன் ஆரும்—உடலோடு கூடிய.

பொது

122. ‘பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்வாக்கையால் பயனென்’

ஆக்கை யால் பயனென்?—அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென் னாத இவ்
ஆக்கை யால் பயனென்?

—திருநாவுக்கரசர்.

ஆக்கை—யாக்கை, உடல். அட்டி—தூவி, சொரிந்து.

பொது

123. ‘முனிவின்றி ஏத்திக் குனிப்பார் முழுதுணர் நீர்மையி னரே’

மனிசரும் மற்றும்முற் றும்ஆய்
  மாயப் பிறவி பிறந்த
தனியன் பிறப்பிலி தன்னைத்
  தடங்கடல் சேர்ந்த பிரானை
கனியைக் கரும்பின் இன்சாற்றை
  கட்டியைத் தேனை அமுதை
முனிவுஇன்றி ஏத்திக் குனிப்பார்
  முழுதுஉணர் நீர்மையி னரே.

—நம்மாழ்வார்.

தனியன்—ஒப்பற்றவன். முனிவு—வெறுத்தல். குனிப்பார்—ஆனந்தக் கூத்து ஆடுபவர்கள்.

பொது

124. ‘ஆர்வம் பெருகிக் குனிப்பார் அமரர் தொழப்படுவாரே’

வார்புனல் அம்தண் அருவி
  வடதிரு வேங்கடத்து எந்தை
பேர்பல சொல்லிப் பிதற்றிப்
  பித்தர்என் றேபிறர் கூற
ஊர்பல புக்கும் புகாதும்
  உலோகர் சிரிக்க நின்றுஆடி
ஆர்வம் பெருகிக் குனிப்பார்
  அமரர் தொழப்படு வாரே.

—நம்மாழ்வார்.

உலோகர்—உலக மக்கள். ஆர்வம்—அன்பு மேலீடு.

திருப்பூவனூர்

123. ‘பூவனூரனைப் போற்றுவார் மனிதரில் தலையான மனிதரே’

அனுச யப்பட்டு அதுவிது என்னுதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யானம னிதரே.

—திருநாவுக்கரசர்.

அனுசயம்—ஐயம், சந்தேகம், பகைமை.

திருக்கோழம்பம்

124. ‘அன்புடைத் தொண்டர்கள் அமரலோகமது ஆள்வுடையார்களே’

சமர சூரபன் மாவைத் தடிந்தவேல்
குமரன் தாதைநல் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்கு அன்புடைத் தொண்டர்கள்
அமர லோகமது ஆள்வுடை யார்களே.

—திருநாவுக்கரசர்.

சமரம்—போர். அமரலோகம் அது—தேவர் உலகம். ஆள்வு உடையார்கள்—ஆளும் தன்மையினை யுடையவர்கள் ஆவர்.

பொது

125. 'தொழுமின் தூய மனத்தராய் இறையும் நில்லா துயரங்களே'

எழுமைக் கும்எனது ஆவிக்குஇன்
அமுதத்தினை எனது ஆர்உயிர்
கெழுமிய கதிர்ச்சோதி யைமணி
வண்ணனைக் குடக் கூத்தனை
விழுமிய அமரர் முனிவர்
விழுங்கும் கன்னல் கனியினைத்
தொழுமின் தூய மனத்தர்ஆய்
இறையும் நில்லா துயரங்களே.

—நம்மாழ்வார்.

கெழுமிய—ஒன்றிக் கலந்த. விழுமிய—சிறந்த. இறையும்—ஒரு சிறிதளவும்.

பொது

126. 'நெஞ்சினுல் நினைப்பான் எவன், அவன் ஆகும் நீள் கடல் வண்ணனே'

தஞ்சம்ஆகிய தந்தை தாயொடு
தானும் ஆய்அவை அல்லன்ஆய்
எஞ்சல்இல் அமரர் குலமுதல்
மூவர் தம்முள்ளும் ஆதியை
அஞ்சிநீர் உலகத் துள்ளீர்கள்
அவன்இவன் என்று கூழேன்மின்
நெஞ்சினுல் நினைப்பான் எவன்அவன்
ஆகும் நீள்கடல் வண்ணனே.

—நம்மாழ்வார்.

தஞ்சம்—புகலிடம், பற்றுக் கோடு. கூழேன்மின்—ஐயப்பாடு கொள்ளாதீர்கள். கூழ்ப்பு—ஐயம், சந்தேகம்.

திருப்புகலூர்

125. ‘புகலூர்க் கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடு வினையே’

ஓணப் பிரானும் ஒளிர்மா
மலர்மிசை யுத்தமனும்
காணப் பராவியும் காண்கின்
றிலர்கர நாலைந்துடைத்
தோணப் பிரானை வலிதொலைத்
தோன்தொல்லை நீர்ப்புகலூர்க்
கோணப் பிரானைக் குறுகக்
குறுகா கொடுவினையே.

—திருநாவுக்கரசர்.

ஓணப்பிரான்—திருவோண நட்சத்திரத்திற்குரிய திருமால். மலர்மிசை உத்தமன்—பிரமன். பராவியும்—துதித்தும், எல்லா இடங்களிலும் பரவி நின்று தேடியும். கரம்நால் ஐந்துடைத் தோள் நப்பிரான்—இருபது தோள்களையுடைய இராவணன். ந—சிறப்பைக் குறிக்கும் ஓர் எழுத்து ஒரு மொழி, நக்கீரர், நச்செள்ளை என்னும் பெயர்களிற்போல. கோணப்பிரான் — திருப்புகலூர் இறைவனுக்குரிய பெயர்.

பொது

126. ‘உள்குவார் உள்ளத்துள்ளார் ஒற்றியூர் உடைய கோவே’

முள்குவார் போகம் வேண்டின்
முயற்றியால் இடர்கள் வந்தால்
எள்குவார் எள்கி நின்றங்கு
இதுவொரு மாயம் என்பார்
பள்குவார் பத்தர் ஆகிப்
பாடியும் ஆடி நின்றும்
உள்குவார் உள்ளத் துள்ளார்
ஒற்றியூர் உடைய கோவே.

—திருநாவுக்கரசர்.

முள்குவார்—முயங்குபவர்கள், தழுவுபவர்கள். பள்குவார்—அஞ்சுபவர். உள்குவார்—நினைப்பவர்களின்.

பொது

127. 'மணிவண்ணர்க்கு ஆள் என்றுஉள் கலந்தார் அடியார் தம்மடியார் எம்மடிகளே'

குலம்தாங்கு சாதிகள் நாலிலும்
　கீழ்இழிந்து எத்தனை
நலம்தான் இலாத சண்டாள
　சண்டாளர்கள் ஆகிலும்
வலம்தாங்கு சக்கரத்து அண்ணல்
　மணிவண்ணற்கு ஆள்என்றுஉள்
கலந்தார் அடியார்தம்
　அடியார் எம்அடிகளே.

—நம்மாழ்வார்.

வலம் தாங்கு—வெற்றியை எப்போதும் தாங்குகின்ற, வலக்கரத்தில் ஏந்தியுள்ள.

பொது

128. 'பிரான் தனக்கு அடியாரடியார் தம் அடியார் அடியார்'

அடிஆர்ந்த வையம்உண்டு
　ஆல்இலைஅன்ன வசம் செய்யும்
படியாதும் இல்குழவிப்
　படிஎந்தை பிரான்தனக்கு
அடியார் அடியார்தம்
　அடியார் அடியார்தமக்கு
அடியார் அடியார்தம்
　அடியார் அடியோங்களே.

—நம்மாழ்வார்.

அடி ஆர்ந்த—திருவடிக்கு அளவான. ஆலிலை அன்ன வசம் செய்யும்—ஆல இலையின் மீது உண்ட உணவு செரியாமல் வலக்கை கீழ்ப்படப் பள்ளி கொண்டருளும். படி யாதும் இல்—ஒப்பு ஏதும் இல்லாத. குழவிப் படி—குழந்தையின் தன்மையுள்ள.

பொது

127. 'சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே'

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வான்ஆளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்
அங்கம்எலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுஉழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பர் ஆகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே.

—திருநாவுக்கரசர்.

சங்கநிதி—'சங்கம்' என்னும் பெரிய எண்ணின் அளவுள்ள செல்வம். பதும நிதி—'பதுமம்' என்னும் பெரிய எண்ணின் அளவுள்ள செல்வம். சங்கு வடிவமாகவும், தாமரை வடிவமாகவும் உள்ள நிதி என்றும் சிலர் கூறுவர். மங்குவார்—அழிந்து போகிறவர்கள். மாதேவர்—சிவபெருமான். ஏகாந்தர்—ஒரே முடிவையுடைய பேரன்பு வாய்ந்தவர்கள்.

திருவாரூர்

128. 'பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்'

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

—சுந்தரர்.

சித்தம்—மனம். திருமேனி — சிவலிங்கம். அப்பாலும் அடிச்சார்ந்தார்—நாயன்மார்களுக்கு முன்னும் பின்னும் தமிழ் நாட்டிலும், பிற நாடுகளிலும் தோன்றிய—தோன்றுகின்ற அடியார்கள்.

பொது

129. ‘நெடியானே என்று கிடக்கும் என் நெஞ்சமே’

முடியானே மூவுலகும் தொழுது ஏத்தும்சீர்
அடியானே ஆழ்கடலைக் கடைந்தாய் புள்-ஊர்
கொடியானே கொண்டல்வண்ணா அண்டத்து உம்பரில்
நெடியானே என்று கிடக்கும் என்நெஞ்சமே.

—நம்மாழ்வார்.

புள்—கருடன். கொண்டல் வண்ணா—மேகம் போன்ற நிறத்தை உடையவனே.

பொது

130. ‘மெய்கொள்ளக் காண விரும்பும் என் கண்களே’

கைகளால் ஆரத்தொழுது தொழுது உன்னை
வைகலும் மாத்திரைப் போதும்ஓர் வீடுஇன்றி
பைகொள் பாம்புஏறி உறைபர னேஉன்னை
மெய்கொள் ளக்காண விரும்புமென் கண்களே.

—நம்மாழ்வார்.

வைகலும்—நாள்தோறும். மாத்திரைப் போதும்—ஒரு நொடி நேரமும், இமைப்பளவின் பொழுதும். வீடு—விடுபட்டுப் போதல், விலகுதல்.

திருப்புகலூர்

129. 'புண்ணியன் புகலூரு மென் நெஞ்சுமே'

விண்ணி ணூர்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்கள் ஓதி எழுத்துஅஞ்சும்
கண்ணி ணுல்கழல் காண்பிடம் ஏதெனில்
புண்ணி யன்புக லூருமென் நெஞ்சுமே.

—திருநாவுக்கரசர்.

விண்ணின் ஆர்—வானத்தில் விளங்குகின்ற. எண்ணி—நினைத்து, தியானித்து. கண்ணிஞல்—கருதிஞல், கணித்தால்.

திருவிசயமங்கை

130. 'நினைந்தாசையால் காண்டலே கருத்தாகி இருப்பனே'

பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டு நல்வரம் கொள்விச யமங்கை
ஆண்ட வன்அடி யேநினைந்து ஆசையால்
காண்ட லேகருத் தாகி இருப்பனே.

—திருநாவுக்கரசர்.

பார்த்தன்—அருச்சுனன்.

திருக்குறுங்குடி

131. 'இம் மானிடத்தைக் கவி பாடி என்?'

உளனுகவேஎண்ணித் தன்னைஒன்ருகத்தன் செல்வத்தை
வளனு மதிக்கும் இம்மா னிடத்தைக் கவிபாடிஎன்
குளன்ஆர் கழனிசூழ் கண்ணன் குறுங்குடிமெய்ம்மையே
உளனுய எந்தையை எந்தைபெம் மானை ஒழியவே.

—நம்மாழ்வார்.

உளனுகவே எண்ணி—மிகவும் வறியவனுகவே இருந்து வைத்தும், தன்னை ஒரு பெருஞ் செல்வன் என்று தவரு கக் கருதிக் கொண்டு. வளனு—வளமாக, மேலானதாக. குளன் ஆர்—நீர் நிலைகள் நிறைந்த. ஒழிய—விட்டு விட்டு.

பொது

132. 'நிறை புகழேத்தியும் பாடியும் ஆடியும் யானெரு முட்டிலனே'

குறைவுஇல் தடங்கடல் கோள்அரவு ஏறித்தன்
கோலச்செந் தாமரைக்கண்
உறைபவன் போலஓர் யோகுபுணர்ந்த
ஒளிமணி வண்ணன் கண்ணன்
கறைஅணி மூக்குஉடைப் புள்ளைக்
கடாவி அசுரரைக் காய்ந்த அம்மான்
நிறைபுகழ் ஏத்தியும் பாடியும் ஆடியும்
யான்ஒரு முட்டுஇலனே.

—நம்மாழ்வார்.

கடல்—திருப்பாற்கடல். அரவு—ஆதிசேஷன். புள்ளைக் கடாவி—கருடனைச் செலுத்தி. முட்டு—முட்டுப்பாடு, தடை, குறை.

திருப்புகலூர்

131. 'குலமிலாதானைக் குலவனே என்று கூறினும் கொடுப்பாரிலை'

நலமிலா தானை நல்லனே என்று
  நரைத்த மாந்தரை இளையனே
குலமிலா தானைக் குலவனே யென்று
  கூறினும் கொடுப் பாரிலை
புலமெ லாம்வெறி கமழும் பூம்புக
  லூரைப் பாடுமின் புலவீர்காள்
அலமராது அமர் உலகம் ஆள்வதற்கு
  யாதும் ஐயுறவு இல்லையே.

—சுந்தரர்.

நலம்—அழகு, நற்பண்பு. குலவன்—நற்குலத்தில் பிறந்தவன். புலமெலாம்—வயல்களிலெல்லாம். வெறி கமழும்—வாசனை வீசுகின்ற. அலமராது—துன்பப்படாமல்.

திருவாரூர்

132. 'உன் பொற்கழல் ஈங்கிருக்கப் பெற்றேன் என்ன குறையுடையேன்?'

பூங்கழல் தொழுதும் பரவியும்
  புண்ணியா புனிதாவுன் பொற்கழல்
ஈங்கிருக்கப் பெற்றேன்
  என்ன குறையுடையேன்
ஓங்கு தெங்கிலையார் கமுகுஇளவாழை
  மாவொடு மாதுளம் பல
தீங்கனி சிதறும்
  திருவாரூர் அம்மானே.

—திருநாவுக்கரசர்.

பொன்கழல்—அழகிய பாதங்கள். கமுகு—பாக்கு மரங்கள்.

பொது

133. 'ஓலமிட்டு நான் அழைத்தால் ஒன்றும் வாராயாகிலும்'

கால சக்கரத் தொட்டுவெண்
சங்கம் கைஏந்தினாய்
ஞாலம் முற்றும் உண்டுஉமிழ்ந்த
நாராயணனே என்றுஎன்று
ஓலம் இட்டு நான்அழைத்தால்
ஒன்றும் வாரா யாகிலும்
கோலம் ஆம்என் சென்னிக்குஉன்
கமலம் அன்ன குரைகழலே.

—நம்மாழ்வார்.

கால சக்கரம்—பகைவர்களுக்குக் காலனைப் போன்ற சக்கரம். ஓலமிட்டு—அபயக் குரல் கொடுத்து. கோலம் ஆம்—அணி செய்யும், அழகைத் தரும்.

பொது

134. 'இன்ன வண்ணமே நின்றாய் என்றுரைக்க வல்லேனே'

என்னது ஆவி மேலையாய்
ஏர்கொள் ஏழ் உலகமும்
துன்னி முற்றும் ஆகிநின்ற
சோதி ஞான மூர்த்தியாய்
உன்னது என்னது ஆவியும்
என்னது உன்னது ஆவியும்
இன்ன வண்ண மேநின்றாய்
என்று உரைக்க வல்லேனே?

—நம்மாழ்வார்.

என்னது ஆவி மேலையாய்—என்னுடைய உயிருக்கு மேலானவனே. இன்ன வண்ணமே—இப்படிப்பட்ட தன்மையிலேயே. உரைக்க வல்லேனே—என்னால் சொல்ல முடியுமா?

திருப்பெருந்துறை

133. 'உன்னை ஓலமிட்டலறி உலகெலாம் தேடியும் காணேன்'

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட்டு அலறி
உலகெலாம் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

—மாணிக்கவாசகர்.

ஆதரித்து—அன்பு கொண்டு. நிருத்தனே—நடனம் ஆடு பவனே. பிரான்—தலைவன்.

திருக்கச்சிமயானம்

134. 'இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே'

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னின் நல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருவன் அல்லன்
ஓரூரன் அல்லன்ஓர் உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவன்அருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன்இறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.

—திருநாவுக்கரசர்.

மைப்படிந்த—மைதீட்டப் பெற்ற. ஒணாது—முடியாது, இயலாது.

பொது

135. 'காலந்தோறும் யானிருந்து கைதலை பூசலிட்டால்'

சீலம் இல்லாச் சிறியனேலும் செய்வினையோ பெரிதால்
ஞாலம் உண்டாய் ஞானமூர்த்தி நாராயணா என்று [என்று
காலம் தோறும் யான்இருந்து கைதலை பூசலிட்டால்
கோல மேனி காணவாராய் கூவியும் கொள்ளாயே.

—நம்மாழ்வார்.

கைதலை பூசலிட்டால்—தலையிலே கை வைத்துக்கொண்டு கதறி அழுது புலம்பினால்.

பொது

136. 'பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்'

அறிந்து அறிந்து தேறித்தேறி
யான்எனது ஆவியுள்ளே
நிறைந்த ஞானமூர்த்தி யாயை
நின்மல மாகவைத்து
பிறந்தும் செத்தும் நின்றுஇடறும்
பேதைமை தீர்ந்தொழிந்தேன்
நறுந்துழாயின் கண்ணி அம்மா
நான்உன்னைக் கண்டுகொண்டே.

—நம்மாழ்வார்.

ஞானமூர்த்தியாயை—ஞானமே வடிவாக விளங்கும் உன்னை. நின்மலமாக வைத்து—மிகவும் விளக்கமாக நினைத்துத் தியானித்து. இடறும் பேதைமை—தடுமாறி அலைகின்ற அறியாமை. அம்மா—தாய் போன்றவனே.

பொது

135. 'பவன் என்னும் நாமம் பிடித்துப் பன்னுள் அழைத்தால்'

சிவன்எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனி எம்மான்
அவன்எனை ஆட்கொண்டு அளித்திடு
மாகில் அவன் தனையான்
பவன்எனும் நாமம் பிடித்துத் திரிந்து
பன்னுள் அழைத்தால்
இவன்எனைப் பன்னுள் அழைப்பொழி
யான்என்று எதிர்ப்படுமே.

—திருநாவுக்கரசர்—

அழைப்பு ஒழியான்—அழைத்துக் கொண்டிருத்தலை விட மாட்டான்.

பொது

136. 'நன்மணி வந்தென் பிறவித் தாழைப் பறித்தவா'

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோள்நோக்கம் ஆடாமோ!

—மாணிக்கவாசகர்—

தொழும்பனேன்—அடியவனுகிய நான். பரம்பரன்—மேலானவர்க்கும் மேலானவன். சிந்தாத—அழியாத. பிறவித் தாழ்—பிறவியாகிய பயிரின் தாள்.

பொது

137. 'காதல் கூற வல்வினையேன் அயர்ப்பாய்த் தடவுகின்றேன்'

இடகிலேன் ஒன்று அட்டகில்லேன்
ஐம்புலன் வெல்லகில்லேன்
கடவன்ஆகிக் காலந்தோறும்
பூப்பறித்து ஏத்தகில்லேன்:
மடவல்நெஞ்சம் காதல்கூற
வல்வினையேன் அயர்ப்பாய்த்
தடவுகின்றேன் எங்குக்காண்பன்
சக்கரத்து அண்ணலையே.

—நம்மாழ்வார்.

இடகிலேன்—இரப்பவர்க்கு எதனையும் இடமாட்டேன். அட்டகில்லேன்—நீரும் வார்க்க மாட்டேன். கடவன்—சாத்திரங்களுக்குக் கட்டுப்பட்டவன். அயர்ப்பாய்—அறிவு கெட்டு.

பொது

138. 'திருவடியே சுமந்து உழலக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே'

கூட்டுதி நின்குரைகழல்கள்
இமையோரும் தொழாவகை செய்து
ஆட்டுதிநீ அரவு அணையாய்
அடியேனும் அஃது அறிவன்
வேட்கை எல்லாம் விடுத்துஎன்னை
உன்திருவடியே சுமந்து உழலக்
கூட்டு அரிய திருவடிக்கள்
கூட்டினை நான் கண்டேனே.

—நம்மாழ்வார்.

கூட்டுதி—சேர்த்துக் கொள்ளுகின்றாய். ஆட்டுதி—அலைய வைக்கின்றாய்.

பொது

137. ‘தூகேன் மெழுகேன் கூத்தாடேன் சாமாறே விரைகின்றேன்’

ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே.

—மாணிக்கவாசகர்.

ஆமாறு—உய்யும் வண்ணம். புத்தேளிர்—தேவர்கள்.

பொது

138. ‘சிவமாக்கி எனைஆண்ட அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே’

இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவம்ஆக்கி எனைஆண்ட
அந்தம்இலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.

—மாணிக்கவாசகர்.

இந்திரிய வயம் மயங்கி—ஐம்பொறிகளின் வசப்பட்டு, அறிவு கெட்டு. அந்தரம்—வானம், தேவருலகம்.

திருக்குருகூர்

139. 'குறிய மாணுருவாகிய நீள்குடக் கூத்தனுக்கு ஆள் செய்வதே'

உறுவது ஆவது எத்தேவும்
 எவ்வுலகங்களும் மற்றும் தன்பால்
மறுஇல் மூர்த்தியோடு ஒத்து
 இத்தனையும் நின்ற வண்ணம் நிற்கவே
செறுவில் செந்நெல் கரும்பொடு
 ஓங்கு திருக்குரு கூர்அதனுள்
குறிய மாண்உரு ஆகியநீள்
 குடக் கூத்தனுக்கு ஆள்செய்வதே.

—நம்மாழ்வார்.

உறுவதாவது—சிறப்பும் தகுதியும் உடைய சொல். உறுவது—சிறப்புடையது. ஆவது-தகுதியுடையது. செறுவில்-வயலில். திருக்குருகூர்—ஆழ்வார் திரு நகரி. குறிய—குள்ளமான. மாண்—மாணி, பிரமசாரி. குடக்கூத்தன்—குடம் என்னும் கூத்தை ஆடிய திருமால்.

பொது

140. 'ஐயோ கண்ணபிரான் அறையோ இனிப்போனாலே'

கைஆர் சக்கரத்துஎன்
 கருமாணிக்கமே என்றுஎன்று
பொய்யே கைம்மை சொல்லிப்
 புறமே புறமேஆடி
மெய்யே பெற்றொழிந்தேன்
 விதிவாய்க்கின்று காப்பார்ஆர்
ஐயோ கண்ணபிரான்
 அறையோஇனிப் போனாலே.

—நம்மாழ்வார்.

கைம்மை—சிறுமைத் தன்மை, அற்பத்தனம். பொய்யே கைம்மை சொல்லல்—பிறரை ஏமாற்றுதலே யன்றி, இறைவனும்கூட 'இது மெய்தான் போலும்' என்று மயங்கும்படி பெரும் பொய்களைச் சொல்லுதல். விதி—இறைவனருள், பகவத் கிருபை. வாய்க்கின்று—கரை புரளப் பெருகி வாய்க்கின்றது. காப்பார் ஆர்—இதனைத் தடுக்க வல்லவர்கள் யார்? ஐயோ—தாங்க முடியாத மகிழ்ச்சியின் வெளிப்பாடு. அறையோ—முடிந்தால் முயன்று காண் என்று கூறும் குறிப்பு.

பொது

139. 'தில்லை அம்பலத்துக் கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதன்றே?'

வாய்த்தது நந்தமக்கு ஈதோர்
பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசுபதமருள்
செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரம் தீவளைத்
தான் தில்லை அம்பலத்துக்
கூத்தனுக்கு ஆட்பட்டு இருப்பதன்றே
நந்தம் கூழைமையே.

—திருநாவுக்கரசர்.

வாய்த்தது-கிடைக்காத பொருள் கிடைத்தது. கோத்து-அம்பு தொடுத்து. கூத்தன்—நடராசப் பெருமான். கூழைமை—அகம் குழைந்து நிற்கும் அன்பு.

திருவாரூர்

140. 'கழலடி பூண்டு கொண்டொழிந்தேன் புறம் போயினு லறையோ'

காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன்
மனம் புகுந்தாய் கழலடி
பூண்டுகொண் டொழிந்தேன்
புறம் போயினு லறையோ
ஈண்டுமா டங்கள் நீண்டமா ளிகைமேல்
எழுகொடி வான் இளம்மதி
தீண்டி வந்துலவும்
திருவாரூர் அம்மானே.

—திருநாவுக்கரசர்.

பூண்டு கொண்டொழிந்தேன் – நன்ருகச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு விட்டேன்.

பொது

141. ‘வந்து தானே இன்னருள் செய்தென்னை முற்றவும் தானா ஆனான்’

ஆனான் ஆளுடையான் என்று
  அஃதே கொண்டு உகந்துவந்து
தானே இன்அருள் செய்துஎன்னை
  முற்றவும் தான் ஆனான்
மீன்ஆய் ஆமையும் ஆய்
  நரசிங்கமும் ஆய் குறள்ஆய்
கான்ஆர் ஏனமும் ஆய்
  கற்கி ஆம்இன்னம் கார்வண்ணனே.

—நம்மாழ்வார்.

குறள்—வாமநாவதாரம். கான்—காடு. ஏனம்—பன்றி, வராகம். கற்கி—கல்கி என்னும் அவதாரம்.

சிரீவரமங்கலம்

142. ‘அருள் செய்து அங்கு இருந்தாய் அறியேன் ஒரு கைம்மாறே’

கருளப்புள்கொடி சக்கரப்படை
  வானநாடஎன் கார்முகில்வண்ணா
பொருள்அல்லாத என்னைப்
  பொருளாக்கி அடிமை கொண்டாய்
தெருள்கொள் நான்மறைவல்லவர்
  பலர்வாழ் சிரீவர மங்கலநகர்க்கு
அருள்செய்து அங்குஇருந்தாய்
  அறியேன் ஒரு கைம்மாறே.

—நம்மாழ்வார்.

தெருள்—தெளிவு, ஞானம். கைம்மாறு—எதிர் உதவி, பிரதி உபகாரம்.

பொது

141. ‘ஊனார்உடல் புகுந்தான் உயிர்கலந்தான் உளம்பிரியான்’

நானார் அடி யணைவானொரு
நாய்க்குத்தவி சிட்டிவ்
ஊனார் உடல் புகுந்தான்உயிர்
கலந்தான்உளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர்
வளமீந்தனன் எனக்கே.

—மாணிக்கவாசகர்.

தவிசிட்டு—ஆசனம் அளித்து.

திருப்பெருந்துறை

142. ‘ஈசா உடலிடங் கொண்டாய் யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே’

தந்ததுஉன் தன்னைக் கொண்டதுஎன் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான்இதற்கு இலன்ஓர் கைம்மாறே.

—மாணிக்கவாசகர்.

சதுரர்—திறமையுடையவர்கள். கைம்மாறு—பிரதியுபகாரம், எதிர் உதவி.

திருக்குடந்தை

143. 'என்நான் செய்கேன் யாரே களைகண் என்னை என்செய் கின்றாய் ?'

என்நான் செய்கேன் யாரேகளைகண்
    என்னை என்செய் கின்றாய்
உன்னால் அல்லால் யாவ ராலும்
    ஒன்றும் குறை வேண்டேன்
கன்ஆர் மதிள்சூழ் குடந்தைக்
    கிடந்தாய் அடியேன் அருவாழ்நாள்
செல்நாள் எந்நாள்? அந்நாள்
    உனதாள் பிடித்தே செலக்காணே.

—நம்மாழ்வார்.

களைகண்—துன்பம் நீக்கிப் பாதுகாப்பவர். கன்னார் மதிள்—தொழில் திறம் மிகுந்த மதில். கன்—தொழிற் றிறம், வேலைப்பாடு. குடந்தை—கும்பகோணம். வாழ் நாள் செல் நாள்—ஆயுட் காலம் நடைபெற்றுக்கொண் டிருக்கும் காலம். எந்நாள் அந்நாள் — எதுவரையிலோ அதுவரையிலும். உன தாள்—உன்னுடைய திருவடி களையே. பிடித்தே செல—பற்றிக் கொண்டே யான் பிழைக்கும்படி. காணே—கடைக்கண் பார்வை செலுத்தி அருள்க.

திருக்குடந்தை

144. 'எனதாவி சரிந்து போம்போது இளையாது உனதாள் ஒருங்கப் பிடித்துப் போத இசை நீயே'

களைவாய்துன்பம் களையாதுஒழிவாய்
  களைகண் மற்றுஇலேன்
வளைவாய் நேமிப்படையாய்
  குடந்தைக்கிடந்த மாமாயா
தளராஉடலம் எனதுஆவி
  சரிந்து போம்போது
இளையாது உனதாள்ஒருங்கப்
  பிடித்துப்போத இசைநீயே.

—நம்மாழ்வார்.

களைவாய்—நீக்குவாயாக. ஒழிவாய்—விட்டு விடுவாயாக. தளரா—தளர்ந்து. ஆவி—பிராணன், உயிர். சரிந்து—முடி வடைந்து. போம்போது — இறக்கும் சமயத்தில். இளையாது—நெகிழாமல், சோர்ந்து விடாமல். ஒருங்க—ஒருபடிப்பட. போத—போதர, செல்ல. இசை—சொல் லுக, அருள்க.

திருப்பெருந்துறை

143. 'சிவனே யாரொடு நோகேன் யார்க்கு எடுத்து உரைக்கேன் ஆண்ட நீ அருளிலையானல்?'

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந் துறைஉறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத்து உரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானல்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்று அருள்புரி யாயே.

—மாணிக்கவாசகர்.

பரந்து—வியாபித்து நிற்கின்ற. பற்று—பற்றுக்கோடு, துணை. பொலிவாய்—விளங்குகின்றவனே.

திருவீழிமிழலை

144. 'தென்திசைக்கே உந்திடும்போது மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே'

அந்தமும் ஆதியும் ஆகிநின்றீர்
அண்டம் எண்திசையும்
பந்தமும் வீடும் பரப்புகின்றீர்
பசுஏற்று உகந்தீர்
வெந்தழல் ஓம்பும் மிழலைஉள்ளீர்
என்னைத் தென்திசைக்கே
உந்திடும் போது மறக்கினும்
என்னைக் குறிக்கொண்மினே.

—திருநாவுக்கரசர்.

அண்டம்—பெரிய இவ்வுலகம். பந்தம்—பத்தநிலை. வீடு—முத்திநிலை. உந்திடும்போது — தள்ளிக்கொண்டு செல்லும் சமயத்தில். குறிக் கொண்மின்-நினைவில் வைத்துக்கொண்டு கவனித்துக் கொள்ளுங்கள்.

திருவல்லவாழ்

145. ‘என்நலம்கொள் சுடரை என்று கொல் கண்கள் காண்பதுவே’

நன்னலத் தோழியீர்காள்
நல்லஅந்தணர் வேள்விப்புகை
மைந்நலம் கொண்டுஉயர்
விண்மறைக்கும்தண் திருவல்லவாழ்
கன்னல்அம் கட்டிதன்னைக்
கனியைஇன் அமுதம் தன்னை
என்நலம் கொள்சுடரை
என்றுகொல் கண்கள் காண்பதுவே!

—நம்மாழ்வார்

நன்னலம்—நல்ல அன்பு. மைந்நலம்—கருமை நிற மிகுதி. கன்னல்—கரும்பு.

திருவிண்ணகர்

146. ‘பிரான் வரங்கொள் பாதமல்லால் இல்லை யாவர்க்குமவன் சரணே’

பரம்சுடர் உடம்புஆய் அழுக்குப்
பதித்த உடம்புஆய்க்
கரந்தும் தோன்றியும் நின்றும்
கைதவங்கள் செய்தும் விண்ணோர்
சிரங்களால் வணங்கும் திருவிண்
ணகர் சேர்ந்த பிரான்
வரங்கொள் பாதம் அல்லால்
இல்லை யாவர்க்கும் அவன்சரணே.

—நம்மாழ்வார்

கரந்தும்—ஒளிந்தும், கைதவம்—வஞ்சகம். வரங்கொள்—மேன்மை மிகுந்த.

பொது

145. 'வந்து போங்காலமே உனை என்றுகொல் காண்பதுவே'

மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மேஎனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோம்
கால மேஉனை என்றுகொல் காண்பதே.

—மாணிக்கவாசகர்.

மேலை—மேல் உலகத்தில் உள்ள. கோலமே—அழகே. ஞாலமே—உலகப் பொருள்களாக விளங்குபவனே. காலமே—காலம் என்னும் தத்துவத்தை இயக்குபவனே.

பொது

146. 'பரமாய மூர்த்தி அவனும் நமக்கோர் சரணே'

காலமும் நாள்கள் ஊழி படையாமுன்
ஏகவுருவாகி மூவர் உருவில்
சாலவும்ஆகி மிக்க சமயங்கள் ஆறின்
உருவாகி நின்ற தழலோன்
ஞாலமும் மேலைவிண்ணொடு உலகேழும் உண்டு
குறளாயொர் ஆலின் இலைமேல்
பாலனும் ஆயவற்கோர் பரமாய மூர்த்தி
அவனும் நமக்கோர் சரணே.

—திருநாவுக்கரசர்.

குறளாய்—வாமனனாய். ஆலின் இலைமேல் பாலனு மாயவன்—திருமால். சரண்—புகலிடம், அடைக்கலம்.

பொது

147. 'மாய வினைகளையே அலற்றி இரவும் நண்பகலும் தவிர் கிலன் என்ன குறை எனக்கே?'

குரவை ஆய்ச்சிய ரோடுகோத்ததும்
 குன்றம் ஒன்று ஏந்தியதும்
உரவுநீர்ப் பொய்கை நாகம்காய்ந்ததும்
 உட்பட மற்றும்பல
அரவில் பள்ளிப் பிரான்தன்மாய
 வினைகளையே அலற்றி
இரவும் நண்பகலும் தவிர்கிலன்
 என்ன குறைஎனக்கே?

—நம்மாழ்வார்.

குரவை—குரவைக் கூத்து. உரவு—வலிமை. நாகம் காய்ந்தது—காளியன் என்னும் பாம்பை அடக்கியது.

திருவேங்கடம்

148. 'குல தொல்லடியேன் உன பாதம் கூடிமாறு கூருயே'

உலகம் உண்ட பெருவாயா
 உலப்புஇல் கீர்த்தி அம்மானே
நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி
 நெடியாய் அடியேன் ஆர்உயிரே
திலதம் உலகுக்கு ஆய்நின்ற
 திருவேங் கடத்துஎம் பெருமானே
குலதொல் அடியேன் உனபாதம்
 கூடும் ஆறு கூருயே

—நம்மாழ்வார்.

உலப்பு—முடிவு, அழிவு. அம்மான்—பெரியோன், தலைவன். திலதம்—திலகம், அழகு செய் பொருள்.

திருப்பெருந்துறை

147. 'குணங்கள் தாமில்லா இன்பமே உன்னைக் குறுகினேற்கு இனியென்ன குறையே?'

உணர்ந்தமா முனிவர் உம்பரோடு ஒழிந்தால்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப்பு அறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்கு இனியென்ன குறையே?

—மாணிக்கவாசகர்.

உம்பர்—தேவர்கள். இணங்கிலி—ஒப்பில்லாதவன். குறுகினேற்கு—அடைந்த எனக்கு.

பொது

148. 'தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே'

ஒருவனே போற்றி ஒப்பில்
அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகவென்று என்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே.

—மாணிக்கவாசகர்.

கோமளம்—மென்மை, அழகு. தமியனேன்—துணையின்றித் தனியாக இருப்பவன் ஆகிய நான்.

திருவேங்கடம்

149. ‘திருவேங்கடத்தானே அண்ணலே உன்னடி சேர அடியேற்கு ஆஆ என்னுயே’

வண்ணம் மருள்கொள் அணிமேக
வண்ணு மாய அம்மானே
எண்ணம் புகுந்து தித்திக்கும்
அமுதே இமையோர் அதிபதியே
தெண்ணல் அருவி மணிபொன்முத்து
அலைக்கும் திருவேங் கடத்தானே
அண்ண லேஉன் அடிசேர
அடியேற்கு ஆஆ என்னுயே.

—நம்மாழ்வார்.

அதிபதி—பெருந்தலைவன். அண்ணல்—பெருமை மிக்கவன்.

திருவேங்கடம்

150. ‘புகல் ஒன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே’

அகலகில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா
நிகர்இல் புகழாய் உலகம்மூன்று
உடையாய் என்னை ஆள்வானே
நிகர்இல் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே
புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

—நம்மாழ்வார்.

அகலகில்லேன்—விட்டு நீங்க மாட்டேன். அலர்மேல் மங்கை—தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் திருமகள். புகல்—புகுமிடம், அடைக்கலம்.

பொது

149. 'ஆர்ந்த நின்பாதம் நாயேற்கு அருளிட வேண்டும் போற்றி'

தீர்ந்தஅன் பாய அன்பர்க்கு
அவரினும் அன்ப போற்றி
பேர்ந்தும்என் பொய்மை ஆட்கொண்டு
அருளிடும் பெருமை போற்றி
வார்ந்த நஞ்சுஅயின்று வானோர்க்கு
அமுதம்ஈ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற்கு
அருளிட வேண்டும் போற்றி.

—மாணிக்கவாசகர்.

தீர்ந்த அன்பு—மிக மேலான பேரன்பு. பேர்ந்தும்—இடம் பெயர்ந்து வந்தும்.

பொது

150. 'அரியான்அடி நிழற்கீழதன்றோ என்றன் ஆருயிரே'

தெரியா வெகுளியனாய்த் தக்கன்வேள்வி
தகர்த்து உகந்த
எரியா ரிலங்கிய சூலத்தினன்
இமையாத முக்கண்
பெரியான் பெரியார் பிறப்பறுப்பான்
என்றும் தன்பிறப்பை
அரியான் அடிநிழல் கீழதுஅன்றோ
என்றன் ஆருயிரே.

—திருநாவுக்கரசர்.

பிறப்பை அரியான்—பிறப்பு இல்லாதவன். (அருமை இங்கு இன்மை குறித்து வந்தது.)

பொது

151. 'ஐவரால் குமைதிற்றி என்னைஉன் பாதபங்கயம் நண்ணிலாவகை நலிவான்'

உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி
என்னைஉன் பாத பங்கயம்
நண்ணிலா வகையே நலிவான்
இன்னும் எண்ணுகின்றாய்
எண்ணிலாப் பெருமாயனே இமையோர்கள்
ஏத்தும்உலகம் மூன்றுஉடை
அண்ணலே அமுதே அப்பனே
என்னை ஆள்வானே.

—நம்மாழ்வார்.

ஐவரால்—ஐம்பொறிகளால். குமைதீற்றி—நலிவுபடுத்தி, துன்புறுத்தி. நலிவான்—வருத்தப்படுத்த. பாதபங்கயம்—திருவடித் தாமரை.

பொது

152. 'ஓரைந்திவை பெய்து இராப் பகல் மோதுவித்திட்டு உன்னை நான் அணுகாவகை'

என்னை ஆளும்வன்கோ ஓர்ஐந்து
இவைபெய்து இராப்பகல் மோதுவித்திட்டு
உன்னை நான் அணுகாவகை
செய்து போதி கண்டாய்
கன்னலே அமுதே கார்முகில் வண்ணனே
கடல் ஞாலம் காக்கின்ற
மின்னும் நேமியினாய்
வினையேனுடை வேதியனே.

—நம்மாழ்வார்.

வன்மை—பலாத்காரம், கடினத் தன்மை. போதி—போகின்றாய். நேமி—சக்கரம்.

திருப்புகலூர்

151. ‘ஐவரை அகத்தே வைத்திர் அவர்களே வலியர்’

மெய்யுளே விளக்கை ஏற்றி
வேண்டளவு உயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி
உகக்கின்றேன் உகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்திர்
அவர்களே வலியர் சாலச்
செய்வ தொன்று அறியமாட்டேன்
திருப்புக லூர னீரே.

—திருநாவுக்கரசர்.

ஐவர்—ஐம்பொறிகள்.

திருவாரூர்

152. ‘கூற்றம்போல் ஐவர் வந்து குலைத்திட்டுக் கோகு செய்ய’

மாற்றம் ஒன்று அருள கில்லீர்
மதியிலேன் விதியி லாமை
சிற்றமும் தீர்த்தல் செய்யீர்
சிக்கனவு உடையர் ஆகிக்
கூற்றம்போல் ஐவர் வந்து
குலைத்திட்டுக் கோகு செய்ய
ஆற்றவும் கில்லேன் நாயேன்
ஆரூர்மூ லட்ட னீரே.

—திருநாவுக்கரசர்.

மாற்றம்—சொல், பதில். சிக்கனவு—உறுதிப்பாடு, கொடுமை. கோகு—அலைக்கழிவு.

பொது

153. 'என்னை உய்யக்கொண்டு போகிய அன்றைக்கன்று என்னைத் தன்னாக்கி'

என்றைக்கும் என்னை உய்யக் கொண்டுபோகிய
அன்றைக்கு அன்றுஎன்னைத் தன்னாக்கி என்னால்தன்னை
இன்தமிழ் பாடிய ஈசனை ஆதியாய்
நின்றஎன் சோதியை என்சொல்லி நிற்பனோ!

—நம்மாழ்வார்.

அன்றைக்கு அன்று — நாள்தோறும். தன்னாக்கி — தன்னுடையவனாகச் செய்து. உய்யக் கொண்டு—உய்யும்படி ஆட்கொண்டு.

பொது

154. 'அப்பனை யென்று மறப்ப னென் ஆகியே'

அப்பனை என்று மறப்பன் என்ஆகியே
தப்புதல் இன்றித் தனைக்கவி தான்சொல்லி
ஒப்பிலாத் தீவினையேனை உய்யக் கொண்டு
செப்பமே செய்து திரிகின்ற சீர்கண்டே.

—நம்மாழ்வார்.

அப்பன்—உபகாரகன். செப்பமே செய்து திரிகின்ற—நித்திய சூரிகளோடு போல என்னோடு செல்வதில் பரிமாறிப் பழகி வருகின்ற. சீர் கண்டு—சீலத்தைக் கண்டுணர்ந்த பின்.

திருஇன்னம்பர்

153. 'என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கென்னுளே நிற்கும்'

என்னி லாரும் எனக்கினியார் இல்லை
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே.

—திருநாவுக்கரசர்.

என்னில்—என்னைக் காட்டிலும். உயிர்ப்பாய் – மூச்சுக் காற்றாக. புறம் போந்து புக்கு – வெளியே சென்றும் உள்ளே நுழைந்தும்.

பொது

154. 'தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ?'

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந்து உய்வனோ?

—திருநாவுக்கரசர்.

பனைக்கை—பனைமரம் போலும் தும்பிக்கை. மும்மதம்—கன்னமதம், கபோல மதம், பீஜ மதம். வேழம்—யானை.

பொது

155. ‘நின் பெயரே பிதற்றுமாறு அருள் எனக்கு அந்தோ’

காணுமாறு அருளாய்என்று என்றே கலங்கிக்
 கண்ணநீர் அலமர வினையேன்
பேணுமாறு எல்லாம் பேணி நின்பெயரே
 பிதற்றுமாறு அருள்எனக்கு அந்தோ
காணுமாறு அருளாய் காகுத்தா கண்ணா
 தொண்டனேன் கற்பகக் கனியே
பேணுவார் அமுதே பெரியதண் புனல்சூழ்
 பெருநிலம் எடுத்தபே ராளா.

—நம்மாழ்வார்.

கண்ணநீர் அலமர—கண்களிலே இருந்து நீரானது வெள்ளம்போலப் பெருக. பேணுமாறெல்லாம் பேணி—விரும்பும் வகைகளிலெல்லாம் விரும்பி. காகுத்தா—ககுத்ஸ்த வம்சத்தில் தோன்றிய இராமனே.

பொது

156. ‘இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே நிகழ்வதோ நீயின்னே’

இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே
 நிகழ்வதோ நீ இன்னே ஆனல்
சிறந்தநின் தன்மை அதுஇது உதுஎன்று
 அறிவுஒன்றும் சங்கிப்பன் வினையேன்
கறந்தபால் நெய்யே நெய்யின்இன் சுவையே
 கடலினுள் அமுதமே அமுதில்
பிறந்தஇன் சுவையே சுவையது பயனே
 பின்னைதோள் மணந்தபேர் ஆயா.

—நம்மாழ்வார்.

சங்கிப்பன்—சங்கை கொள்வேன், ஐயப்படுவேன். பின்னை—நப்பின்னைப் பிராட்டி.

திருப்பெருந்துறை

155. 'யானுன்னை உரைக்கு மாறு உணர்த்தே'

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோடு ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின்று உருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர்வு இறந்துநின்று உணர்வதோர் உணர்வே
யான்உன்னை உரைக்குமாறு உணர்த்தே.

—மாணிக்கவாசகர்.

புரை புரை கனிய—சிறு சிறு பகுதியும் உருக்கம் அடையும் படி. திரை பொரா—அலைகள் வீசாத. தெண் கடல்—தெளிந்த கடலைப் போன்றவனே.

திருப்பெருந்துறை

156. 'சிவனே ஒன்றும் நீஅல்லை அன்றி ஒன்றில்லை யாருன்னை அறியகிற்பாரே?'

இன்றெனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தே
நீயலால் பிறிதுமற்று இன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றும்
திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்றுநீ அல்லை அன்றிஒன்று இல்லை
யாருன்னை அறியகிற் பாரே?

—மாணிக்கவாசகர்.

கடிந்து—போக்கி. ஞாயிறு—சூரியன். நினைப்பு அற—நினைப்பும் மறப்பும் இல்லாமல். நினைந்தேன்—எப்பொழுதும் தியானித்துக் கொண்டிருக்கின்றேன். அறியகிற்பார்—அறியக்கூடிய வல்லமையுடையவர்கள்.

பொது

157. ‘மரணம் தோற்றம் வான்பிணி மூப்பென்றிவை மாய்த்தோம்’

சரணம் ஆகிய நான்மறை
  நூல்களும் சாராதே
மரணம் தோற்றம் வான்பிணி
  மூப்புஎன்று இவைமாய்த்தோம்
கரணப் பல்படை பற்றுஅற
  ஓடும் கனல்ஆழி
அரணத் திண்படை ஏந்திய
  ஈசற்கு ஆளாயே.

—நம்மாழ்வார்.

சரணம் ஆகிய—சாதனம் ஆக விளங்குகின்ற. கரணப் பல் படை — உபகரணங்களையுடையதாய், பலவகைப் பட்டுள்ள பகைவர் சேனைகள். அரணத் திண்படை—அடியார்களுக்குப் பாதுகாவலாய், பகைவர்களுக்கு அழிவைச் செய்யும் வலிமையுடையதாகிய சக்கரம்.

திருச்செங்குன்றூர்

158. ‘திருச்சிற்றாறு அங்கு அமர்கின்ற ஆதியான் அல்லால் யாவர் மற்றென் அமர்துணையே?’

எங்கள்செல் சார்வு யாமுடை அமுதம்
  இமையவர் அப்பன் என்அப்பன்
பொங்குமூ வுலகும் படைத்துஅளித்து அழிக்கும்
  பொருந்துமூ உருவன் எம்அருவன்
செங்கயல் உகளும் தேம்பணை புடைசூழ்
  திருச்செங் குன்றூர்த் திருச்சிற்றாறு
அங்குஅமர் கின்ற ஆதியான் அல்லால்
  யாவர்மற்று என்அமர் துணையே?

—நம்மாழ்வார்.

செல் சார்வு—சென்று அடையத்தக்க புகலிடம். கயல் உகளும்—மீன்கள் துள்ளித் திரிகின்ற. தேம்பணை—செழிப்பு மிக்க வயல்கள்.

பொது

157. 'மரணம் பிறப்பென்றிவை இரண்டின் மயக்கறுத்த'

கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்புஎன்று இவைஇரண்டின் மயக்குஅறுத்த
கருணைக் கடலுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

—மாணிக்கவாசகர்.

கரணங்கள்—கருவிகள், அந்தக் கரணங்கள். கறைமிடற்றன்—திருநீலகண்டம் உடையவன்.

சீர்காழி

158. 'கழுமலவர்க்கு ஆள் அன்றி மற்றுமுண்டோ வந்தஊழி அகலிடமே'

பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட
  ஞான்றுநின் பாதமெல்லாம்
நாலஞ்சு புள்ளினம் ஏந்தின
  என்பர் நளிர்மதியம்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித்
  தாடும் கழுமலவர்க்கு
ஆளன்றி மற்றும்உண் டோவந்த
  ஆழி அகலிடமே.

—திருநாவுக்கரசர்.

பார்கொண்டு மூடிக் கடல் கொண்ட ஞான்று—பிரளயம் ஏற்படும் காலத்தில். நளிர் மதியம்—குளிர்ந்த சந்திரன். கால் கொண்ட—தங்கியிருக்கின்ற. நாலஞ்சு புள்ளினம் ஏந்தின—பிரளய வெள்ளம் ஏற்பட்ட பொழுது சீர் காழித் தோணியப்பரின் விமானத்தைப் பறவைகள் ஏந்திநின்று காவல் புரிந்தன என்பது வரலாறு. கழுமலவர்—கழுமலம் என்னும் சீர்காழியில் உள்ள சிவபெருமான். ஆழி அகலிடம்—கடலால் சூழப்பட்ட அகன்ற இவ்வுலகம்.

பொது

159. ‘நாணி நன்னாட்டு அலமந்தால் இரங்கி யொருநாள் காண வாராய்’

காண வாராய் என்றுஎன்று
கண்ணும் வாயும் துவர்ந்து அடியேன்
நாணி நல்நாட்டு அலமந்தால்
இரங்கி ஒருநாள் நீஅந்தோ
காண வாராய் கருநாயிறு
உதிக்கும் கருமா மாணிக்க
நாள்நல் மலைபோல் சுடர்ச்சோதி
முடிசேர் சென்னி அம்மானே.

—நம்மாழ்வார்.

துவர்ந்து—பசையற உலர்ந்து. அலமந்தால்—தடுமாறினால். கருநாயிறு உதிக்கும்—கரிய சூரியன் உதிப்பது போன்ற. நாயிறு—சூரியன்.

பொது

160. ‘கடிசேர் கண்ணிப் பெருமானே என்றென்று ஏங்கி அழுதக்கால்’

முடிசேர் சென்னி அம்மாநின்
மொய்பூந் தாமத் தண்துழாய்க்
கடிசேர் கண்ணிப் பெருமானே
என்றுஎன்று ஏங்கி அழுதக்கால்
படிசேர் மகரக் குழைகளும்
பவள வாயும் நால்தோளும்
துடிசேர் இடையும் அமைந்ததுஓர்
தூநீர் முகில்போல் தோன்றாயே.

—நம்மாழ்வார்.

அம்மா—சர்வேசுவரனே. மொய்—நெருங்கிய. தாமம்—ஒளி. குழை—குண்டலம். துடிசேர்—உடுக்கையைப் போன்ற. சென்னி—தலை.

திருப்பெருந்துறை

159. 'ஆதியே அடியேன் ஆதரித்தழைந்தால் அதெந்துவே என்றருளாயே'

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழல் பணிமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத்து அயனும் மால்அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றுஅரு ளாயே.

—மாணிக்கவாசகர்.

பங்கயம்—தாமரை, சேற்றில் பிறப்பது என்னும் பொருள் உடையது. பங்கம்—சேறு. ஜம்—பிறத்தல். ஆதரித்து—விரும்பி. அதெந்து—அஞ்சாதே.

திருப்பெருந்துறை

160. 'எம்பிரான் என்றென்று அருந்தவா நினைந்தே ஆதரித்தழைத்தால்'

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவாறு எண்ணி ஏசறு நினைந்திட்டு
என்னுடை எம்பிரான் என்றுஎன்று
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றுஅரு ளாயே.

—மாணிக்கவாசகர்.

ஏசறு நினைந்து—சலிப்பு அடையாமல், இடைவிடாமல் தியானித்து. போதராய்—வருவாயாக.

பொது

161. ‘கறந்த பாலுள் நெய்போல் இவற்றுள் எங்கும்’

பிறந்த மாயா பாரதம்
    பொருத மாயா நீஇன்னே
சிறந்த கால்தீநீர் வான்மண்
    பிறவும் ஆய பெருமானே
கறந்த பாலுள் நெய்யேபோல்
    இவற்றுள் எங்கும் கண்டுகொள்
இறந்து நின்ற பெருமாயா
    உன்னை எங்கே காண்கேனே?

—நம்மாழ்வார்.

மாயன்—வியக்கத்தக்க பண்பும் செயல்களும் உடையவன். இன்னே—இவ்வாறு.

திருக்கடித்தானம்

162. ‘எல்லியும் காலையும் தன்னை நினைந்தெழ’

எல்லியும் காலையும் தன்னை நினைந்துஎழ
நல்ல அருள்கள் நமக்கேதந்து அருள்செய்வான்
அல்லி அம்தண் அம்துழாய் முடிஅப்பன்ஊர்
செல்வர்கள் வாழும் திருக்கடித் தானமே.

—நம்மாழ்வார்.

எல்லியும் காலையும்—எல்லாக் காலங்களிலும். அல்லி—இதழ். செல்வர்கள்—இறையருள் அநுபவத்தில் திளைப்பவர்கள்.

பொது

161. 'அடியேன்பால் பிரைசேர் பாலில் நெய்போல'

அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத்து இரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ.

—மாணிக்கவாசகர்.

வேசற்றேன்—களைப்படைந்தேன்.

திருவண்ணுமலை

162. 'முந்திச்சென்று முப்போதும் வணங்குமின்'

முந்திச் சென்று முப்போதும் வணங்குமின்
அந்தி வாயொளி யான்தன் அண்ணுமலை
சிந்தி யாஎழு வார்வினை தீர்த்திடும்
கந்த மாமலர் சூடும் கருத்தனே.

—திருநாவுக்கரசர்.

சிந்தியா—சிந்தித்து. எழுவார்—துயிலினின்று எழுபவர்கள். கந்தம்—வாசனை.

திருக்கடித்தானம்

163. 'நேசத்திஞல் நெஞ்சம் நாடு குடி கொண்டான்'

மாயப் பிரான்என வல்வினை மாய்ந்துஅற
நேசத்தி ஞல்நெஞ்சம் நாடு குடிகொண்டான்
தேசத்து அமரர் திருக்கடித் தானத்தை
வாசப் பொழில்மன்னு கோயில் கொண்டானே.

—நம்மாழ்வார்.

மாயப்பிரான்—வியக்கத்தக்க பண்பு நலங்களுடையவன். வள்ளல் பிரான்—உபகாரகன். குடிகொண்டான்—நித்திய வாசம் செய்கின்ருன்.

திருக்கடித்தானம்

164. 'கோயில் கொண்டான் அதனேடு என் நெஞ்சகம்'

கோயில் கொண்டான் தன்திருக்கடித் தானத்தைக்
கோயில் கொண்டான் அதனேடும் என்நெஞ்சகம்
கோயில் கொள்தெய்வம் எல்லாம் தொழவைகுந்தம்
கோயில் கொண்ட குடக்கூத்த அம்மானே.

—நம்மாழ்வார்.

குடக்கூத்த அம்மான்—குடம் என்னும் கூத்தை ஆடிய கண்ணபிரான் ஆகிய தலைவன்.

திருவிடைமருதூர்

163. ‘நினைத்திட்டூறி நிறைந்தது என் உள்ளமே’

மனத்துள் மாயனை மாசறு சோதியைப்
புனிற்றுப் பிள்ளைவெள் ளைம்மதி சூடியை
எனக்குத் தாயை எம்மான்இடை மருதனை
நினைத்திட் டூறி நிறைந்ததுஎன் உள்ளமே.

—திருநாவுக்கரசர்.

புனிற்றுப் பிள்ளை—இளம்பிள்ளை.

திருக்கடவூர்

164. ‘உள்ளவாறெனை உள்புகுமானையார்’

வெள்ளி மால்வரை போல்வதொர் ஆனையார்
உள்ள வாறுஎனை உள்புகு மானையார்
கொள்ள மாகிய கோயிலுள் ஆனையார்
கள்ள வானைகண் டீர்கட வூரரே.

—திருநாவுக்கரசர்.

ஆனையார்-அயிராவணம் என்னும் யானையை உடையவர்.

பொது

165. ‘திருந்தாத ஓர் ஐவரைத் தேய்ந்துஅற மன்னி’

இருந்தான் கண்டுகொண்டு எனதுஏழை நெஞ்சுஆளும்
திருந்தாத ஓர்ஐவரைத் தேய்ந்துஅற மன்னிப்
பெரும்தாள் களிற்றுக்கு அருள்செய்த பெருமான்
தரும்தான் அருள்தான் இனியான் அறியேனே.

—நம்மாழ்வார்.

பெருந்தாள் களிறு—கஜேந்திரன்.

பொது

166. ‘அவன் என்னுள் இருள்தான்அற வீற்றிருந்தான்’

அருள்தான் இனியான் அறியேன் அவன்என் உள்
இருள்தான் அறவீற்று இருந்தான் இதுஅல்லால்
பொருள்தான் எனில்மூ வுலகும் பொருள் அல்ல
மருள்தான் ஈதோ மாயமயக்கு மயக்கே.

—நம்மாழ்வார்.

இது அல்லால்—அவன் என்உள்ளத்தில் வீற்றிருக்கின்ற இதனைத் தவிர. மருள்தான் ஈதோ—இந்த அநுபவம் வெறும் மயக்க உணர்வு அன்று.

பொது

165. 'இவ்வுடல் உயிராயின இருவினை அறுத்தென்னை'

ஊச லாட்டுமிவ் வுடலுயிர் ஆயின
இருவினை அறுத்து என்னை
ஓசையால் உணர்வார்க்கு உணர் வரியவன்
உணர்வு தந்து ஒளியாக்கிப்
பாச மானவை பற்றறுத்து உயர்ந்ததன்
பரம்பெரும் கருணையால்
ஆசைதீர்த் தடியால் அடிக்கூட்டிய
அற்புதம் அறியேனே.

—மாணிக்கவாசகர்.

ஊசல் ஆட்டும்—பிறந்தும் இறந்தும் மாறி மாறி உழலும் படி செய்கின்ற.

பொது

166. 'அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது'

என்பாலைப் பிறப்பறுத்திங்கு
இமையவர்க்கும் அறியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந்
துறையுறையும் சிவபெருமான்
அன்பால்நீ அகநெகவே
புகுந்தருளி ஆட்கொண்டது
என்பாலே நோக்கியவாறு
அன்றேயெம் பெருமானே.

—மாணிக்கவாசகர்.

தென்பாலை—தெற்குப் பக்கத்தில் உள்ள.

பொது

167. 'சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகுந்தன் நெறியா வயிற்றிற்கொண்டு'

அறியேன் மற்றுஅருள் என்னை ஆளும்பிரானார்
வெறிதே அருள்செய்வர் செய்வார்கட்கு உகந்து
சிறியேன் உடைச் சிந்தையுள் மூவுலகும்தன்
நெறியா வயிற்றில் கொண்டுநின்று ஒழிந்தாரே.

—நம்மாழ்வார்.

வெறிதேஅருள் செய்வர்-காரணமில்லாமலே தம் அருளைப் பொழிவார். செய்வார்கட்கு—தாம் ஆட்கொள்ள விரும்புபவர்கட்கு.

பொது

168. 'என் ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே'

யானும் தானாய் ஒழிந்தானை
　யாதும் எவர்க்கும் முன்னோனைத்
தானும் சிவனும் பிரமனும்
　ஆகிப் பணைத்த தனிமுதலைத்
தேனும் பாலும் கன்னலும்
　அமுதும் ஆகித் தித்தித்துஎன்
ஊனில் உயிரில் உணர்வினில்
　நின்ற ஒன்றை உணர்ந்தேனே.

—நம்மாழ்வார்.

பணைத்த—பலவகைப்பட்டு நடத்துகின்ற.

திருக்காளத்தி

167. 'குடியாக் கோயில் கொண்ட குளிர்வார் சடை எம்குழகா'

கடியேன் காதன்மையால் கழல்போதறி யாதஎன்னுள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்வார்சடை எம்குழகா
முடியால் வானவர்கள் முயங்குந்திருக் காளத்தியாய்
அடியேன் உன்னைஅல்லால் அறியேன்மற்று ஒரு
[வரையே.

—சுந்தரர்.

கடியேன்—கடினமான உருகாத தன்மையை உடைய நான். முயங்கும்—பணிந்து தழுவி வணங்குகின்ற.

பொது

168. 'பெருமான் பிரியாது இருந்துறையும் என்னெஞ்சத்தின்று'

அறையோ அறிவார்க்கு அனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும்மால் கொள்ளும்-இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியாது
இருந்துறையும் என்னெஞ்சத் தின்று.

—மாணிக்கவாசகர்.

மறையோன் – பிரமன். மால் கொள்ளும் – காதல் கொள்ளுகின்ற. இருந்து உறையும்—தங்கியிருந்து வாழ்கின்றார்.

பொது

169. ‘அடியார்தம் தமர்கள் தமர்களாம் சதிரே வாய்க்கத் தமியேற்கே’

தமர்கள் கூட்ட வல்வினையை
நாசம்செய்யும் சதுமூர்த்தி
அமர்கொள் ஆழி சங்குவாள்
வில்தண்டு ஆதிப் பல்படையன்
குமரன் கோல ஐங்கணைவேள்
தாதை கோதில் அடியார்தம்
தமர்கள் தமர்கள் தமர்களாம்
சதிரே வாய்க்கத் தமியேற்கே.

—நம்மாழ்வார்.

தமர்கள் கூட்ட—ஸ்ரீவைணவர்களுடைய கூட்டத்தின். சதுமூர்த்தி—பலவகை வடிவுகளைக் கொள்ளுபவன், மும்மூர்த்திகளுக்கும் தலைவன். தண்டாதி—தண்டு முதலிய. தண்டு—கதை. ஐங்கணைவேள்—மன்மதன். சதிரே வாய்க்க—நிரதிசய புருஷார்த்தமே கிடைப்பதாக.

பொது

170. ‘தொண்டரோமாய் உய்யல் அல்லால் இல்லை கண்டீர் துணையே’

கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார்
சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டது அல்லால்
காதல்மற்று யாதும்இல்லை
எண்திசையும் கீழும் மேலும்
முற்றவும் உண்டபிரான்
தொண்ட ரோமாய் உய்யல் அல்லால்
இல்லைகண்டீர் துணையே.

—நம்மாழ்வார்.

கண்டதோடு பட்டதல்லால்—எதிர்ப்பட்டுச் சந்தித்தாற் பழகுவதைத் தவிர.

திருவாலங்காடு

169. 'ஆண்டா ஆலங்காடா உன் அடியார்க்கடியனாவேனே'

தூண்டா விளக்கின் நற்சோதீ
    தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய்
பூண்டாய் எலும்பைப் புரம்மூன்றும்
    பொடியாச் செற்ற புண்ணியனே
பாண்டுஆழ் வினைகள் அவைதீர்க்கும்
    பரமா பழைய னூர்மேய
ஆண்டா ஆலங் காடாஉன்
    அடியார்க்கு அடியேன் ஆவேனே.

—சுந்தரர்.

பண்டு ஆழ் வினைகள்என்பது எதுகை நோக்கிப் 'பாண் டாழ் வினைகள்' என வந்தது. ஆண்டா—ஆண்டவனே; 'அண்டர்'(தேவனே) என்பதன் நீட்டல் விகாரமுமாம்.

திருநாகைக்காரோணம்

170. 'நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே'

மனைவிதாய் தந்தை மக்கள்
    மற்றுள சுற்றம் என்னும்
வினையுளே விழுந்து அழுந்தி
    வேதனைக்கு இடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை
    மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகில்
    உய்யலாம் நெஞ்சி னீரே.

—திருநாவுக்கரசர்.

வேதனை—மனக்கவலை, துன்பம். கனையும்—ஒலிக்கின்ற.

வடமதுரை

171. 'வண்புகழே சொல்லி உய்யப்போகல் அல்லால் மற்றொன்றில்லை'

இல்லை கண்டீர் இன்பம்
அந்தோ உள்ளது நினையாதே
தொல்லையார்கள் எத்தனைவர்
தோன்றிக் கழிந்தொழிந்தார்
மல்லை மூதூர் வடமதுரைப்
பிறந்தவன் வண்புகழே
சொல்லி உய்யப் போகல்
அல்லால் மற்றொன்றுஇல்லை சுருக்கே.

—நம்மாழ்வார்.

தொல்லையார்கள்—பழங்காலத்தில் இருந்தவர்கள். தோன்றிக் கழிந்தார்—பிறந்து இறந்து போனார்கள். மல்லை—செழிப்புமிக்க. இல்லை சுருக்கே—சுருக்கமாக ஒரு பாடலால் சொல்லுதல் இயலாது.

திருவேங்கடம்

172. 'சென்று தேவர்கள் கை தொழுவார்களே'

இன்றிப் போக இருவினை யும்கெடுத்து
ஒன்றி யாக்கை புகாமைஉய் யக்கொள்வான்
நின்ற வேங்கடம் நீள்நிலத்து உள்ளது
சென்று தேவர்கள் கைதொழு வார்களே.

—நம்மாழ்வார்.

இன்றிப் போக—இல்லாமல் நீங்கும்படி. யாக்கை புகாமை—பிறவாமல்.

திருவாரூர்

171. ‘அந்தண் ஆரூர் தொழுது உய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே’

தந்தையார் போயினர் தாயாரும் போயினர்
　　தாமும் போவார்
கொந்தவேல் கொண்டுஒரு கூற்றத்தார் பார்க்கின்றார்
　　கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால்
　　ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர் தொழுதுஉய்யலாம் மையல்கொண்டு
　　அஞ்சல் நெஞ்சே.

—சம்பந்தர்.

கொந்த—கொத்துவதற்கு. (குந்தம் என்பதன் சிதைவு எனினும்ஆம்.) மையல்—மயக்கம். அஞ்சல்—அஞ்சாதே.

திருநெய்த்தானம்

172. ‘உள்ளத்தால் தொழுவார் உம்பர் வாணரே’

கொள்ளித் தீயெரி வீசிக் கொடியதோர்
கள்ளிக் காட்டிடை ஆடுவர் காண்மினோ
தெள்ளித் தேறித் தெளிந்துநெய்த் தானனை
உள்ளத் தால்தொழு வார்உம்பர் வாணரே.

—திருநாவுக்கரசர்.

கள்ளிக் காடு—கள்ளிச் செடிகள் நிறைந்த சுடுகாடு. உம்பர் வாணர்—தேவலோகத்தில் வசிப்பவர்கள் ஆவார்கள்.

பொது

173. ‘உயரத்து ஒருத்தா உன்னை உள்ளும் என்னுள்ளம் உகந்தே’

கருத்தே உன்னைக்காணக் கருதி என்நெஞ்சத்து
இருத்தாக இருத்தினேன் தேவர்கட்கு எல்லாம்
விருத்தா விளங்கும் சுடர்ச்சோதி உயரத்து
ஒருத்தா உன்னைஉள்ளும் என்உள்ளம் உகந்தே.

—நம்மாழ்வார்.

விருத்தா—மிகவும் உயர்ந்தவனே.

பொது

174. ‘உலகம் அளந்த அடியானை அடைந்து அடியேன் உய்ந்தவாறே’

அடியான் இவன்என்று எனக்குஆர்அருள்செய்யும்
நெடியானை நிறைபுகழ் அம்சிறைப் புள்ளின்
கொடியானைக் குன்றாமல் உலகம் அளந்த
அடியானை அடைந்துஅடி யேன்உய்ந்த வாறே.

—நம்மாழ்வார்.

அடியானை—திருவடிகளை உடையவனை.

திருப்பழையாறை

173. 'வடதளி உடையவரைக் குளிர்ந்துள்கும் என்னுள்ளமே'

முடைய ரைத்தலை முண்டிக்கு மொட்டரைக்
கடைய ரைக்கடிந் தார்கனல் வெண்மழுப்
படைய ரைப்பழை யாறை வடதளி
உடைய ரைக்குளிர்ந் துள்கும்என் உள்ளமே.

—திருநாவுக்கரசர்.

முடையர்—முடை நாற்றம் வீசும் உடம்பை உடைய வர்கள்.

திருவேதிகுடி

174. 'அத்தனை ஆராவமுதினை நாம் அடைந்து ஆடுதுமே'

பத்தர்கள் நாளும்மறவார்
பிறவியை ஒன்று அறுப்பான்
முத்தர்கள் முன்னம்பணிசெய்து
பாரிட முன்னுயர்த்தான்
கொத்தன கொன்றை
மணங்கமழும் திருவேதிகுடி
அத்தனை ஆராவமுதினை
நாம்அடைந்து ஆடுதுமே.

—திருநாவுக்கரசர்.

கொத்தன—கொத்துக்களாக உள்ள.

திருநாவாய்

175. 'அருளா தொழிவாய் அருள் செய்து அடியேனைப் பொருளாக்கி'

அருளாது ஒழிவாய் அருள்செய்து அடியேனைப்
பொருளாக்கி உன்பொன் அடிக்கீழ்ப் புகவைப்பாய்
மருளே இன்றிஉன்னை என் நெஞ்சத்து இருத்தும்
தெருளே தருதென் திருநாவாய் என்தேவே.

—நம்மாழ்வார்.

மருளே இன்றி—மயக்கம் சிறிதும் இல்லாமல். தெருள்—தெளிவு.

திருநாவாய்

176. 'அணுகப் பெறுநாள் என்றெப்போதும் சிந்தை கலங்கி'

அந்தோ அணுகப் பெறும்நாள் என்றுஎப்போதும்
சிந்தை கலங்கித் திருமால் என்றுஅழைப்பன்
கொந்துஆர் மலர்ச்சோலை கள்சூழ் திருநாவாய்
வந்தே உறைகின்ற எம்மா மணிவண்ணா.

—நம்மாழ்வார்.

அந்தோ—சொல்லத் தொடங்கிச் சொல்ல மாட்டாமையினால் வெளிப்படும் உணர்ச்சிச் சொல்.

பொது

175. ‘எண்தோள் முக்கண் எம்மானே நன்றே செய்வாய் பிழை செய்வாய்’

அன்றே என்றன் ஆவியும்
 உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
 ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
 எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
 நானோ இதற்கு நாயகமே?

—மாணிக்கவாசகர்.

ஆவி—உயிர். இடையூறு—துன்பம்.

பொது

176. ‘எம்மானே உன்னருள் பெறுநாள் என்றுஎன்றே வருந்துவனே’

யானேதும் பிறப்பஞ்சேன்
 இறப்பதனுக்கு என்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
 மண்ஆள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க் கொன்றைச்
 சிவனேயெம் பெருமானெம்
மானேஉன் அருள்பெறுநாள்
 என்றுஎன்றே வருந்துவனே.

—மாணிக்கவாசகர்.

மண்ணாள்வான்—அரசன்.

திருக்கண்ணபுரம்

177. ‘மாலை நண்ணித் தொழுது எழுமினோ வினைகெட’

மாலை நண்ணித்தொழுது எழுமினோ வினைகெட
காலை மாலை கமலமலர் இட்டுநீர்
வேலை மோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து
ஆலின்மேல் ஆல்அமர்ந்தான் அடிஇணைகளே.

—நம்மாழ்வார்.

மாலை நண்ணி—திருமாலை அடைந்து. வேலை—கடல்.

திருக்கண்ணபுரம்

178. ‘விண்டு வாடா மலரிட்டு நீர் இறைஞ்சுமின்’

தொண்டர் நும்தம்துயர் போகநீர் ஏகமாய்
விண்டு வாடாமலர் இட்டுநீர் இறைஞ்சுமின்
வண்டு பாடும்பொழில் சூழ்திருக் கண்ணபுரத்து
அண்ட வாணன் அமரர் பெருமானையே.

—நம்மாழ்வார்.

ஏகமாய்—ஒருமைப்பட்ட மனத்துடன்.

வேளூர் (வைத்தீசுவரன் கோயில்)

177. ‘சிவன் என்று மெள்ள உள்க வினை கெடும்’

உள்ளம் உள்கி உகந்து சிவன்என்று
மெள்ள உள்க வினைகெடும் மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே.

—திருநாவுக்கரசர்.

உள்க—நினைத்து உருக. புள்ளினார் பணி—சம்பாதி, சடாயு என்னும் பறவைகள் வழிபட்ட.

திருவொற்றியூர்

178. ‘போது தாழ்ந்து புதுமலர் கொண்டுநீர்’

போது தாழ்ந்து புதுமலர் கொண்டுநீர்
மாது தாழ்சடை வைத்தம ணாளனார்
ஓது வேதிய னார்திரு வொற்றியூர்
பாதம் ஏத்தப் பறையும்நம் பாவமே.

—திருநாவுக்கரசர்.

மாது—கங்கையினை. பறையும்—அகலும்.

திருக்கண்ணபுரம்

179. 'ஆதியானை அடைந்தார்க்கு அல்லல் இல்லையே'

பாதம் நாளும் பணியத் தணியும் பிணி
ஏதம் சாரா எனக்கேல் இனி என்குறை
வேத நாவர் விரும்பும் திருக்கண்ண புரத்து
ஆதி யானை அடைந்தார்க்கு அல்லல் இல்லையே.

—நம்மாழ்வார்.

ஏதம்—துன்பங்கள். ஆதியானை—எல்லாவற்றுக்கும் மூலமும் முதலுமாக விளங்குபவன்.

திருமோகூர்

180. 'யாமொரு புகலிடம் இலம் என்றென்றும் அலற்றி'

அன்று யாம்ஒரு புகலிடம் இலம் என்று அலற்றி
நின்று நான்முகன் அரனொடு தேவர்கள் நாட
வென்று இம்மூவுலகு அளித்துஉழல் வான்திருமோகூர்
நன்று நாம்இனி நணுகுதும் நமதுஇடர் கெடவே.

—நம்மாழ்வார்.

நணுகுதும்—அடைவோம். இடர்—துன்பம்.

திருக்கச்சியம்பதி

179. ‘ஐயனைத் தொழுவார்க்கில்லை அல்லலே’

பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு ஏந்திய
கையனைக் கச்சி யேகம்பம் மேவிய
ஐயனைத் தொழு வார்க்குஇல்லை அல்லலே.

—திருநாவுக்கரசர்.

ஐயனை—கடவுளை.

திருவண்ணாமலை

180. ‘தேடிச் சென்று திருந்தடியேத்துமின்’

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம்நமது உள்ள வினைகளே.

—திருநாவுக்கரசர்.

திருந்தடி—அழகிய திருவடிகள்.

திருமோகூர்

181. 'ஆத்தன் தாமரைஅடி யன்றி மற்றிலம் அரணே'

கூத்தன் கோவலன் குதற்றுவல் அசுரர்கள் கூற்றம்
ஏத்தும் நங்கட்கும் அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன்
வாய்த்த தண்பணை வளவயல் சூழ்திரு மோகூர்
ஆத்தன் தாமரை அடிஅன்றி மற்றுஇலம் அரணே.

—நம்மாழ்வார்.

கூத்தன்—நடப்பதே ஒரு கூத்துப் போல விளங்குபவன். கோவலன்—தன்னைத் தாழவிட்டு அன்பர்களைப் பெருமைப்படுத்திக் காப்பவன். குதற்று – மிடுக்கான கொடிய செயல்களைச் செய்கின்ற. ஆத்தன்—விரும்பி அடையத் தக்கவன்.

திருவனந்தபுரம்

182. 'தடமுடை வயல்அனந்த புரநகர் புகுதும் இன்றே'

கெடும்இடர் ஆய எல்லாம்
கேசவா என்ன நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின்
தமர்களும் குறுக கில்லார்
விடம்உடை அரவில் பள்ளி
விரும்பினான் சுரும்பு அலற்றும்
தடம்உடை வயல்அ னந்த
புரநகர் புகுதும் இன்றே.

—நம்மாழ்வார்.

கெடும்—நீங்கும். இடர்—துன்பங்கள். குறுககில்லார்—நெருங்க மாட்டார்கள். சுரும்பு அலற்றும்—வண்டுகள் ஒலிக்கின்ற. தடம் உடை—பரந்து விரிந்த, நீர் நிறைந்த.

பொது

181. ‘பரமாய மூர்த்தியவனும் நமக் கொர் சரணே’

காலமும் நாள்கள் ஊழி படையாமுன்
ஏகவுரு வாகி மூவருருவில்
சாலவுமாகி மிக்க சமயங்கள் ஆறின்
உருவாகி நின்ற தழலோன்
ஞாலமும் மேலைவிண்ணொடு உலகேழும் உண்டு
குறளாயொர் ஆலின் இலைமேல்
பாலனும் ஆயவற்கொர் பரமாய மூர்த்தி
அவனும் நமக்கொர் சரணே.

—திருநாவுக்கரசர்.

மூவர் உரு—பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மும்மூர்த்திகள்.

பொது

182. ‘திருப்புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே’

பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமால் உற்றுப் பின்னைநீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவம்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமால் அறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே.

—மாணிக்கவாசகர்.

அழுங்கி—கவலைப்பட்டு. புயங்கன்—பாம்புகளை அணிந்தவன்.

திருவனந்தபுரம்

183. 'வாமனன் அடிக்கு என்று ஏத்த மாய்ந்திடும் வினைகள் தாமே'

நாம்உமக்கு அறியச் சொன்ன
 நாள்களும் நணிய ஆன
சேமம்நன்கு உடைத்துக் கண்டீர்
 செறிபொழில் அனந்தபுரம்
தூமம் நல்விரை மலர்கள்
 துவள்அற ஆய்ந்து கொண்டு
வாமனன் அடிக்குஎன்று ஏத்த
 மாய்ந்துஅறும் வினைகள் தாமே.

—நம்மாழ்வார்.

நணிய ஆன—மிகவும் நெருங்கி விட்டன. சேமம்—பாது காவல். வாமனன்—தன்னுடைய பொருளைப் பெறுதற் குத் தான் இரப்பாளனாக எளிவந்தருள்பவன்.

பொது

184. 'பிணி ஒன்றும் சாரா பிறவி கெடுத்தாளும்'

பணிநெஞ்சே நாளும் பரம பரம்பரனை
பிணிஒன்றும் சாரா பிறவி கெடுத்துஆளும்
மணிநின்ற சோதி மதுசூதன் என்அம்மான்
அணிநின்ற செம்பொன் அடல்ஆழி யானே.

—நம்மாழ்வார்.

பரம பரம்பரனை—மேலானவர்கட்கு மேலானவனாய், அவர்களை இயக்கி நிற்பவனை.

திருநாகைக்காரோணம்

183. 'இறைவனை நாளும்ஏத்த இடும்பை போய் இன்பம்ஆமே'

நிறைபுனல் அணிந்த சென்னி
  நீள்நிலா அரவம் சூடி
மறையொலி பாடி ஆடல்
  மயானத்து மகிழ்ந்த மைந்தன்
கறைமலி கடல்சூழ் நாகைக்
  காரோணம் கோயில் கொண்ட
இறைவனை நாளும் ஏத்த
  இடும்பைபோய் இன்பம் ஆமே.

—திருநாவுக்கரசர்.

சென்னி—தலையில். அரவம்—பாம்பு. மயானம்—சுடுகாடு. இடும்பை—துன்பம்.

திருக்கச்சியம்பதி

184. 'நோய் ஒன்றும் வாராமே காக்கும் நாயகன்'

நோக்கு வாய்செவி கண்உடல் ஆகிவந்து
ஆக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்
நோக்கு வான்நமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சிஏ கம்பனே.

—திருநாவுக்கரசர்.

ஐவர்—ஐம்பொறிகள். கொடுமை கருதி அஃறிணைப் பொருள்கள் உயர்திணையாகக் கூறப்பட்டன.

பொது

185. ‘வாழி என்நெஞ்சே மறவாது வாழ் கண்டாய்’

ஆழியான் ஆழி அமரர்க்கும் அப்பாலான்
ஊழியான் ஊழி படைத்தான் நிரைமேய்த்தான்
பாழிஅம் தோளால் வரைஎடுத்தான் பாதங்கள்
வாழிஎன் நெஞ்சே மறவாது வாழ்கண்டாய்.

—நம்மாழ்வார்.

பாழி—வலிமை. வரை—கோவர்த்தன மலை. நிரை—பசுக் கூட்டங்கள்.

பொது

186. ‘கமல மலர்ப்பாதம் காண்டலுமே விண்டே ஒழிந்த வினையாயின’

கண்டேன் கமல மலர்ப்பாதம் காண்டலுமே
விண்டே ஒழிந்த வினையா யினஎல்லாம்
தொண்டே செய்துஎன்றும் தொழுது வழியொழுகப்
பண்டே பரமன் பணித்த பணிவகையே.

—நம்மாழ்வார்.

விண்டே ஒழிந்த—நீங்கியே போய்விட்டன.

திருச்சோற்றுத்துறை

185. 'வாதியாய்ப் பணிசெய் மட நெஞ்சமே'

ஆதி யான்அண்ட வானவர்க்கு அருள்நல்கும்
நீதி யான்என்றும் நின்மல னேயென்றும்
சோதி யான்என்றும் சோற்றுத் துறையர்க்கே
வாதி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே.

—திருநாவுக்கரசர்.

அண்டவானவர்—தேவர்கள். வாதியாய்—ஈடுபாடு மிகுந்து.

பொது

186. 'பிரான் என் பிறவிக் கருவேர் அறுத்தபின் யாவரையும் கண்டதில்லை'

திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையும் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவும்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

—மாணிக்கவாசகர்.

மருவும்—பொருந்தி யிருக்கின்ற.

திருவாட்டாறு

187. ‘பழவினைகள் பற்றறுத்து நாட்டாரோடியல் ஒழிந்து’

வாட்டாற்றான் அடிவணங்கி
மாஞாலப் பிறப்புஅறுப்பான்
கேட்டாயே மடநெஞ்சே
கேசவன் எம்பெருமானைப்
பாட்டுஆய பலபாடிப்
பழவினைகள் பற்றுஅறுத்து
நாட்டாரோடு இயல்வுஒழிந்து
நாரணனை நண்ணினமே.

—நம்மாழ்வார்.

இயல்வு ஒழிந்து—பழகுதலைக் கைவிட்டு.

திருவாட்டாறு

188. ‘நன்னெஞ்சே நம்பெருமான் நமக்கருள்தான் செய்வானே’

என்நெஞ்சத்து உள்இருந்து இங்கு
இரும்தமிழ்நூல் இவைமொழிந்து
வன்நெஞ்சத்து இரணியனை
மார்வுஇடந்த வாட்டாற்றான்
மன்அஞ்சப் பாரதத்துப்
பாண்டவர்க்காப் படைதொட்டான்
நன்னெஞ்சே நம்பெருமான்
நமக்குஅருள்தான் செய்வானே.

—நம்மாழ்வார்.

மன் அஞ்ச-மன்னர்கள் எல்லாம் அச்சம் கொள்ளும்படி.

பொது

187. ' நாட்டார் நகை செய்ய நாம் மேலை வீடெய்த '

கேட்டாயோ தோழி
    கிறிசெய்த வாறுஒருவன்
தீட்டார் மதில்புடைசூழ்
    தென்னன் பெருந்துறையான்
காட்டா தனஎல்லாம்
    காட்டிச் சிவம்காட்டித்
தாட்டா மரைகாட்டித்
    தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய
    நாம்மேலை வீடெய்த
ஆட்டான் கொண்டுஆண்டவா
    பாடுதும்காண் அம்மானாய்.

—மாணிக்கவாசகர்.

தீட்டுஆர் மதில்—சிற்பங்கள் தீட்டப் பெற்றுள்ள மதில்கள். ஆட்டான் கொண்டு—அடிமையாக ஏற்று.

திருவையாறு

188. ' பொருந்தி நின்று உன்னு நெஞ்சே பொய்வினை மாயும் அன்றே '

குருந்தமது ஒசித்த மாலும்
    குலமலர் மேவி னானும்
திருந்து நற்றிரு அடியும்
    திருமுடி காண மாட்டார்
அருந்தவ முனிவர் ஏத்தும்
    திருவையாறு அமர்ந்த தேனைப்
பொருந்தி நின்றுஉன்னு நெஞ்சே
    பொய்வினை மாயும் அன்றே.

—திருநாவுக்கரசர்.

குருந்தமது ஒசித்த – குருந்த மரங்களை ஒடியும்படி செய்த. குலமலர்—தாமரைமலர்.

திருவாட்டாறு

189. 'இகழ்வின்றி என்நெஞ்சத்து எப்பொழுதும் பிரியானே'

திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும்
திகழ்கின்ற திருமாலார் சேர்விடம்தண் வாட்டாறு
புகழ்நின்ற புள்ளூர்தி போர்அரக்கர் குலம்கெடுத்தான்
இகழ்வுஇன்றி என்நெஞ்சத்து எப்பொழுதும்
[பிரியானே.

—நம்மாழ்வார்.

திருமாலார்—திருமகளோடு கூடிய அதனால் சிறப்புப் பெற்றவர்.

திருமாலிருஞ்சோலை

190. 'மாய ஆக்கைஇதனுள் புக்கு என்னை முற்றும் தானேயாய்'

என்னை முற்றும் உயிர்உண்டுஎன்
மாய ஆக்கை இதனுள்புக்கு
என்னை முற்றும் தானேஆய்
நின்ற மாய அம்மான்சேர்
தென்னன் திருமா லிருஞ்சோலைத்
திசைகை கூப்பிச் சேர்ந்தயான்
இன்னும் போவே னேகொலோ
என்கொல் அம்மான் திருஅருளே.

—நம்மாழ்வார்.

தென்னன்—பாண்டியனுடைய, தெற்கிலே உள்ள நல்ல.

பொது

189. 'ஊனுருடல் புகுந்தான் உயிர் கலந்தான் உளம் பிரியான்'

நானார் அடி அணைவான்ஒரு
நாய்க்குத்தவிசு இட்டிவ்
ஊனார் உடல் புகுந்தான்உயிர்
கலந்தான்உளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர்
வளம்ஈந்தனன் எனக்கே.

—மாணிக்கவாசகர்.

நாய்க்கு—நாய் போன்ற எனக்கு. தவிசு இட்டு—ஆசனம் கொடுத்து. வளம்—செல்வம், சிறந்த பேறு.

பொது

190. 'உடலும் எனதுயிரும் புகுந்தொழியா வண்ணம் நிறைந்தான்'

கடலின்திரை யதுபோல்வரு
கலக்கம்மலம் அறுத்தென்
உடலும்என துயிரும்புகுந்து
ஒழியாவண்ணம் நிறைந்தான்
சுடரும்சுடர் மதிசூடிய
திருப்பெருந்துறை உறையும்
படரும்சடை மகுடத்து எங்கள்
பரன்தான் செய்த படிறே.

—மாணிக்கவாசகர்.

ஒழியாவண்ணம்—நீக்கம் இல்லாதபடி. படிறு—வஞ்சகம், வியக்கத்தகு செயல்.

திருப்பேர்நகர்

191. 'ஏழுலக குண்டும் ஆரா வயிற்றானை யடங்கப் பிடித்தேனே'

பேரே உறைகின்ற பிரான் இன்றுவந்து
பேரேன் என்றுஎன் நெஞ்சுநிறையப் புகுந்தான்
கார்ஏழ் கடல்ஏழ் மலைஏழ் உலகுஉண்டும்
ஆரா வயிற்றானை அடங்கப் பிடித்தேனே.

—நம்மாழ்வார்.

பேரே உறைகின்ற—திருப்பேர் என்னும் தலத்திலே வந்து நித்திய வாசம் செய்கின்ற. பேரேன்—பெயர்ந்து நீங்கிச் செல்லமாட்டேன்.

திருப்பேர்நகர்

192. 'ஊனே குரம்பை இதனுள் புகுந்து தானே தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்'

வானே தருவான் எனக்காய் என்னோடுஒட்டி
ஊன்ஏய் குரம்பை இதனுள் புகுந்துஇன்று
தானே தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்
தேன்ஏய் பொழில்தென் திருப்பேர் நகரானே.

—நம்மாழ்வார்.

குரம்பை—குடிசை.

பொது

191. 'சிவபெருமானே எய்ப்பிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்'

ஒப்புஉனக்கு இல்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா ஈறிலி யேற்கு
விழுமியது அளித்ததோர் அன்பே
செப்புதற்கு அரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே.

—மாணிக்கவாசகர்.

ஈறு இலியேற்கு—முடிவு இல்லாத எனக்கு. விழுமியது—வீடுபேறு, திருவருள். எய்ப்பிடத்து—துன்பம் மிக்க நிலையில்.

பொது

192. 'முன்புள்ளவற்றை முழுதழிய உள்புகுந்த அன்பின் குலாத்தில்லை யாண்டான்'

என்புள் உருக்கி இருவினையை ஈடுஅழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

—மாணிக்கவாசகர்.

ஈடு அழித்து—வலிமை கெடுத்து. துவந்துவங்கள்—பற்றுக்கள்.

திருப்பேர் நகர்

193. 'பணி செய்துன் பாதம் பெற்றேன் ஈதே இன்னம் வேண்டுவது'

உற்றேன் உகந்து பணிசெய்து உன்பாதம்
பெற்றேன் ஈதேஇன்னம் வேண்டுவது எந்தாய்
கற்ருர் மறைவாணர்கள் வாழ்திருப் பேராற்கு
அற்ருர் அடியார் தமக்குஅல்லல் நில்லாவே.

—நம்மாழ்வார்.

அற்ருர் அடியார்—அவனுக்கே தீர்ந்து அற்ருர் ஆன அடியார், அற்றவர்களுக்கு அடியார். அல்லல்—துன்பம்.

பொது

194. 'என் தலைமிசையாய் வந்திட்டு இனிநான் போகல் ஒட்டேன்'

முனியே நான்முகனே முக்கண்
அப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்
கருமாணிக்கமே என்கள்வா
தனியேன் ஆர்உயிரே என்
தலைமிசையாய் வந்திட்டு
இனிநான் போகல்ஒட்டேன் ஒன்றும்
மாயம்செய்யேல் என்னையே.

—நம்மாழ்வார்.

போகலொட்டேன்—போகவிடமாட்டேன். மாயம் செய்யேல்—ஏமாற்ருதே.

அவிநாசி

193. 'உற்றாய் என்று உன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்'

எற்றான் மறக்கேன் எழுமைக்கும்
எம்பெரு மானையே
உற்றாய் என்றுஉன்னையே உள்குகின்றேன்
உணர்ந்து உள்ளத்தால்
புற்றாடு அரவா புக்கொளி
யூர்அவி நாசியே
பற்றாக வாழ்வேன்
பசுபதியே பரமேட்டியே.

—சுந்தரர்.

எற்றால்—எதனால். மறக்கேன்—மறப்பேன். பற்றாக—துணையாக. பசுபதி—உயிர்களுக்குத் தலைவன். பரமேட்டி—மிகவும் உயர்ந்தோன்.

பொது

194. 'புலாலுடம்பே புகுந்து நின்ற கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்'

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
நலஞ்சுடரே நால்வேதத்து அப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்குஅரிய சூழலாய் இதுஉன் தன்மை
நிற்பதொத்து நிலைஇலா நெஞ்சம் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யான்உன்னை விடுவேன் அல்லேன்
கனகமா மணிநிறத்துஎம் கடவு ளானே.

—திருநாவுக்கரசர்.

நிலாவாத—நிலையில்லாத. விடுவேன் அல்லேன்—விடமாட்டேன். கனகம்—பொன்.

பொது

195. 'நீ புறம் போக்கலுற்ருல் பின்னையான் ஆரைக் கொண்டு எத்தை அந்தோ எனதுஎன்பது'

போர விட்டிட்டு என்னைநீ
புறம் போக்கலுற்ருல் பின்னையான்
ஆரைக் கொண்டு எத்தை
அந்தோ எனதுஎன்பதுஎன் யான்என்பதுஎன்
தீர இரும்புஉண்ட நீர்
அதுபோல என்ஆர் உயிரை
ஆரப் பருக எனக்கு
ஆரா அமுது ஆனுயே.

—நம்மாழ்வார்.

போர விட்டிட்டு—உன்னிடம் இருந்து என்னைப் பிரித்து ஒதுக்கி வைத்து. புறம் போக்கலுற்ருல் — வெளியே அனுப்ப முற்பட்டால்.

பொது

196. 'என் நெஞ்சினுரைக் கண்டால் என்னைச் சொல்லி அவரிடை நீர்இன்னம் செல்லீரோ'

அன்னம் செல்வீரும் வண்டானம் செல்வீரும்
தொழுது இரந்தேன்
முன்னம் செல்வீர்கள் மறவேல்மினே
கண்ணன் வைகுந்தனேடு
என்நெஞ்சினுரைக் கண்டால்
என்னைச் சொல்லி அவரிடைநீர்
இன்னம் செல்லீரோ இதுவோ தகவு
என்று இசைமின்களே.

—நம்மாழ்வார்.

வண்டானம்—நாரையில் ஒருவகை. இதுவோ தகவு—இது நியாயந்தானு? இசைமின்கள்—சொல்லுங்கள்.

பொது

195. ‘என்னை அப்பா அஞ்சல் என்பவரின்றி நின்றெய்த் தலைந்தேன்’

என்னைஅப் பாஅஞ்சல் என்பவர்
　இன்றிநின்று எய்த்தலைந்தேன்
மின்னைஒப் பாய்விட்டிடுதி கண்டாய்உவ
　மிக்கின் மெய்யே
உன்னைஒப் பாய்மன்னும் உத்தரகோச
　மங்கைக் கரசே
அன்னைஒப் பாய்எனக்கு அத்தன்ஒப்பாய்
　என்அரும் பொருளே.

—மாணிக்கவாசகர்.

விட்டிடுதி—கைவிட்டு விடாதே.

திருவாரூர்

196. ‘பாடுமாறும் பணிந்தேத்துமாறும் கூடி ஊடுமாறும் இவை உணர்த்த’

கூடும் அன்னப் பெடைகாள் குயில் வண்டுகாள்
ஆடும்அம் பொன்கழல் அடிகள் ஆரூரரைப்
பாடு மாறும் பணிந்தேத்து மாறும்கூடி
ஊடு மாறும்இவை உணர்த்தவல் லீர்களே.

—சுந்தரர்.

உணர்த்த வல்லீர்களே—உங்களால் எனக்கு உணர்த்த முடியுமா?

பொது

197. ‘மற்றெப்பால் எவர்க்கும் எண்ணுமிடத்ததுவோ எம்பிரானது எழில் நிறமே’

கண்ணும் செந்தாமரை கையும்
அவை அடியோ அவையே
வண்ணம் கரியது ஓர்மால்
வரைபோன்று மதிவிகற்பால்
விண்ணும் கடந்தும் உம்பர் அப்பால்
மிக்குமற்று எப்பால் எவர்க்கும்
எண்ணும் இடத்ததுவோ
எம்பிரானது எழில்நிறமே.

—நம்மாழ்வார்.

மதிவிகற்பால்—ஞானத்தின் மிகுதியால். எப்பால் எவர்க்கும் — எவ்விடத்தும் உள்ள நித்திய சூரிகள் எல்லார்க்கும். எண்ணும் இடத்ததுவோ—அளவிடும் படியான தன்மையுடையதோ?

பொது

198. ‘ஆணிப் பொன்னே அடியேன்அடியாவி அடைக்கலமே’

மாணிக்கம் கொண்டு குரங்கு
எறிவு ஒத்துஇரு ளோடுமுட்டி
ஆணிப் பொன் அன்ன சுடர்படும்
மாலே உலகுஅளந்த
மாணிக்க மேஎன் மரகதமே
மற்றுஒப் பாரைஇல்லா
ஆணிப் பொன்னே அடியேன்
அடிஆவி அடைக்கலமே.

—நம்மாழ்வார்.

குரங்கு எறிவு ஒத்து—குரங்கின் மீது எறிவது போல, குரங்கானது எறிவதைப் போன்று. எறிதல்—வீசி அடித்தல்.

பொது

197. 'அவனருளே கண்ணாகக் காணில்அல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இறைவன்'

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
  மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருவ னல்லன்
  ஓரூரன் அல்லன் ஓருவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
  அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
  இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.

—திருநாவுக்கரசர்.

உவமன்—உவமை, உவமைப் பொருள்.

பொது

198. 'அரும்பெருமான் உடையாய் அடியேன் உன் அடைக் கலமே'

பெரும்பெருமான் என்பிறவியை
  வேர்அறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப்பெருமான்
  என்மனத்தின் உள்ளே
வரும்பெருமான் மலரோன் நெடுமால்
  அறியாமல் நின்ற
அரும்பெருமான் உடையாய்
  அடியேன்உன் அடைக்கலமே.

—மாணிக்கவாசகர்.

பிச்சு—பித்து, அளவு கடந்த அன்பு.

பொது

199. ‘ஊர் ஆ மிலேக்கக் குருட்டு ஆ மிலேக்கும் என்னும்’

மைப்படி மேனியும் செந்தா
மரைக்கண்ணும் வைதிகரே
மெய்ப்படி யால்உன் திருவடி
சூடும் தகைமையினர்
எப்படி ஊர்ஆமிலேக்கக் குருட்டுஆ
மிலேக்கும் என்னும்
அப்படி யானும் சொன்னேன்
அடியேன்மற்று யாதுஎன்பனே.

—நம்மாழ்வார்.

வைதிகர்—வேத நெறியில் ஒழுகுபவர். மெய்ப்படியால்—உண்மையான முறையில், மிலேக்கும்—கனேக்கும், மற்று யாது என்பேன்—வேறு என்ன சொல்வேன்?

பொது

200. ‘பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ’

பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தைநீ
மற்றையார் ஆவாரும் நீபேசில்-எற்றேயோ
மாயமா மாயவளை மாயமுலே வாய்வைத்த
நீஅம்மா காட்டும் நெறி.

—நம்மாழ்வார்.

எற்றேயோ—எப்படிப்பட்ட தன்மை யுடையதோ? மாய—இறக்கும்படி. மாமாயவளை—மிகவும் கொடிய வஞ்சகியான பூதகியை.

பொது

199. 'ஊர் ஆ மிலேக்கக் குருட்டு ஆ மிலேத்துஇங்குன்'

தாராய் உடையாய் அடியேற்கு
    உன்தாள் இணையன்பு
பேரா உலகம்புக்கார் அடியார்
    புறமே போந்தேன்யான்
ஊர்ஆ மிலேக்கக் குருட்டுஆமிலேத்து
    இங்கு உன்தாளிணே அன்புக்கு
ஆராய் அடியேன் அயலே
    மயல் கொண்டு அழுகேனே.

—மாணிக்கவாசகர்.

தாராய்—தருவாயாக. பேரா—மீண்டு வராத. மிலேத்தல்—கனேத்தல், குரல் ஒலி காட்டுதல்.

பொது

200. 'அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ'

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
    அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
    ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
    துணேயாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
    இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

—திருநாவுக்கரசர்.

துய்ப்பன—அநுபவிக்கப்படும் பொருள்கள். உய்ப்பன—செலுத்தப்படும் பொருள்கள். ஏறு ஊர்ந்த செல்வன்—விடைமீது ஏறி வரும் பெருமான்.

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

எண்கள் செய்யுள் எண்களைக் குறிக்கும்

ஆழ்வார்கள்

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

எண்கள் செய்யுள் எண்களைக் குறிக்கும்

நாயன்மார்கள்